# பொன்னி

மலர் 8 1-8-54 இதழ் 8

691

விலை அணா 4



691
3-54
211, N47Po
N54. 8. 8
197823

# வணக்கம்

# பொன்னி

OFFICE ... 16 AUG 1954 ... MADRAS

15–8–54 இதழ் முதல் ஒவ்வொரு இதழிலும் வழக்கமான இலக்கிய, சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதை, மருத்துவப் பகுதிகளுடன் சில குறிப்பிடத்தக்க மாறுதல்கள் நிகழ இருக்கின்றன. இம் மாறுதல்களைப் 'பொன்னி' அன்பர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

திரு. ந. இராமலிங்கம் அவர்கள் எழுதும் ஒளி மாடம் தொடரோவியம் 15–8–54 இதழில் தொடங்குகிறது. அன்பர்கள் இதைத் தனியே பைண்டு செய்து வைத்துக் கொள்ளும் வண்ணம் தனியே பக்க எண்ணிடப்பட்டு, உயர்ந்த தாளில் அச்சிடப்படுகிறது.

தமிழ் நாட்டிலுள்ள பலரும் இலங்கைச் செய்திகளை நன்கறிய இலங்கை அன்பரின் இலங்கைக் கடிதம் வாய்ப்பளிக்கும்.

நாட்டின் அன்றாடப் பிரச்னை எதைப்பற்றியும் அஞ்சல் அட்டையில் ஒரு பக்கத்துக்கு மேற்படாது அன்பர்களால் எழுதியனுப்பப்படும் கடிதங்களில் சிறந்தனவாகக் கருதப் படும் கடிதங்கள் ஒவ்வொரு இதழிலும் பொது மேடையில் இடம் பெறும்.

உங்கட்கு ஏற்படும் இலக்கிய சம்பந்தமான ஐயப்பாடு கட்கு நக்கீரனாரும், பிறவற்றிற்கு வணங்காமுடியாரும் விளக்கம் தருவார்கள். ஒருவர் ஒரு கேள்வியே கேட்கலாம். கேள்விகள் அஞ்சல் அட்டையில்தான் எழுதியனுப்ப வேண்டும்.

அன்பர் பலரின் விருப்பப்படி தனியே எட்டுப் பக்கங்கள் திரைப்படப் பகுதி இணைக்கப்படுகிறது. இது ஒரு 'அருணன்' தயாரிப்பு.

# நீங்கள் திரைப்படத்தில் நடிக்க விரும்புகிறீர்களா?

இத்துடன் உள்ள கூப்பனில் கையெழுத்திட்டு, அத்துடன் உங்கள் புகைப் படம், அதன் பின்னல் உங்கள் பெயர், முகவரி ஆகியவற்றை எழுதி அனுப்புங்கள்.

**இவர்கள் நடிக்க விரும்புகின்றனர்** பகுதியில் கட்டணம் எதுவுமின்றி உங்கள் படம் வெளியிடப்படும்.

— இங்கே கத்தரிக்க —

'பொன்னி'
சென்னை–1.

ஐயா,

இவர்கள் நடிக்க விரும்புகின்றனர் பகுதியில் என்னுடைய புகைப்படத்தை வெளியிடக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

.......................................
கையெழுத்து

பெயர் ______________________

முகவரி ______________________

______________________

## பொன்னியின் சிறுதொண்டு

நீங்கள் வேலையில்லாது இருக்கின்றீர்களா? இத்துடன் உள்ள கூப்பனில் கையெழுத்திட்டு உங்கள் தகுதி முதலியவற்றைத் தெரிவித்து எழுதுவீர்களானல் உங்கள் விளம்பரம் வேலை தேவை என்ற பகுதியில் இலவசமாக வெளியிடப்படும்.

— இங்கே கத்தரிக்கவும் —

'பொன்னி'
சென்னை–1.

ஐயா,

இத்துடன் அனுப்பியுள்ள விளம்பரத்தைப் 'பொன்னி'யில் வேலை தேவை என்ற பகுதியில் வெளியிடக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

.......................................
கையெழுத்து

பெயர் ______________________

முகவரி ______________________

______________________

## அறிவுக்கு விருந்து !

அரசாங்கம் என்னை அழிக்க முயற்சிக்கலாம், படைபலம் பாய்ந்து வரலாம், உலகமே கேலி செய்யலாம்; எனினும் நீதியை நிலைநாட்டி ஏழையின் கண்ணீரைத் துடைத்தே தீருவேன்.

—எமிலி ஜோலா.

மனிதா! நீ யாருக்கும் தலை வணங்காதே! நிமிர்ந்து நட! கை வீசிச் செல்! எதற்கும் அஞ்சாதே! ஆற்றல் உள்ள வெற்றி வீரனென விளங்கு! செல்வச் செருக்கரை, கொடுங்கோல் அரக்கரை, மதவெறியரை ஒதுக்கித் தள்ளி உன் மனச்சாட்சியைத் துணைகொண்டு நட! எதையும் சிந்தித்துப் பார். யாருக்கும் நீ தாழ்ந்தவன் அல்லன்! எவருக்கும் அடிமை அல்லன்! நீயே தலைவன்! தலை நிமிர்ந்திடு!

—வால்ட் விட்மன்.

வாழத் தெரிந்தவர்கள் உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்றுக்கொண்டு வருகிறார்கள். வாழத் தெரியாதவர்கள் உலகத்தையே தம் பக்கம் திருப்பிக் கொள்ளப் பார்க்கிறார்கள். எனவே உலக முன்னேற்றம் வாழத் தெரியாதவர்களைத்தான் பொறுத்திருக்கிறது.

—பெர்னட் ஷா.

உற்பத்தி செய்தவனுக்குந்தான் பொருள்கள் சொந்தம்; துரதிஷ்டவசமாக நிலைமை அப்படி இல்லை. ஒரு இனம் உழைக்க வேறு சிலர் அனுபவிக்கிறார்கள்; இது துரோகம். ஆதலால் இதை நீடிக்க விடக்கூடாது.

—ஆபிரகாம் லிங்கன்.

பாட்டாளி மக்களே! நீங்கள் விதைக்கிறீர்கள், அயலான் அறுக்கிறான். நீங்கள் நெய்கிறீர்கள், அயலான் அணிகிறான். நீங்கள் ஆக்குகிறீர்கள், அயலான் அனுபவிக்கிறான். நீங்கள் ஆயுதம் செய்கிறீர்கள் அயலான் அதை உங்கள் மீதே செலுத்துகிறான். தோழர்களே! நீங்கள் விதையுங்கள், ஆக்குங்கள், ஆயுதம் செய்யுங்கள், ஆனால் அவற்றை நீங்களே கையாளுங்கள்.

—கவிஞர் ஷெல்லி.


# பொன்னி

| மலர் 8 | ஆகஸ்டு 1, 1954. | இதழ் 8 |
|---|---|---|

திருவள்ளுவர் ஆண்டு 1985
ஆடித் திங்கள் 17-ம் நாள்


## பொருளடக்கம்


| | |
|---|---|
| செய்தித் திரட்டு ... | 4 |
| தலையங்கம் .... | 5 |
| வள்ளுவர் வாரம் கொண்டாடுக! .... | 10 |
| தில்லைப்பதியில் தெள்ளு தமிழ் ஆசிரியர்கள் ... | 11 |
| மறைந்த மதி! ... | 12 |
| அந்த நாள்! ... | 14 |
| காதல் பலி .... | 17 |
| சபலத்தின் சரிவு .... | 26 |
| திக்குவாயன்? .... | 31 |
| வாழ்வு காண? .... | 33 |
| உள்ளக் கோவிலே உயர்ந்த கோவில் ... | 42 |
| படுகளத்தில்! .... | 45 |
| காதலர் உள்ளம் .... | 49 |
| விநோத மண முறைகள் ... | 56 |
| பொன்னி! நீ வரமாட்டாயா? .... | 58 |
| இலக்கியச் செல்வங்கள் .... | 60 |
| நமது மருத்துவர் .... | 63 |


★


விலை 4 அணா



"பொன்னி"யில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே. கட்டுரையாளர்களின் கருத்துக்கு — ஆசிரியர் பொறுப்பல்ல. —

# செய்தித்திரட்டு

### ஆந்திரப் பாதையில் ஐதராபாத்-சென்னை !

அரசாங்க தரிசு நிலங்களை சட்ட விரோதமாக அனுபவித்து வருபவர்களுக்குத் தண்டனை எதுவும் விதிக்காமல் அவர்களுக்கே அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்குமாறு எல்லா மாவட்ட அதிகாரிகளுக்கும் ஐதராபாத் அரசாங்கம் உத்திர விட்டுள்ளது.

நிலமற்ற ஏழைகளுக்கு ஆளுக்கு 5 ஏக்கர் வீதம் தரிசு நிலங்களைக் கொடுக்க சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

* * *

### கம்யூனிஸ்ட் கட்சிக்கு வங்கத்தில் தடை !

கம்யூனிஸ்ட் கட்சியை அமைதிக்கு ஆபத்தான கட்சி என்று கூறி கிழக்கு பாகிஸ்தானில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டது.

* * *

### பொதட்டூர் பேட்டையில் தி. மு. கழக மாநாடு

கடந்த ஜுலை 10, 11 நாட்களில் தமிழகத்தின் வட எல்லையில் உள்ள சித்தூர்ப் பகுதியில் உள்ள பொதட்டூர்பேட்டையில் தி. மு. கழகத்தின் சமுதாய, அரசியல் மாநாடுகள் நடைபெற்றன. முதல் நாள் மாநாட்டிற்கு அ. பொன்னம்பலனரும், மறுநாள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமியும் தலைமையேற்று நடத்தினர். தோழர் [illegible] சிற்றரசு, இரா. நெடுஞ்செழியன், [illegible] கண்ணல், கே. ஆர். இராமசாமி முதலியோர் பேசிய பிறகு தமிழக எல்லை மீட்சிப் போராட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதுபற்றி, தெளிவற்ற நெஞ்சம் தெளியும் வகையில் அறிஞர் அண்ணா அவர்கள் அரியதொரு கருத்துரை வழங்கினார்கள்.

* * *

### நீதி நிர்வாகப் பிரிவினை முடிவு பெற்றது !

ஏற்கனவே அமுலாக்கப்பட்டு வரும் 11 மாவட்டங்களுடன் சென்னை, மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கும் நீதி நிர்வாகப் பிரிவினையை விரிவாக்க சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இத்துடன் தமிழ் நாட்டில் நீதி நிர்வாகப் பிரிவினை முடிவு பெறுகிறது,

* * *

### சென்னை சட்டசபை.

சென்னை சட்டசபை ஆகஸ்டு 6-ம் நாள் தொடங்கி ஒரு வார காலம் நடைபெறும் இக்காலத்தில் கல்வி திட்டம் பற்றி ஆராயுமென்று தெரிகிறது.

### வருந்துகின்றோம்.

நம் பொன்னி லிமிடெட் டைரக்டர்களில் ஒருவரான முசிறி திரு. மு. லெ. வேங்கடாசலம் அவர்களின் அன்னையார் சூரிய கண்ணம்மாள் அவர்கள் **18-7-54** ஞாயிறன்று இரவு தமது இல்லத்தில் இயற்கை யெய்தினார்கள் என்ற செய்தி கேட்டு மீளாத் துயருற்றோம். அவர்களது பிரிவால் வருந்தும் திரு. மு. லெ. வே. அவர்கட்கும் அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# வெள்ளம்போல் தமிழர் கூட்டம்!

தென்னிலங்கைத் திருநாடு; அங்குதான் தித்திக்கும் யாழ் மிடற்றி எத்திக்கும் ஆண்டான் இராவணன்; அது தான் தீரனும் சேரனும், வீரனும் சோழனும், ஆண்ட மரபிற் பாண்டியனும் சேர்ந்தாண்ட குமரிக் கண்டத்திலே ஒருபகுதி.

கடல்கோள் தோன்றி குமரிக்கோட்டோடு குமரிக் கண்டத்தையும் கொடுங்கடல் தன் வாயகப்படுத்தியபோது கன்னித்தமிழகம் ஒருபுறமும் கடலின்கண் முத்தெனத் திகழும் இலங்கை ஒருபுறமும் பிரிந்தன. மண்ணைப் பிரித்தது கடல்; மக்கள் மாண்பினைப் பிரிக்க முடியவில்லை. இடத்தைப் பிரித்தது கடல்; இருந்தமிழர் வாழ்வைப் பிரிக்க முடியவில்லை.

அந்த இலங்கையிலே இருந்தோர் சிலர், சென்று குடியேறினோர் பலர்—தமிழக மாந்தர் —தாய் மொழியாம் தமிழ் மொழி பேசியோர். அவர்தாம் காடு வெட்டி மேடு திருத்தியவர்; களர் நிலத்தைக் கழனியாக்கியவர்; காட்டை யழித்துத் தோட்டம் பலவாக்கிக் காப்பியும் தேயிலையும் விளைத்தவர்; மண்ணையும் பொன்னாக்கி மாந்தர்க்கு அளித்தோர்கள். வளம் பலவாக்கி நலம் பலபுரிந்தோர். சிங்களவர் எங்களவர் எனக்கூறி, திங்களும் ஒளியுமெனத் திகழ்ந்தவர்கள்.

தீந்தமிழ் மாந்தர் தென்னிலங்கை புகுந்து வளம் படைத்த நாட்டைச் சுடுகாடாக்கவில்லை; மாறுக வளம் ஓங்கி எழில் குலுங்கச் செய்தனர். செல்வம் கொழித்த நாட்டை செந்தழற் காடாக்கவில்லை; மாறுக பல்வளம் பெருக்கி மக்கள் பயன்பெற்று வாழச்செய்தனர். தீந்தமிழர் இலங்கையில் புகுந்தது வடநாட்டார் தென்னாட்டில் புகுந்தது போல வண்தமிழ் இனத்தாரை வாட்டிவதைத்து வட்டியும் முதலுமாகப் பெட்டி நிறைத்து, பெருமுதலாளிகள் ஆவதற் காகவல்ல....உண்ண உணவு உடுக்க உடை இருக்க இடம்

இவற்றைத் தேடிச்சென்றவர்கள்; தங்கள் இதயத் திரு நாடாக்கியவர்கள்; இருப்பதையெல்லாம் சுருட்டித் தங்கள் திருப்பதி சேர்க்கச் சென்றவர்களல்ல; உழைப்பையளித்து ஊதியம்பெற இருப்பிடம் அமைத்தவர்கள்.

தலைமுறை தலைமுறையாக இலங்கைத் தரணியிலே வாழும் தமிழர்கள் கூட்டம்.......அதனருமை யறியாதார் உரிமைதர மறுத்து, கொடுமைபல புரிகின்றனர் சட்டத்தால் வாழ்க்கைத் திட்டத்தால்..........சிறுமதியாளர்........மக்கள் மன்றத்தின் மனநிலை உணராத மமதையாளர். இவர்தான் கொத்தலாவலை.

செந்தமிழர் சீறியெழுந்தால், அருந்தமிழ் நாட்டார் அணிவகுத்துப் புறப்பட்டால்........கனகவிசயர் தலைகள் கல்சுமந்த காட்சிதான் நமது கண்களுக்குப் புலனாகின்றன. நமக்கென்ன? நாட்டவர் கண்களுக்கும் புலப்பட்டேதீரும்.

கொத்தலாவலையின் கொடுமை நிறைந்த-உரிமையைப் பறிமுதல் செய்யும் திட்டத்தை எதிர்த்து, தீந்தமிழ் பேசும் தீரர்கள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்துவிட்டனர் ஜூலை 6-ல்—ஒருவர் இருவரல்ல ஓராயிரம் ஈராயிரம் அல்ல, ஐநூறு ஆயிரம்பேர்! ஆம்! ஐந்து லட்சம் பேர். ஐந்து லட்சம் பாட்டாளித் தோழர்கள் பைந்தமிழ்த் தீரர்கள் அணி வகுத்துக் காட்டி விட்டனர். வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரத்திறனைக் காட்டுதற்கு உள்ளத்தால் ஒன்று பட்டு உருவத்தைக் காட்டிவிட்டனர். சிங்களவரும் செந் தமிழர் எங்களவர் எனக்காட்டி, பத்தாயிரக் கணக்கில் உரிமைப்போர் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கின்றனர் ஐந்துலட்சம் பாட்டாளி மக்கள் அதிலே ஐயாயிரக்கணக்கில் சிங்களவர் கூட்டம். எண்ணிடும்போது இதயம்குளர்கிறது.

பெரும் படைக்காட்சி பேரிடி முழக்கம் அணிவகுப்பு... அது அறப்போர் தொடுத்தால் இலங்கையின் அரசியல் வாழ்விற்கு அழிவுகாலம் என்று நாம் கூறமாட்டோம்....... நாள் காட்டிவிடும் கொத்தலாவலைக்கு, இந்த அணிவகுப் புப்பாடம் புரிந்திருக்க வேண்டும்........அவர் புரிந்திருக்க மாட்டார்....டில்லியின் போக்கை அவர் அறிந்திருப்பதால்.

ஆனால் அணிவகுப்பை அறப்போரில் ஈடுபடச்செய் யும் ஆற்றல் படைத்த தொண்டைமான் அறிந்திருப்பார், டில்லியின் போக்கு திருந்தாவிட்டாலும் மனிதர் வாழ்வை மனிதர் பறிக்கும் வழக்கை மத்திய அரசாங்கம் மான மின்றிப் பார்த்துக் கொண்டிருப்பினும் சென்னைமாநிலம் அதனைப் பார்த்துக் கொண்டிராது என்பதை.......

அதனுல்தான் வெள்ளம்போல் தமிழர் கூட்டம் விரைந்தது—வேலை நிறுத்தம் புரிந்தது—உரிமையின் பெருமையுணர்ந்தது—அருமை யறியாது நடந்த ஆட்சியாளர்க்கு அணிவகுப்புக் காட்டிவிட்டது .... அறிவிப்புப் பாடமும் புகட்டிவிட்டது....பாடம் புரியவில்லை யென்ருல் கொத்தலா வலையின் அறியாமைக் குறைதான்....நாமும் குறைபடுகிரும்; நமது பிடி டில்லியிலே...விலகும் நாள் எந்நாளோ என்று.

## விரைந்தது

கருத்துமினுத்த நிறத்தினர் கண்ணியமுடையோர் கதருடை அணிவோர் காந்தியத்தை காங்கிரசை வளர்த்தவர். ஆனுல் கொல்லைப்புற வழியே உள்ளே புகுந்து அரசியல் கோலாகலம் நடத்துபவரல்ல! பொதுவுடமைக் கட்சியைப் போற்றித் துதிபாடாதவர்—ஆனுல்...பொது மக்களிடத்தே கிடைத்த செல்வாக்கைத் தமக்கோ தம்மினத்துக்கோ பயன்படுத்தாமல் பொதுமக்கட்குப் பயன்படுத்துபவர்.

நினைத்ததை ஆற்றும் நேர்மையாளர்; ஆனுல் மக்கள் மன்றத்தின் மனம் அறிந்து செயலாற்றும் தீரர். காங்கிரஸ் கட்சியைப் போற்றி நிற்பார், ஆனுல் மாற்றுக் கட்சிகளுக்கும் மதிப்பளிக்கும் மாண்புடையோர்.

மக்கள் குரலை மதியாமல் ஆச்சாரியார் புகுத்திய கல்வித்திட்டத்தை ஒழித்துக் கட்டிய மனத்திடம் வாய்ந்தவர் சென்னை மாநில முதலமைச்சர் திரு. காமராசர். இவர் மக்களின் ஆதரவு தேவை என்ற மகத்தான கொள்கையை மதித்துத் தேர்தலில் ஈடுபடுகிருர் நேர்மையாளர். இவர் தோற்ருல் மக்களை மதியாது மமதைக்கு ஆட்சிப்பீடம் அளித்துத் தான்தோன்றித்தனமாய் சதிபல புரியும் சாதித் திமிர் கொல்லைப்புற வழியிலே மக்களாட்சிக்குத் தொல்லை தரக் காத்திருக்கும் ஆச்சாரியார் பார்வை—

இரண்டையும்நோக்கி வெள்ளம்போல் தமிழர் கூட்டம் விரைந்து தத்தம் வாக்களிக்கக் காத்திருக்கிறது, முதலமைச்சர் திரு. காமராசருக்கு. நாம் கூறுவதற்காக மட்டுமல்ல நல்லன புரிந்தவர் என்பதற்கு நன்றி காட்டும் வழியாக....

நாமும் கூறுகின்ருேம்! களம்பூர்த் தோழர்களின் கண்ணீரைத் துடையுங்கள், விவசாய மக்களின் நல்வாழ்

வுக்காக அறப்போர் நடாத்திய வீரர்களின் கண்ணீரைத் துடையுங்கள், காமராசர் ஆட்சி ஏழைகளின் கண்ணீர் துடைக்கும் காட்சியைக் கண்டால் வெள்ளம்போல் தமிழர் கூட்டம் விரையும்!

## விரைவீர் நீவிர்!

''எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்
அற்பம் என்போம் அந்த இந்தியினை
அதன் ஆணவம் தன்னை ஒழித்திடுவோம்!''

புரட்சிக் கவிஞரின் போர் முழக்கம் புறப்படு என அழைக்கிறது...செத்துத் தொலைந்த இந்திக்கு இத்தனை மதிப்பளித்தார் யார்? எதிர்ப்பியக்கம் ஏன்? என்ற குரல் கேட்கிறது.

சொறிபிடித்தவன் கை சும்மாயிராது. ஆச்சாரியார் என்ற அரசியல் அஞ்ஞானம் பிடித்த சுப்பிரமணியம் சும்மாயிருப்பாரா? இந்தியை எஸ்.எஸ்.எல்.சியின் தேர்வு மொழியாக்கி யிருக்கிறார் அன்பர் — அதுவும் சிறப்புற தமிழ் பயிலும் இடத்திலே சீரழிந்த இந்தியைப் பயிலக் கூறியிருக்கிறார். சங்கம்வைத்துத் தமிழ்காத்த தமிழகத்திலே தாய் மொழிக்குக் கல்லறை கட்டி தேவையற்ற இந்திக்குத் தெருவெல்லாம் விழாவெடுத்து தாயைத் தலையரியும் தவறான பாதையிலே புகுகின்றார். செந்தமிழ் பயிற்றும் செந்நாப்புலவர்களைச் சீறியிகழ்ந்துவிட்டு இந்தி வெறியராம் வடவரின் எடுபிடியாகிறார்.

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் உடுக்களோடும் பொங்குகடல் இவற்றோடும் பிறந்த தண்டமிழை இகழ்ந்து நேற்று முளைத்து இன்று செடியான இந்தியைப் போற்றுகின்றார்.

மாதவமேனன் செய்யாத செயலை மதியமைச்சர் புரிகின்றார். அருந்தமிழ் மறையாம் திருக்குறளைப் பள்ளி மாணவர் பயிலத் திட்டமிட்டார் அவிநாசியார், அதனை அழித்துக்கொண்டு வருகிறார் அன்பர் சுப்பிரமணியம். இத்தனையும் எதற்கு? இந்திக்கு ஏற்றம் கொடுப்பதற்காகவா? அல்ல! அல்ல! எடுப்பார் கைப்பாவையாகி கொல்லைப்புற வழியிலே உள்ளே நுழைய.

''பொங்கு தமிழ்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு'' என்ற புரட்சிக் கவிஞரின் போர் முழக்கம் மீண்டும் கேட்கிறது. வெள்ளம்போல்

தமிழர்கூட்டம் விரைவதற்கு முன்னே; அவசரத்திட்டத்தை மாற்றி அணையிட்டுக்கொள்வீர் ஐயன்மீர்! எனவேண்டுகின்றோம்....இனப்பற்றால் வேறொன்றுமில்லை.

இதற்கிடையில்—1953 சூலை 15-ம் நாள் நமது கண் முன்னே காட்சி யளிக்கின்றது. ஆம்! மும்முனைப் போராட்டத்தின் முன்னே! ஆச்சாரியாரின் அவசரக் கல்வித்திட்டம்—காவா நாவினர் நேருவின் போக்கு—தென்னாட்டு அவமானச் சின்னம் டால்மியாபுரம்—இந்தப் போராட்டங்களிலே சிந்திய குருதிப் பெருக்கு—ஒடிந்த கரங்களின் எண்ணிக்கை—சாய்ந்த பிணங்களின் தொகை—இத்தனையையும் எண்ணிப்பார்த்து இரத்தக் கொதிப்பேறும் 1954 சூலை 15-ம் நாளில் ஒரு மும்முனைப்போர் தொடங்கிடும் சூழ்நிலை—தொடங்கவில்லை.

தொடங்கினால்—காமராசரை ஆச்சாரியார் காலை வாரி விடப்பார்க்கும் நிலை; கல்வியமைச்சர் இந்தியை மறைமுகமாகக் கட்டாயப்படுத்தும் போக்கு—கொத்தலாவலை தீந்தமிழர் உரிமைகளைப் பறித்திடும் திடுக்கிடு நிலைமை—இன்றுமா மும்முனைப் போராட்ட நிலை—ஏற்படாது காமராசர் ஆட்சியில்—கண்ணியம் நிறைந்தவர் ஆயிற்றே அவர்—அதில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

களம்பூர்த் தோழர்களின் கண்ணீரைத் துடைத்து குடியாத்தம் தொகுதியிலே பகைவர் குப்புறவிழ, காமராசர் வெற்றி பெறுவார்.

''தமிழர் உரிமையைப் பறித்தல் தவறு'' என்று மந்த மதிபடைத்த மத்திய அரசாங்கத்துக்கு அவர்தம் கடமையை எடுத்து உணர்த்துவதுடன் இலங்கையரசாங்கத்திற்கும் எச்சரிக்கையனுப்புவார்.

கல்வியமைச்சர் கருத்தழிந்து புகுத்தும் இந்தி மொழியை இந்த நாட்டினின்றும் அகற்றவேண்டிய முயற்சிகளை விரைந்து செய்வார் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது—துணைநின்று பணியாற்றத் தோள் துடித்து நிற்கின்றனர் நாட்டவர். ஆனால் காமராசர் தங்கியிருப்பது காங்கிரசுக் கோட்டையாயிற்றே என்றால் இது பொதுத் தேர்தல் அல்லவே ஆட்சியிலே வேற்றுக்கட்சிகள் புக. வெற்றி காமராசருக்கானால் நமது திட்டங்கள் சில வெற்றி பெறும்—எனவே வெள்ளம்போல் தமிழர் கூட்டம் விரைக என வேண்டுகின்றோம் வெந்த தமிழர் உள்ளத்திலே குளிர் புனல் பாய்ச்ச!

# வள்ளுவர் வாரம் கொண்டாடுக!

—பேராசிரியர்கள் : மு. வரதராசனுர், க. அன்பழகன் தெளிவுரை—

[அண்மையில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் கூடிய தமிழாசிரியர் மாநாட்டினர் ஜூலை இறுதி வாரத்தை வள்ளுவர் வாரமாகக் கொண்டாட வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதை ஒட்டியே சென்னை குறள்நெறிக் கழகமும் ஒரு துண்டு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் வள்ளுவர் நாள் கொண்டாட வேண்டிய அவசியத்தையும், அவசர காரணங்களையும் விளக்கி விரிவான முறையில் தெளிவுபடுத்தியுள்ளார் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள். அதை ஆதரிக்குமுகத்தான் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளின் சுருக்கம் கீழே இடம் பெறுகிறது.]

தமிழர் ஒன்றுபட்டு உயர்ந்து விளங்கவேண்டுமானுல் அனைவரையும் பிணித்து ஒற்றுமைப் படுத்தவல்ல உயரிய ஒரு நூலாக இருப்பது திருக்குறளே. இதைக் கருத்தில் கொண்டே, அண்மையில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் கூடிய மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டினர் ஜூலை இறுதி வாரத்தை திருக்குறள் வாரமாக திருவள்ளுவர் வாரமாக நாடெங்கும் பள்ளிகளிலும், கழகங்களிலும் கொண்டாடுதல் வேண்டும் என்றும், அவ்வாரத்தில் ஒருநாள் அரசினர் விடுமுறை நாளாகவும் விளங்க வேண்டும் என்றும் நன் முடிவுகள் செய்து வேண்டிக் கொண்டனர். இவ் வேண்டுகோளைத் தமிழகத்து அரசியல் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், குறளன்பர்கள் முதலிய எல்லோரும் ஏற்றுத் தம்மால் இயன்றன எல்லாம் செய்தல் நாட்டின் முன்னேற்றத்திற்குரிய நற்பணியாகும்.

திருவள்ளுவரின் பிறந்த நாள் முதலியன எவை ஆயினும் ஆகுக. அவை நாட்டின் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் உரிய நல்லதொரு புத்துணர்ச்சியாக விளங்கவேண்டும். தனித்தனியே சிதறுண்டு காற்றில் கலந்திடும் போற்றுதல்களும், கூக்குரல்களும் ஆண்டுதோறும் ஒருவாரத்தில் நாடெங்கும் கேட்கும் முழக்கமாகத் திரண்டு அமைந்தால் பெரும் பயன் விளையும். பள்ளிகளும் கல்லூரிகளும் தொடங்கிப் புதுமை மிளிரச் செயலாற்றும் காலமாதலால் ஆண்டுதோறும் ஜூலைத் திங்களின் இறுதி வாரமே இவ்வகையில் மிகப் பயன் தருவதாகும். திருவள்ளுவரின் பெயரால் தமிழர் ஒன்றுபட முடியும் என்பதை ஆசிரியர் உலகமும், மாணவர் உலகமும், அரசியல் உலகமும் மெய்ப்பித்துக் காட்டுவதற்கு இது ஓர் அரிய வாய்ப்பாகும். ஆதலின் தமிழர் அனைவரும் தம்மால் இயன்றது செய்து, திருவள்ளுவரின் பெயரால், திருக்குறளின் பெயரால் ஒரு வாரத்தில் ஒன்றுபட்ட முழக்கம் செய்து தாய் மொழிக்கும், தாய் நாட்டிற்கும் ஆக்கம் தேடுமாறு வேண்டுகிறேம்.

## தில்லைப்பதியில்

# தெள்ளு தமிழ் ஆசிரியர்கள்!

"புளுகு மூட்டை பாடும் புலவர்கள் புத்திசாலித்தனத்தைப் புகுத்துவதில்லை" என்றியம்புகின்றது மக்கள் மன்றம்; "பகுத்தறிவு விளக்கம் கூறி பக்தி மார்க்கம் பரவாமல் தடுக்கின்றது இந்தப் பண்டிதர் கூட்டம்" என்று சாடுகின்றது அரசியல் மன்றம். இதற்கிடையில் தமிழாசிரியர்கள் தில்லைப்பதியாம் சிதம்பரத்திலே மாநில மாநாடு கூட்டுகின்றனர்; செல்வீர் சிதம்பரம் நோக்கி........! என்று தலையங்கம் தீட்டி யிருந்தோம் கடந்த இதழில்.

ஜூலை 10, 11 நாட்களில் கல்வி அமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம் திறப்புரை ஆற்ற, பசுமலை பாரதியாரின் தலைமையில் சிறப்புற நடைபெற்றது தமிழாசிரியர்களின் மாநில மாநாடு. அங்கே கூடியிருந்த தமிழாசிரியரின் எழுச்சியும், உணர்ச்சியும், கண்ட நமக்கு, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த அந்த நாள் தான் நினைவுக்கு வந்தது.

வாடும் பயிருக்கு ஒரு வான் மழைபோல் செவிக்கு உணவும், சிந்தைக்கு உணர்வும் தந்து தமிழின் சிறப்பை எடுத்தோதிய பாரதியாரும், சிதம்பரநாதனும், டாக்டர் மு. வரதராசனும், இராசாக்கண்ணும், அன்பழகனும், கோ. சுப்பிரமணியனும், தேவநேயப்பாவாணரும், மா.இராசமாணிக்கரும், ஔவை. சு. துரைசாமியும், இன்னும் இவர்களை ஒத்த எண்ணற்ற தமிழுணர்த்தும் புலவர் மணிகளையும் காணும்போது சேரனும், சோழனும், பாண்டியனும் குடிதழீஇ கோலோச்சிய நாளில் சங்கத் தமிழ் பரப்பிய சாத்தனாரையும், வள்ளுவரையும், கபிலரையும், பாணரையும் ஒக்க நிறுத்திக் காண்பது போன்ற மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருந்தோம் என்றால் மிகையாகாது.

"தமிழாசிரியர்கள் என்றாலே கடவுள் பற்று அற்றவர்கள் என்ற தவறான கருத்து சிலகாலமாக நிலவி வருகிறது. கடவுள் நம்பிக்கையில்லாமல் வாழ்கின்ற ஆசிரியர்கள் ஏனைய துறைகளிலும் தான் காணப்படுகின்றார்கள். தமிழாசிரியர்கள் சிலர் தமிழ் மொழியிலேயே தமிழ் மக்களின் வாழ்க்கைச் செயல்முறைகள் அமையவேண்டும் என விரும்புகிறார்கள், நடத்தியும் காட்டுகிறார்கள்; இது தமிழாசிரியர்களின் ஒப்ப முடிந்த கருத்து. இதற்குக் காரணம் தமிழ்ப்பற்றே ஆகும்" என்று மாநாட்டிற்கான வரவேற்புரை நிகழ்த்தியகாலை டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

தலைவர் முன்னுரைக்குப்பிறகு பல தமிழறிஞர்களின் படத் திறப்பு விழாக்களும் நடைபெற்றன.

நிறைவேறிய தீர்மானங்களில் ஒன்று ஜூலை இறுதி வாரத்தை வள்ளுவர் வாரமாக முழங்க வேண்டுமென்பதும் மற்றொன்று தமிழ்தான் ஆட்சி மொழியாக வேண்டும் என்பதுமாகும்,

# மறைந்த மதி!

இளசை மகிழ்நன்

ஆற்றோரம் சென்றமர்ந்தேன் அந்திப்போதில்
அழல் போல மேல் வானம் இருத்தல் கண்டேன்
மாற்றாரின் படையிலே வெற்றி கண்ட
மருப்பட்ட வாளெனவே எண்ணும் போதில்

அந்தநாள் நினைவெல்லாம் வந்து பாய
அதையறிவேன் நானென்று சொல்வதேபோல்
வந்ததுவே முழுமதியும் வருகவென்றே
வாழ்க வென வாழ்த்தியே அதனைக்கேட்டேன்

இந் நாட்டின் முழுமதியே இதனைக்கேளாய்!
எந்தமிழர் அந்த நாள் நிலையை நீதான்
சொந்தமாய்ச் சொல்லிடுக என்றேன் நானும்
சோற்றுக்கு அலைந்ததில்லை அந்த நாளில்

எந்திரம் போல் சுழன்றோடி மக்களெல்லாம்
எத்திசையும் சென்றே நற் பொருளடைந்து
வந்திட்ட வறிய வர்தம் வறுமை போக்கி
வளமெல்லாம் பெற்றேதான் வாழ்ந்து நின்றார்

என் ஒளியே! படாத பெரும் இமயந்தன்னில்
இந் நாட்டின் கொடி பொறித்தார் ஏற்றத்தோடு
அன்னவரின் அருந்திறனைக் கேட்டேன் யானும்
அதை யறிவாய் அம்மட்டோ இன்னும் கேளாய்!

மலையெனவே அலை வீசும் கடலின் மீதே
மனதினிலே சிறிதேனும் அச்சமின்றி
மலைமலையாய்க் கலங்களிலே படைகளோடு
மாவீரர் சென்ற பெரு மகிழ்ச்சி கண்டேன்.

ஈழத்தை வலிமையினால் தன்னதாக்கி
எண்ணிலா வீரர்தமைச் சிறையிலிட்டுப்
பொழிலமைக்கும் காவிரிக்குக் கரையெடுத்துப்
புகழ் பெற்ற கரிகாலன் கதையும் உண்டே

கங்கையைக் கடாரத்தைக் காலில் வைத்து
கனகவிசயர்தலையில் கல்லையேற்றி
பொங்குபுகழ் புவிக்களித்த பொன்னி நாட்டில்
புழுப் போலத் துடிக்கின்றார் தமிழர் அந்தோ!

என் வாழ்வைக் கெடுப்பதற்கு எங்கிருந்தோ
இருள் சேர்க்க வந்திட்ட மேகம் போல
என் தமிழர் வாழ்விலும் இருளே சூழ்ந்த
இழி நிலையை என்னென்று இயம்புவேன்யான்

எண்ணிலாக் கலங்களிலேநல் லுணவை யள்ளி
இலங்கைக்கு அனுப்பிவைத்த சடையன் வாழ்ந்த
மண்ணிலுள்ளார் உணவின்றி மாய்வதோடு
மக்களையும் விற்றிட்டார் கண்டேன் ஐயோ!

வற்றாத உயிர் நதிகள் வளமாய் நின்றும்
வாழ்வதற்கு வகையில்லை என்று சொல்லி
பெற்றதாய் அன்பு நிறை பெண்டிரோடு
பிள்ளைவிட் டேகின்றார் பிழைப்பதற்கே!

தேய் நிலையைப் பெற்றிட்ட என்னைப்போல
தேய்ந்த தமிழர் வாழ்வு திருப்புதற்கு
ஓய்தலின்றி உழைத்திடுக என்று சொல்லி
உயர் தமிழர் நன்மதியும் மறையலாச்சே!

[கதையமைப்பையோ, கற்பனைக் கருத்துக்களையோ, சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் தம் இசைவு பெறல்வேண்டும்]




## காட்சி 25

[இடம்: வடவேந்தர் பேரவை. கனகன் விசயன் முதலியோர் வீற்றிருக்கின்றனர்.]
[காவலனொருவன் ஓடிவந்து]

காவலன்: மன்னர் மன்ன! வாழ்க!

கனகன்: விரைந்தோடி அவை புகும் வீரனே! என்ன செய்தி!

காவலன்: செந்தமிழ் நாட்டார்......

விசயன்: வந்து விட்டனர் படையோடு; என் அப்படித்தானே!

காவலன்: ஆம் அரசே, ஆம்!

கனகன்: தெரியும்.......திடீர்த் தாக்குதல் நடக்கும் என்பது நன்றாகத் தெரியும்......தெரிந்தே தான் தயாராகத் திட்டம் தீட்டியிருக்கின்றோம். தீந்தமிழ் நாட்டார்—திறல்மிகு வேந்தர் திமிர் அழிக்கப்படப் போகிறது.

காவலன்: கங்கையாற்றைக் கடந்து பொங்கும் படையோடு பூரித்த தோளோடு சங்கநாதம் முழங்கி வருகின்றனர்.

கனகன்: என்ன.... ...! கங்கைப் பேரியாற்றைக் கடந்து வருகின்றனராம் அந்தக் கயவர்கள்; கொங்கு நாட்டானாம்; பெயர் செங்குட்டுவனாம்; கொடியேந்தி வருகின்றானாம் அந்தக் கோமாளி...

உருத்திரன்: நூற்றுவர் கன்னராம்! அவர்தாம் ஆற்றைக் கடக்க ஆரருள் புரிந்தனராம். அன்னியன் தாக்க வரும்போது ஆரியன் அடிபணிகின்றான்.

விசயன்: ஆற்றைக் கடக்க உதவி புரிந்தனவாம் கோட்டான் கூட்டம். புலிக் குகையை நோக்கிப் புல்லர்கள் போர் தொடுக்கப் புறப்பட்டு வருகின்றனராம்.

விசயன்: நாமெல்லாம் கிலிபிடித்து ஓடுவோம் என்ற எண்ணத்தால்.......கேடுகாலம் பிடித்தவர்கள்... ....புல்லேந்திய நாளிலே

புகழேந்திச் சென்றவர்கள்.......வில்லேந்திய இந்த நாளிலும் வெற்றிகாண விரைந்தோடி வருகின்றனராம்...—வீணர்கள்.

உருத்திரன்: வீணர்கள்தாம்........ஆரியரை எதிர்த்த யாரும் இந்தப் பாரிலே வாழ்ந்ததில்லை என்பதை அறிவார்கள்.

கனகன்: தென்னாட்டு மன்னனும் தீரன் இராவணனை எம் நாட்டு வேந்தன் இராமன் அழித்ததை இன்னுமா இவர்கள் தெரியாதிருக்கின்றனர்.

விசயன்: ஆரியப் பண்பாடாம் அரும்பெரும் செல்வத்தை வாரி வாரி வழங்கி, பேரிகை கொட்டி நின்ற பெருந்தமிழ் நாட்டாரைப் பேடிகளாக்கி யிருக்கின்றோம் என்பதை இன்னுமா தெரியாதிருக்கின்றனர். மாடலன் வழியே மறைமொழி புகுத்தினோம்; ஆசான் வழியே ஆரியத்திற்கு ஆசனம் அளிக்கச் செய்திருக்கின்றோம் தென்னாட்டிலே என்பதை இன்னுமா தெரியாதிருக்கின்றனர்.

பைரவன்: தெரிந்திருப்பார்கள்.... ....

கனகன்: தெரிந்தும் இந்தத் திமிர்வாதத்திற்குக் காரணம்....?

## காட்சி 26

*[கங்கைக்கரை – பாடி வீடு. செங்குட்டுவன், வில்லவன் கோதை முதலியோர் வீற்றிருக்கின்றனர்.]*

வில்லவன்கோதை: காரணம் இல்லாமல் இல்லை. எங்கோமகளைக் கங்கை நீராட்டிய அன்று......கொங்குவேந்தன் நின்னை எதிர்த்த ஆரியக் கோமாளிக் கூட்டத்தார் பட்டபாட்டை அதற்குள் மறந்தா போயிருப்பர்..... ....அதனால் கெஞ்சிக் கூத்தாடும் பஞ்சைகள் நம்மைக் கண்டு அஞ்சி யொதுங்கிவிட்டனர்.

செங்குட்டுவன்: இல்லை....வஞ்சகர் நெஞ்சில் உரமின்றி நேரெதிர்க்க வலியின்றி வஞ்சகத்தால் வெல்ல வழிபார்ப்பர்.

வில்லவன்: வஞ்சகத்தால் வெல்ல வழிபார்த்தால்......துஞ்சு புலி இடறிய சிதடராவர்......

வீரன்: (அவையினுள் புகுந்து) வெற்றிவேற் சேர! வாழ்க நின் கொற்றம்! வளர்க நின் புகழ்!! சூதுமதியினர் சூழத்தொடங்கி விட்டனர் பாசறையை.

செங்குட்டுவன்: புலியேற்றை அழிக்க பூனைக் கூட்டம் புறப்பட்டு விட்டதாம். பகைஞர் சூழ்ந்தனராம்...பாயட்டும் நமது படைகள், வேற்படைத் தலைவரே! நாற்படையாளரே! கொலைவாளினை எடுமின்! கொடியோர்தமை அழிமின்! வீறிட்டெழுங்கள், வெட்டுங்கள் ஆரியரை; கட்டுங்கள் கனகவிசயரை.

*[வீரர்கள் ஆரவாரம் செய்கின்றனர்.]*

வில்லவன்: தாயை இகழ்ந்த அந்தத் தறுதலைகளின் தலைகள் தரையிலே உருண்டோடச் செய்யுங்கள். புலிக்கொடியை இகழ்ந்த அந்தப் புல்லேந்திக் கூட்டத்தைப் புறங்காட்டியோடச் செய்யுங்கள். மீனக்கொடி இகழ்ந்த அந்த மானிடப் பதர்களைக்காணுமற் பறக்கடியுங்கள். வில்லேந்திய நமை இகழ்ந்த அந்தத் துடுக்குச் சொல்லேந்திகளை விரட்டி அடியுங்கள்.

*[வீரர்கள் ஆரவாரம் செய்கின்றனர்.]*

செங்குட்டுவன் : செந்தமிழ் நன்னாட்டுச் சிங்க ஏறுகாள்! "இன்று நீர் சிந்தும் இரத்தம் ஓர் துளியும் நின்று இவ்வுலகில் நீள் புகழ் பரப்பும். இத்தனிப் போரில் நீர் ஏற்றிடும் காயம் சித்தம் களித்துச் செயமாது உமக்கு முத்தமிட்டளித்த முத்திரையாகும்.

போர்க்குறிக் காயமே புகழ்க்குறிக் காயம்
யார்க்கது வாய்க்கும் போர்க்கு நீர் எழுவீர்!

*[வீரர்கள் ஆரவாரம் புரிகின்றனர்.]*

மானம் இழந்ததென்றால் உயிர்தானம் அளிக்கும் தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் நாம்; நம்மைப் பார்த்து இந்த வானரக் கூட்டம் ஈனமொழி கூறவும் வாய் பேசாதிருப்பவர்களா நாம்? வாளெடுப்பீர்! வன்திறல் காட்டுவீர்!

வில்லவன் : வெள்ளம்போல் தமிழர் கூட்டம் மானங் காக்க விரைந்தோடி வந்ததைக் கண்டும், எள்ளி நகையாடி எதிர்த்த அக் கயவரை.... ...

வீரர்கள் : வெல்வோம்!

வில்லவன் : செந்தமிழே அமுதே உயிரே என்று தித்திக்கும் இசைபாடும் தீந்தமிழ் நாட்டாரை........வாய்காவா திகழ்ந்த அந்த வந்தேறிக் கூட்டத்தை

வீரர்கள் : வாளால் வீழ்த்துவோம்.

வில்லவன் : போரிற் புறங்காணு பூந்தமிழின் நாட்டானை ஆரியப் பேடிகள் அவமதித்த அந்தச் சொல் அழிய

வீரர்கள் : வேலால் அழிப்போம் வேதியர் கூட்டத்தை... ...

வில்லவன் : குட நாட்டு வேந்தன் கொற்றம்தனை யுணரா வட நாட்டார் தம்மை

வீரர்கள் : பிடித்து ஒழிப்போம்.

வில்லவன் : காவா நாவின் கனக விசயர் தலையிலே......

வீரர்கள் : கல்லைச் சுமத்துவோம் கங்கையிலே நீர்ப்படுப்போம்.

செங்குட்டுவன் : வெங்குருதி பாய்ந்தோடும் வீரப் பெருமக்காள்! உங்கள் குருதியிலே உணர்ச்சித் தீ மூளட்டும்! உடலிலே... உள்ளத்திலே உணர்ச்சியிலே எங்கும் மூளட்டும் உணர்ச்சித் தீ.... வாள் சுழலட்டும்! வஞ்சகர் அழியட்டும்.

வில்லவன்கோதை : முழங்கட்டும் முரசு! மூளட்டும் போர்! வடவர் கூட்டம் வானேக்கிச் செல்லட்டும்... .... கங்கைக் கரையிலே குருதிக் கறை படியட்டும்! ஆரியர்தம் கோட்டை அழியட்டும்... ....

செங்குட்டுவன் : போர் தொடங்கட்டும் பொங்கட்டும் குருதியாறு.... ....

*[வடவர் களத்திலே தென்னாட்டுப் படைவாள் சுழற்றித் திரிகின்றது.]*

(தொடரும்)

# காதல் பலி



டி. வி. இசையரசு

**பரல்—1.**

*[அவள் அரண்மனை சனுணவில் விளக்கேற்றும் வேலைக்காரி—அவள் செக்கர் வானத்தை நோக்கி சிரித்த வண்ணமிருக்கிருள்—தனக்கிடப் பட்டிருக்கும் வேலையை விட்டு இயற்கையினெழிலில் திளைத்துக் கொண்டிருக்கிருள் அந்த இன்பவல்லி, அப்போது...]*

தாராஷிகோ : பானு !...

ரைனுதில் : (திடுக்கிட்டு) யாரது?....

தாரா : நான்தான்.

ரைனு : ......................

தாரா : நேரிழையே !....உன் நெஞ்சு ஏன் படபடக்கிறது? சரி நீ யார்?

ரைனு : (தயங்கியவாறு) நான் அரண்மனை சனுணுவின் விளக்கேற்றும் வேலைக்காரி. அந்தப்புரத்தை அழகுபடுத்துவதும் என் வேலை தான்.

தாரா : அந்தப்புரத்தை அழகுபடுத்தும் ஆரணங்கே....! சனுணுவின் சந்திர பிம்பம்தான் நீ. ரைனுதில் !...நான் உன்னையடைய எத்தனையோ இடர்ப்பட்டிருக்கிறேன்.

ரைனு: (குறுக்கிட்டு) நீ யார்? சூபகானைப் போலத் தோன்றுகிறதே !

தாரா : அதிருக்கட்டும் !....அந்தப்புரத்தை அழகு படுத்தும் நீ அடிமைத் தாதியாகவா இருப்பது? அரசியாகவன்றே இருக்க வண்டும் !....

ரைனு: (பயந்தவாறு) விளக்கேற்றும் வேலைக்காரி வேந்தரின் மனைவியாவதெப்படி?....சரி....சந்திர வெளிச்சத்தில் நம் சந்திப்பை யாராவது கண்டு விட்டால்...? ஈட்டிமுனைகளால் நீ இன்னலுக்குள்ளாக நேருமே!....

தாரா: ஈட்டிமுனைகளால் தாக்கப்பட்டு நான் இறந்து விடுவேனென்று எண்ணுகிருயா? ஈட்டி முனையைக் கண்டதும் வாட்டமுற்று வாடிவிடமாட்டேன். கூர்வாளைக் கண்டு குலைநடுங்கும் கூட்டத்தினனல்ல நான்! பெரும் படைகளையும் பீரங்கி குண்டுகளையும் கண்டு துவண்டதில்லை. வேல் கண்டு வெருண்டோடியதில்லை. குதிரைப் படைகளிடம் கொந்தளித்தெழுந்து கோரப் போர் புரிவேனே தவிர மாற்ருனுக்குக் குனிந்து வாழமாட்டேன்.

ஈட்டி முனைகளைக் கண்டு நான் எள்ளி நகையாடுவேன். கூர்வாளைக் கண்டவுடன் கொந்தளித்தெழுவேன். காலாட் படைகளைக் கண்டு களிப்படைவேனே தவிர, கண் கலங்கமாட்டேன். எண்ணற்ற தேர்ப்படைகளைக் கண்டு நான் ஏளனச் சிரிப்புதிர்ப்பேன். நான் வீறு கொண்டெழுந்ததைக் கண்டு வெகுண்டோடியவர்கள் வெகு பேர். எனது கூர்வாளைக் கண்டு குலைநடுங்கி ஓடினவர்கள் கோடிக் கணக்கானவர்கள். சீறும் சிறுத்தையாயினும் அதைச் சிறைப்பிடிக்க சிறந்த வீரமுண்டு என்னிடம். சனுவின் சந்திர பிம்பமே!....என்னைச் சரியாகத் தெரியவில்லையா உனக்கு? தந்தைக்குப் பின்னுல் தரணியாளப் போகும் தாராஷிகோ நான்தான்.

ரைனு: இளவரசே!...உம்மை இன்னுரென்றறியாமல் இகழ்வான முறையில் ஏதேதோ கூறிவிட்டேன். என்னை...

தாரா: (குறுக்கிட்டு) மன்னிக்கச் சொல்கிருயா? கோமளவல்லியே!....நீ குற்றம் புரிந்ததாக எனக்கொன்றும் தோன்றவில்லையே!....ரைனுதில்!...இளங்காதலராகிய நமக்கு இளந் தென்றல் இன்பமுடன் காத்துக் கொண்டிருக்கின்றது. காதலர்களுக்கெல்லாம் களிப்பைக் கொடுக்கும் அழகு நிலவின் நல்ல அழைப்பைப்பார்! பண்ணிசைக்கும் பூங்குயில்கள் பாடி மகிழ்வதைப்பார்! அன்பே அரண்மனை அந்தப்புரத்து விளக்கையேற்றி அதற்கு அழகொளி கொடுக்கும் நீ, இன்றென் இதயத்தில் காதலெனும் அணையா விளக்கை ஏற்றி வைத்துவிட்டாய்.

ரைனு: விளக்கேற்றும் வேலைக்காரி நான்; நீரோ வேந்தரின் புதல்வர். நம்மிருவருக்குமிடையே காதல் எப்படி நிலைத்திருக்கும்? விபரீதமாகி விட்டால்...?

தாரா: அந்தி சிந்தும் மந்த ஒளியே!....விபரீதம் விளையும் அளவிற்கு நாம் விட்டு வைப்பதா? விபரீதச் செயல் புரியும் வீணர்களை வெட்டி வீழ்த்த வேண்டாமா?

ரைனு: அன்பரே!...நமதரண்மனையில் மலருக்கிருக்கும் மதிப்புக் கூட மங்கையர்கட்கில்லையே! மலர் வாடியவுடன் மண்ணில் எறியப்படுவது முறையாகுமா? "முறையாகா"தென்பீர்கள். ஆனுல் நமது முகலாய அரண்மனையில் நடந்து வருகிறதே!...

தாரா: அன்பே!.......அரண் மனையில் மட்டுமென்ன? தாரணி முழுவதும் நடக்கிறதென்று சொல்லேன்! ஆனால் இந்த தாரா ஷிகோ அப்படி செய்வதற்கு அவர்களைப் போன்று சிந்தனை யற்றவனா என்ன! என் கண்கள் கருத்தைக் கணித்துக் கொண் டிருப்பதை நீ கவனிக்கவில் லையா? ரைனுதில்!...நீ என்னைச் சந்தேகிக்காதே!

*[அவள் அந்த அழகனின் முகத் தைக் கண்டு ரசித்த வண்ண மிருக்கிருள்—கண்கள் கலக்கின் றன—காதலர் பிரிகின்றனர்.*



## பரல்–2.

*[இடம்: அரண்மனையில் தனி யறை. நேரம்: பிற்பகல். தாரா ஷிகோ. அவனுடைய இரண் டாவது சகோதரி ரோஷனாரா.]*

ரோஷனாரா: அண்ணா!.... நீங்களோ பட்டத்து இளவரசராகப் போகிறீர்கள்! அதற்கு பக்கத்தில் ஒருத்தி வேண்டாமா?

தாரா: (வெறுப்புடன்) வேண்டும்தான்:....அதற்கு அரசகுமாரி கள் யாரையாவது அப்பா பார்த்திருக்கிறாரா?

ரோஷ: ...ம்!...அப்பா பார்ப்பது ஒருபுறம் இருக்கட்டும்! உங்கள் தங்கை பார்த்த தையல் உங்களுக்குப் பிடிக்காமலா போய் விடும்?...

தாரா: சோதரி!...அந்த சோலைக்குயில் யார்; சொல்ல முடியுமா?

ரோஷ: நடமிடும் நாரீமணி, அந்த ரைனுதில்லைத் தான் சொல்லுகிறேன்.

தாரா: (மகிழ்ச்சியால்) ஆகா!....எவ்வளவு அறிவிருக்கிறது உனக்கு? நான் காதல் கொண்ட கன்னியையே நீயும் கடிதில் மணந்து கொள்ளச் சொல்லுகிறாயே! தத்துவஞானிகள் கூட உன்னைக் கண்டு தலை குனிய வேண்டும் ரோஷனாரா!...உன் உள்ள

மும் என் உள்ளமும் ஒன்று பட்டுத்தானே காணப்படுகிறது!.... ரோஷனுரா!...நான் ரைனுதில்லைத் தான் மணந்து கொள்ளப்போகி றேன். தங்கையென்ருல் நீயல்லவா தங்கை; அண்ணனிடம் அள வற்ற அன்பு காட்டுகிருயே!...உன் பாசத்திற்குப் பரிசாக எதைக் கொடுத்தால் ஈடாகும்?

ரோஷ: பரிசிருக்கட்டும் அண்ணு!....உம்மைப்பார்க்க வேண்டு மென்று யாரோ காத்திருக்கிருர்கள்.

*[தாராஷிகோ தன் தங்கையின் பாசத்தைப் பாராட் டிய வண்ணம் வெளியேறுகிருன் — அவனுக்குப் பின்...]*

ரோஷ: நான் அவனை வெறுக்கின்றேன் என்பதையறியாமல் வெறியாட்டமாடுகின்ருன். ரோஷனுரா பேகத்தின் வேடமறியாமல் ஏதேதோ பிதற்றுகின்ருன் பித்தன். நான் செய்யவிருக்கும் சூழ்ச்சி தெரியாமல் ரைனுதில்லை மணக்கப் போவதாக சூளுரையைப் பொழிகின்ருன். வஞ்சத்தின் எல்லையிலே நிற்கும் என்னை கொஞ் சங் கூட நஞ்சில்லாதவள் என்றெண்ணுகிருன் தாரா. சுபேதார் ஒளரங்கசீப், சூழ்ச்சியால் நாடாளப் போவது தெரியாமல், ரைனு தில்லின் இருப்பிடத்தைச் சொர்க்கமெனக் கருதுகிருன். வஞ்ச னையை வெங்கணையாய்க் கொண்ட நான் வாகையைத்தான் கண்டி ருக்கிறேன். பட்டது இளவரசன் படும் பாட்டைப்பார்!...ஒளரங்க சீப்பின் அருமைச் சோதரி நான் என்பதையறியாமல் ஆட்டம் போடுகிருன் அறிவிலி. ரைனுதில்லுடன் தாரா காதல் கொண்டி ருப்பதை அண்ணன் ஒளரங்கசீப்பிற்கு எழுதி அவன் ஆனந்த வாழ்வை அழிக்கின்றேன் பார்!....

**பரல்—3**

*[இடம்: அரண்மனையில் தனியறை. நேரம்: பிற் பகல். ரோஷனுரா பேகம் தனிமையிலமர்ந்திருக் கிருள்—தூதுவனெருவன் ஓடிவந்து அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லுகிருன்— அதை அவள் வாங்கிப் படிக்கிருள்.]*

ரோஷ: "மகுடியின் நாதத்தைக் கேட்டு மயங்கிக் கிடக்கும் வேளையில்தான் பாம்பின் விஷப்பற்களைப் பிடுங்கவேண்டும்."

ஆம்! அண்ணன் ஒளரங்கசீப் எழுதியிருப்பதுதான் அருமை யான வழி. இனி ஆக வேண்டியதற்கு ஆவன செய்கிறேன். கோமகனை கொன்ருல்தான் எனக்குக் குதூகலம்! இளவரசன் தாராவின் மார்பிலே ஈட்டிகள் பாய்வதைக் கண்டால்தான் எனக்கு இன்பம்! மன்னனுக வரப்போகிருனும் மடையன்! அவனை மாய்த்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன் பார்!

*[ரோஷனுரா பேகத்தின் அந்தரங்கத் தோழியொருத்தி ஓடி வருகிருள்.]*

ரோஷ! ஏண்டி, என்னடி சேதி?

தோழி: ரைனுதில்லும் தாராவும் சந்தித்து ஏழு நாட்களாகி விட்டனவாம்.

ரோஷ: ....ம்!...இருக்கட்டும்! அவர்கள் சந்திப்பு அறுந்தது நமக்குச் சாதகமாகத்தானிருக்கிறது. போகட்டும்? அவள் எப்படி இருக்கிருள்?

தோழி: தாராவைக் காணுத நேரத்தில் அவள் தணலாய்த் தவிக்கிருள்! தென்றல் தரும் தெம்மாங்கு அவளுக்குத் தீயாக வல்லவா தோன்றுகிறது!....

ரோஷ: (அலட்சியத்துடன்) பின்னென்ன? காதலர்களல்லவா அவர்கள்? தாராவின் வரவில்லாவிட்டால்வானத்து வெண்ணிலவு கூட அவளை வாட்டி வதைக்குமே; காதலென்ருல் சும்மாவா?... வேலைக்காரிக்கு வேந்தர் குலத்தில் போய் காதல் உதித்து விட்டதோ?

[குதூகலத்தின் கொக்கரிப்பு கோட்டை மதில்களில் பிரதிபலிக்கின்றன — வெற்றிச் சிரிப்பொலியும் வேடிக்கைப் பேச்சுக்களும் வேலொடும் தூங்கி விழுந்த வேலைக்காரர்களைத் தட்டி எழுப்புகின்றன.]

## பரல்—4.

[இடம்: அரண்மனை சனுை. நேரம்: பிற்பகல். செக்கர் வானத்தினும் மிக்க செம்மேனி கொண்ட ரைனுதில் சிதார் வாசித்துக் கொண்டிருக்கிருள்— சிதார் அவள் சிந்தைக்கு சந்தோஷத்தைக் கொடுத்த பாடில்லை—அமைதி அணுவளவுமின்றி அவள் நெஞ்சம் கொந்தளிக்கிறது—காட்டிற்குச் சென்ற தன் காதலனை எண்ணிக் கலங்குகிருள்.]

ரைனுதில்; "வேட்டையாடுவதன் பொருட்டு நான் காட்டிற்குச் செல்கிறேனென்று கண்ணீர் வடிக்காதே! சந்திப்பில்லாதது உனக்கு சலிப்பாகத்தானிருக்கும், அதற்காக நீ சஞ்சலப்பட்டுக் கொண்டிராதே! சின்னுட்களுக்குச் சகித்துக் கொண்டிரு; நான் சீக்கிரம் திரும்பி வந்து விடுகிறேன்" என்றெல்லாம் ஆறுதல் மொழி கூறிச் சென்ருர். ஆனல் இப்போது எண்ணும்போது ஏக்கத்தின் துக்க அக்கினி என்னுள்ளத்தில் துள்ளியெழுகிறது. இயற்கையை நோக்கினும் என் நெஞ்சம் இன்பமடையவில்லையே!.... காணும் பொருள்களெல்லாம் கசப்பாகத்தானே தோன்றுகிறது!... துன்பப் புயல் என்னுள்ளத்தில் துரிதமாக வீசுகிறதே! நான் எப்படித் துயருருமல் இருக்கமுடியும்? இளங்காதலர்களெல்லோரும் இன்பங்காணும் இந்நேரத்தில் நான் மட்டும் ஏங்கித் தவிப்பதா? தோகை மயில்கள் துள்ளி விளையாடும் இந்நேரத்தில் நான் மட்டும் துக்கத்தில் ஆழ்ந்திருப்பதா? காதலர்களனைவரும் கானமிசைக்கும் இந்நேரத்தில் நான் மட்டும் கண்ணீர் விட்டுக் கலங்குவதா?

[ரைனுதில் தன் காதலரின் பிரிவை எண்ணி வருத்தமுறுகிருள் — திடீரென்று, அமைதியைக் குலைத்த காற்றின் பேரிரைச்சல் அவளைச் சற்று அச்சமுறச் செய்கிறது — சுடர் விட்டெரிந்த விளக்குகள் சுழற்காற்ருல் தம் சுடரிழந்து நின்றன—மறையும் சனுவின் சன்னற்புறங்களைச் சற்று நனைத்தவாறு நின்றது—இவைகளுக்கிடையே, இருட்டும் அந்த அறையைச்சற்று எட்டி பார்க்கத் தொடங்கியது — தலையைச் சிதார் வாத்தியத்தின் மேல் கவிழ்த்தவாறே கற்பனை வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தாள் அந்தச் சிங்காரி — கற்பனை

கலந்தது—யாரோ கதவைத் தட்டும் ஒலி அவள் காதைத் துளைக்கிறது—கலங்கிய நெஞ்சுடன் அவள் கதவைத் திறந்தாள்—கருநிற ஆடையைத் தன் கருவுடல் முழுவதும் போர்த்திக்கொண்டு ஒருத்தி நின்று கொண்டிருப்பதை அவளுக்கு விண்விளக்குகள் விளக்கின.]

ரைனுதில்: விண்மீன்கள் கூட வெளிக்கிளம்ப அஞ்சும் இந் நேரத்தில் விளக்குடன் நீ எங்கு வந்தாய்? கருங்கலை மாதே!.... உன்னை எங்கோ கண்டவாறு தோன்றுகிறதே! நீ யார்?

அவள்: அரண்மனை அழகிகள் என்னை "அக்கா" என்று அழைப்பார்கள். அல்லாவே செய்து முடிக்காத அரிய காரியங்களைக் கூட நான் அதிவிரைவில் முடித்திடுவேன். பிரியமுடன் வாழும் காதலர்களைப் பிரிய வைத்திடுவேன். பிரிந்தவர்களைப் பிணைத்திடுவேன். "காம்வரியக்கா" என்றால் தெரியாதவர்கள் இந்த முகலாய சாம்ராஜ்யத்தில் இருக்கமாட்டார்கள்.

ரைனு: (குறுக்கிட்டு) காம்வரி!....உனது ஆற்றல் இருக்கட்டும்!...நீ என்னை அணுகியதன் காரணம்....?

காம்வரி: அரண்மனை அழகிகள் என்னை "அக்கா" என்று அழைப்பார்கள். அல்லாவே செய்து முடிக்க முடியாத அரிய காரியங்களைக் கூட நான் அதிவிரைவில் முடித்திடுவேன். பிரியமுடன் வாழும் காதலர்களைப் பிரிய வைத்திடுவேன். பிரிந்தவர்களைப் பிணைத்திடுவேன். "காம்வரியக்கா" என்றால் தெரியாதவர்கள் முகலாய சாம்ராஜ்யத்தில் இருக்கமாட்டார்கள்.

ரைனு: (பயந்தவாறு) என் நெஞ்சு படபடக்கிறதே!....என்னை ஏன் இப்படி பயமுறுத்துகிறாய்?

காம்: வேட்டைக்குச் சென்ற தாரா வீடு திரும்பிவிட்டார். என்றாலும் வேதனை உள்ளத்துடன் துடித்துக் கொண்டிருக்கிறார் உன்னை விரைவில் காண வேண்டுமாம்!

ரைனு: காம்வரி!...இளவரசருக்கா இன்னல் நேர்ந்தது? தாரா இருக்கும் இடத்திற்கு என்னை நேராக அழைத்துச் செல்லுகிறாயா?

காம்: உன்னை அழைத்துச் செல்வதற்காகத்தானே நானும் இங்கு வந்திருக்கிறேன்.

[ரைனுதில்லும் காம்வரியும் காரிருளைக் கிழித்துக் கொண்டு ஓடுகிறார்கள் — கடைசியாக பாதாள அறையின் ஒரு பக்கத்தில் வருகிறார்கள்—பயந்த நெஞ்சோடு பாதையைப் பார்க்கிறாள் ரைனுதில்—அவள் உடல் அவளையறியாமலேயே ஆடத் தொடங்குகிறது—காம்வரி சனுவில் பயமுறுத்திய அந்த கோர ஒலி அவள் காதுகளில் ஒலிக்கிறது.]

ரைனு: காம்வரி!...இளவரசர் எங்கே? இருட்டில் என்னை எங்கே அழைத்துச் செல்லுகிறாய்?

[காம்வரி மறைகிறாள்—மகுடியின் சப்தம் அவள் மனதைக் கலக்குகிறது–மகுடி ஒலி அவளுக்கு மரண கீதமாகக் காணப்படுகிறது.]

பரல்–5.

[இடம்: பேகம் மகல். நேரம்: இரவு. தாரா, அவனுடைய இளைய சகோதரியான பேகம். எரியும் தீவட்டிகளின் நெருப்பைக் காட்டிலும் இளவரசன் தாராவின் நெஞ்சத்தில் நெருப்பு நீண்டு உயர்கிறது— அவனுடைய மற்றொரு இளைய சகோதரியான பேகமும் சோகமுடன் அவனுடன் உலவிக் கொண்டிருக்கிறாள்.]

தாரா: தங்கச்சி!...அந்தத் தையலின் வரவின்றி என்னுள்ளம் தணலாய் தகிக்கிறதே! என் தவிப்பை யார் அறியப் போகிறார்கள்? என் மனதிலிருத்திய மடந்தையாயிற்றே அவள்! அவளை மறக்காமல் இருக்க முடியவில்லையே!...எத்தனையோ அழகிகள் மேலெல்லாம் நான் ஆசைப்பட்டிருக்கலாம். என்றாலும் அவள் அழகரசியாகவன்றோ தோன்றுகிறாள்? அந்த அழகரசியைக் காணாமல் என் மனம் அமைதி கொள்ளவில்லையே!......தங்கச்சி!... என்னை ஏன் இங்கு அழைத்தாய்?

பேகம்: அண்ணா!...உற்சாகமற்று உன் உடல் அலுத்துக் காணப்படுகிறது, அரசியல் பற்றற்று அலைமோதிக் கிடக்கிறது உன் உள்ளம். நம் தந்தை பாதுஷா ஷாஜகானுக்கு நீ தானே ஆதரவு; அரசாளப் போகும் நீயே அலுத்துக் கிடந்தால், ஆட்சி நடைபெறுவதுதான் எப்படி?

தாரா: (கோபமுடன்) நாடு நாசமாகப் போகட்டுமே!... அதைப் பற்றி எனக்கென்ன? அவர் என்னைப் பெற்ற தந்தையாக இருந்தால் பேதை ரைனாதில்லை மரணக்குழியில் தள்ளுவாரா? வாளை உறையிலிட்டுக் கொண்டு வாளாவிருக்கிறேனே!...மன்னும் எனது காதல் வாழ்வை மாய்த்திடத் துணிந்த மடையர்களை வெட்டி வீழ்த்தாமல் வீணாக வாழ்கிறேனே!....

பேகம்: ஆத்திரப்படாதீர்களண்ணா!..........பத்திரமாகத்தான் இருக்கிறாள் ரைனாதில்.

தாரா: இறந்த ரைனாதில் இருக்கிறாள் என்று சொன்னால் யார் இதை நம்புவது? எள்ளி நகையாடுவது உனக்கு இன்பமாக இருக்கிறதா. சோதரி?...

பேகம்: எள்ளி நகையாடவில்லையண்ணா!....இருப்பதைத்தான் சொல்லுகிறேன்.

தாரா: ஆச்சரியமாக இருக்கிறதே!...

பேகம்: இருக்கத்தான் செய்யும் அண்ணா! வேஷக்காரி ரோஷனாரா உனக்கு எதிரி. உங்கள் காதலைக் கலைக்க வேலை செய்து கொண்டிருக்கிறாள். பாதாள சிறையில் ரைனாதில்லை வைத்திருக்

கிருள் அந்த வஞ்சகக்காரி, அப்பாவின் ஆதரவு பெற்று கட்டாயம் நாம் ரைஞதில்லை அடைந்து விடலாம் கலங்காதீர்களண்ணு!

[சிற்ருறு சிரிப்பொலியையும், புல்புல் பறவைகள் புளகாங்கிதமுற்று இசைக்கும் இசையையும், படகோட்டிகளின் பரவசப் பண்ணையும் கேட்டு குதூகலமடைகின்றனர். பிறகு தாரா அவன் தங் கையை விட்டுச் செல்கிருன்.]

பரல்–6.

[தாராவுக்கும் ரைஞதில்லுக்கும் திருமணம் நடக்கிறது—மண நாளைக் குறித்து மகிழ்ச்சி பொங்கும் நடனங்கள் – நாடகங்கள்—கருத்திற்குக் களிப்பூட்டும் இசைக் கச்சேரிகள் எல்லாம் நடக்கின்றன—மணிமுடி தரித்து விட்டான் மன்னன் தாராஷிகோ—ஓர் நாள்...

தாராவின் சகோதரர்களான ஔரங்கசீப்பும் முராத் பக்சூவும் போர்க் கோலங் கொண்டு டில்லியை நோக்கி வருகிருர்கள்—தாரா இச் செய்தி கேட்டு சீறியெழுகிருன்—தாராவின் படைகள் நேராக டில்லி நோக்கி பறக்கின்றன—ஒவ்வொரு போர் வீரர்களுடைய கரங்களிலும் ஈட்டி, கேடயங்களென தவழ்ந்தாடுகிறது—தாராவின் படைகள் புலிகளென போர்புரிந்திட்ட போதிலும் பலன் தோல்விதான்—உள்ளக் குமுறலுடன் ஒளிந்து கொள்ளுவதின் பொருட்டு ஓடுகிருன் தாரா—ரைஞதில்லிடம் வந்து....]

தாரா: ரைஞதில் கவலையைப் போக்க அந்தக் கனி ரசத்தைக் கொடு.

[அவள் கையிலிருந்த திராட்சை ரசத்தை வாங்கிக் குடிக்கிருன்—அந்தக் கட்டழகியின் முகம் கலை சொட்டக் காட்சியளிக்கிறது—அதைக் கண்டவாறே நிற்கின்ருன் தாரா.]

தாரா: ரைஞதில்!...நான் என் முடிவை முத்தமிடப் போகிறேன். உன் முடிவு?...

ரைஞ: (குமுறும் உள்ளத்துடன்) அன்பரே!...அந்த அரக்கன் ஔரங்கசீப்பிற்கு ஆசைநாயகியாக நான் ஒருக் காலும் வாழ மாட்டேன். நான் உங்கள் அன்பின் அடிமையே தவிர, உலுத்தர் களுக் கெல்லாம் உல்லாசம் தரும் கருவியல்ல.

தாரா: கண்ணீர் வழிந்து நிற்கும் உன் கன்னங்கள் கூட என்னை என்றும் காதலிப்பதாகத்தான் கூறுகிறது.

பரல்–7.

[அன்றிரவு தாரா கைது செய்யப்படுகிருள் – ரைஞதில்லும் அவனைச் சார்ந்த அனைவரையும் காவலில் வைக்கிருன் ஔரங்கசீப் அழகி ரைஞதில்லை அற்பன் ஔரங்கசீப் அடையமுயல்கிருன்—இதையறிந்த ரைஞதில் அழுது புலம்பிக் கண்ணீர் வடிக்கிருள்-ரைஞதில் கண்ணீர் வடிப்பதைக் கண்ட தோழியொருத்தி அவளை தேற்றுகிருள்.]

தோழி: ரைஞதில்!...அழுது புலம்பிக் கொண்டிருந்தால் நாம் அவரை அடைந்து விடமுடியுமா?

ரைனு: சரி....அதிருக்கட்டும்! ........நீ அறிவிழந்த ஔரங்க சீப்பிடம் சென்று "நீர் அவளிடம் எதை விரும்புகிறீர்கள்?" என்று கேட்டு வா.




[ஔரங்கசீப்பிடம் வந்து கூறிய பின்னர்....]

தோழி: இதை உடனே உங்களிடம் கேட்டுவரச் சொன்னுள் ரைனுதில்.

ஔரங்கசீப்: ....ம்!....கேட்டு வரச் சொல்லியிருப்பாள் அக்கிளி! ....ம்!....கூட்டி வரச் சொல்லவில்லை?

தோழி: இல்லை. கேட்டு வரத்தான் சொன்னுள்.

ஔரங்: கொண்டலையொத்த அவளது கூந்தலை விரும்புகின்றேன் என்று போய் சொல்!

[சிறிது நாழிகை கழித்து அவள் ஒரு தட்டுடன் திரும்பி வருகிருள்.]

ஔரங்: ...ம்!...கூந்தலை வெட்டி கொடுத்தனுப்பி விட்டாளா அந்த ஆணவக்காரி?.... அவள் மோகன முகத்தை நான் விரும்புவதாகப் போய் சொல்! விரைந்து செல்!

[கொஞ்ச நேரம் கழித்து அவள் மறுபடியும் திரும்பி வருகிருள்.]

தோழி: இரத்தம் தோய்ந்த இரத்தத் துணியை உங்களிடம் கொடுக்கச் சொன்னுள் ரைனுதில். இரத்தம் வேண்டுமென்ருலும் தத்தம் செய்யத் தயாராக இருக்கிருளாம்!

ஔரங்: அய்யோ!...எனது அண்ணன் மனைவியை நான் ஆசை நாயகியாக்கிக் கொள்ள விரும்பினேன். அவள் குளிர் நிலவு முகத்தை நான் கோரமாக்கிவிட்டேன்! இனி, நான் ரைனுதில்லுக்குத் துன்பம் செய்யத் துணிய மாட்டேன். இனி அவள் சுகமாக அரண்மனையில் வாழலாம். நான் திருந்தி விட்டதாகப் போய் சொல்!

[அன்றிரவு தாரா தூக்கிலிடப்பட்டான் என்ற செய்தி கேட்டு ரைனுதில் துடியாய்த் துடிக்கிருள்.]

ரைனு: ஆ!....இளவரசர் இறந்தா போய் விட்டார்? அய்யோ! இனி ஏன் நான் இவ்வுலகில் வாழ வேண்டும்? இதோ நானும் அவருடன் செல்கிறேன். எரிந்து கொண்டிருக்கும் விளக்குகளே நான் இறப்பதற்குத் துணையாக இருக்கட்டும்!

[என்று கூறியவாறே தன் உடையில் தீயைப்பற்ற வைத்துக் கொள்ளுகிருள்.]



# சபலத்தின் சரிவு

**புத்தனேரி ரா. வேங்கடாசலம்**

"ஏம்மா! பாம்பாட்டி யாராவது இருக்காங்களா? தெரியுமா?'' என்ற வார்த்தைகளைப் பண்ணை இசைத்துப் பாவையவளின் கவனத்தை இழுத்தான் பாலசுந்தரம்.

பிரமணை பின்னும் வேலையிலே முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்த அந்தப்பெண் காக்கை தலையைச் சாய்ப்பதுபோல் தலையைச் சாய்த்து ஓரக்கண்களால் ஏறிட்டுப் பார்த்தாள் அவனை. பாலசுந்தரம் அவளது முகத்தைப் பூரணமாகப் பார்த்தபோது ஆச்சரியம் அவனை ஆட்கொண்டது. ஏறிய நெற்றி, எடுப்பான மூக்கு, கூர்மையான — குளுமையான— பார்வையுடைய கண்கள், குழிவிழும் கன்னங்கள், கவர்ச்சிகரமான நிறம் அத்தனையும் அவளது அம்சங்கள்!

"என்ன சாமி! அப்படிப் பாக்கிறே!......யார் வேணும் உங்களுக்கு?'' என்ற அவளது இனிய குரல் அவனை வெட்கச் செய்தது; சமாளித்துக் கொண்டான்.

"யாராவது பாம்பாட்டியை உனக்குத் தெரியுமா?''

"பாம்பாட்டியா? ஓ! இருக்காங்களே! ஏன் நாங்களே பாம்பாட்டிங்கதான்! ஏன்சாமி ஏதாவது பாம்பு பிடிக்கணுமா?'' சட்டியிலிட்ட கடுகெனப் பொரிந்தாள் அவள்.

"பாம்பு கீம்பு பிடிக்க வேண்டாம். எனக்கு பாம்பாட்டி உடைதான் வேணும் ஒரு நாளைக்கு''

"உங்களுக்கா? இந்த வம்பெல்லாம் எதுக்குங்க?''

"வம்பு தும்பெல்லாமில்லே நான் வேலைபார்க்கிற இடத்திலே வேடப்போட்டி நடக்கப்போகுது அதில் நான் பாம்பாட்டியாகப் போகணும்''

"ஓகோ! அப்பண்ணு எங்க வீட்டுப் பக்கம் வர்றீங்களா?''

திடுக்கிட்டான் பாலசுந்தரம். என்ன துணிச்சல் என்றது அவன் உள்ளம். வார்த்தைகள் விபரீதமாகப்பட்டது அவன் 'படித்த' அறிவுக்கு.

"ஏன் சாமி அப்படி முழிக்கிறே? இம்மாம் பெரிய பட்டணத்திலே உங்கமாடி வீட்டைத்தேடிப் பிடிக்க எங்களாலே முடியுமா சாமி? எங்க ஊடுண்ணு ஆத்

துக்கு அக்கரையிலே இருக்கிற குடிசைகள். நீங்க லகுவாகக் கண்டு புடிக்கலாம்னு சொன்னேன், கோபங்களா?'' வார்த்தைகளிலே அடக்கஒடுக்கம் தொனித்தது.

''அதெல்லாமில்லே. எதுக்கும் என் விலாசத்தைத் தருகிறேன். பாம்பாட்டியை என்னை வந்து பார்க்கச் சொல்லு''

ஒரு தாளிலே விலாசத்தை எழுதி நீட்டினுன் அவளிடம், அவள் கூச்சம் எதுவுமின்றி அவன் கையிலிருந்த தாளை எட்டி வாங்கினுள். அவள் கை அவன் கையைத் தீண்டியது எதேச்சையாக. அந்த நிகழ்ச்சி அவன் அதம உள்ளத்தில் ஒரு அற்பச் சபலத்தைத் தோற்றுவித்தது.

சந்தையை விட்டு வெளியேறி வீட்டை அடையுமுன் அவன் உள்ளக் கடலிலே தோன்றி மறைந்த குமிழிகள் பல. ஆனுல் அத்தனையும் அவளைப் பற்றி, அவளை வலையிலே வீழ்த்துவது பற்றித்தான்! ஏழை--அதிலும் ஒதுக்கப்பட்டவள்-ஒதுங்கி வாழுபவள். எனவே எளிதாக நிறைவேற்றிக் கொள்ளலாம் தன் இச்சையை என்ற நினைவு நிலைத்துநின்றது அவன் நெஞ்சத்திலே.

இரண்டு நாட்கள் கடந்தன. எதிர்பார்த்த பாம்பாட்டி வரவில்லை! எண்ணினுன் தானே சென்றுபார்த்தாலென்ன என்று! சாதாரண நாளென்ருல் அவள் வாழும் சேரி — ஆபாசத்தின் இருப்பிடமாக, அந்தக் கூட்டம்— மனித சமுதாயத்திலே வாழக் கூடாதவர்களாகத் தோன்றியிருக்கும் அவனுக்கு. இப்போது அவள் பருவம், அவள் உடலின் கவர்ச்சி அவன் கேவலநினைப்பை மாற்றி விட்டது. சுயநலத்திலே அவனை அறியாமலே தீண்டாமையை ஒழிக்க முன்வந்தான். புறப்பட்டான் அப் பொற்கிளியைத் தேடி—பாம்பாட்டி சாக்காக!

மாலை மறைந்து எங்கும் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. ஆற்றைக் கடந்து சேரியை நெருங்கினுன். குடிசைகள் இருப்பிடம் கூடத் தெரியாமல் இருட்டி விட்டது. ஓரிரு இடங்களில் 'மினுக் மினுக்' என்ற ஒளி வீசிக்கொண்டிருந்தது. 'டக் டக்' என்ற ஒலியைத் தவிர எங்கும் அமைதியாக இருந்தது, கூர்ந்து நோக்கினுன். எரிகின்ற நெருப்பிலிருந்து எழுந்த ஒரு சுடரின் ஒளியிலே அவள் சிற்றுரலிலே எதையோ குத்திக்கொண்டிருந்தது தோன்றி மறைந்தது அவன் கண்களுக்கு. ஆனுல் அவன் மனத்திரையிலே அந்த ஒரு விநாடிக் காட்சி படமாகப் பதிந்து அவன் கிளர்ச்சியை வளர்த்தது, அவனை அறியாமலே கால்கள் அவளை நோக்கி நடந்தன. ஒரு நாயின் உறுமல் அவனைத் தடுத்து நிறுத்திற்று.

யாரது? என்ற ஒரு முரட்டுக் குரல் அவனை உலுப்பிற்று.

உடல் பதற, நாக்குழற ''நா...ன்....தான்! பாம்பாட்டியைப் பார்க்கணும்'' என்ருன் பாலசுந்தரம்.

''ஓ! அந்தச் சாமியா? வாங்க! பாம்பாட்டிங்க ஊரிலில்லிங்களே?'' என்ற அவள் வார்த்தைகளிலே விஷமம் தொனிப்பதாகப் பட்டது.

''இவருதானு?...சாமி! நாங்க நாலு குடும்பம். இப்ப நான் ஒருத்தன் தான் இருக்கேன். மற்ற

வங்க அவசரமா வேற்றூருக்குப் போயிருக்காங்க. வர ஒரு வாரம் பிடிக்குமே!'' என்றது ஆண் குரல்,

"ஏன் நீ அந்தத் தொழில் செய்யிறதில்லையா?''

சற்று நேர மௌனம் அவனைச் சந்தேகமுறச் செய்தது. 'சிகரெட்' பற்றவைக்கும் சாக்கில் நெருப்புக்குச்சியை எடுத்துப் பொருத்தினுன். அவனைப் பார்ப்பதுபோல அவள் உருவைக் காண! வெளிச்சம் பரவுமுன் அவள் சட்டென்று பாம்பாட்டியின் பின்னே ஒளிந்துகொண்டாள்—தன் அரைகுறைக் கிழிந்த ஆடையில் உடலை மறைப்பது முடியாது என்பதால். பாம்பாட்டியின் உருவம் பளிச்சென்று தோன்றி மறைந்தது, பாம்பாட்டி சிலைபோல் நின்றிருந்தான். அவன் கண்கள் நீரைக் கக்கின!

"என்னப்பா! நான் கேட்பதற்குப் பதில் கூருமல் கண்ணீர் வடிக்கிருயே! ஏன்?'' பாலசுந்தரம் திகைப்புடன் கேட்டான்.

"ஒன்றுமில்லை சாமி!...ம்.... உங்களுக்கு உடையும் மகுடியுந் தானே வேண்டும்? தருகிறேன்'' என்று கூறிக் குடிசைக்குள் நுழைந்தான் அவன் — அவள் பின் தொடர.

ஆளைப் பார்த்தால் முரடனுயிருக்கிருன். குரல் இடியோசை போலிருக்கிறது. அவனுக்குக் கூட கண்ணீர் வருகிறதே! அதிலும் 'நீ பாம்பாட்டி யில்லையா?' என்ற கேள்விக்கு! ஆச்சரியமாக இருந்தது பாலசுந்தரத்துக்கு. எப்படியும் காரணம் அறிந்து கொள்ள வேண்டும் என்ற முடிவுக்குவந்தான் அவன். மீண்டும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கத் தீக்குச்சியைக் கிழித்த போது இருவரும் குடிசையினின்று வெளிவருவது நன்கு தெரிந்தது. அவள் ஒரு கம்பளிப் போர்வைக்குள் தன்னை மறைத்திருந்தாள்!

பாம்பாட்டி மௌனமாக சாமான்களைக் கொண்டு வந்து பாலசுந்தரத்திடம் கொடுத்தான்.

"சாமி! நாங்க ஏழைக் குடும்பம். நீங்க பார்த்து நல்ல கூலி கொடுங்க, அத்தோட நீங்க அன்னிக்குப் போட்டுக்கிற துணிமணிகளையும் எனக்கே கொடுத்திடணுங்க!'' என்ருன் கனத்த குரலிலே அடக்கத்தோடு.

"அது சரி! மகுடியை ஊதிக் காட்டு, நான் தெரிஞ்சுக்கிட வேண்டாம்.'' வேணுமென்றே தான் கேட்டான் பாலசுந்தரம். பாம்பாட்டியின் கலக்கத்தின் காரணம் கேட்க ஒரு வாய்ப்பு கிடைக்கட்டும் என்ற நினைவில்.

"இல்லீங்க சாமி! நான் மகுடி ஊதரதை விட்டு வருஷம் பதினெட்டாச்சுங்க. மன்னிச்சிருங்க'' என்ருன் வருத்தம் தோய்ந்த குரலோடு.

"ஏனப்பா? என்ன விஷயம்னு நான் அறியக் கூடாதா? கேள்வியினூடே இருளைக் கிழித்துக் கொண்டு பார்வையைச் செலுத்தினன் பாவையிருக்கும்இடத்தை நோக்கி.

"அதெல்லாம் எதுக்கு சாமி! நான் வேணும்னு ஊதரேங்க'' என்று குறுக்கிட்ட அவள் சட்டென்று அவனை நெருங்கிக் கையிலிருந்த மகுடியைப் பிடுங்கி ஊத ஆரம்பித்தாள்.

"ஏ! மூதி! போ! அந்தாண்டே!'' என்று இறைந்து அவள் கையிலிருந்த மகுடியைப்

பிடுங்கினுன் அவன். அவள் திடுக்கிட்டு ஒதுங்கினுள், பாலசுந் தரமும் திடுக்கிட்டான்.

"சாமி! நான் அவசியம் அந் தக் கதையை உங்களுக்குச் சொல்லித்தான் தீரணுங்க. ஆமா! மிக அவசியந்தாங்க" கண்டிப் பும் கடுமையும் அவன் குரலிலே தொனித்தன.

"பதினெட்டு வருஷம்! ஆமாம்! அவ—என் பொம்பளே—செத் துப் பதினெட்டு வருஷம் கழிஞ்சு கொண்டு வரச்சொல்லி நிறைய வாங்கினுரு.

அந்த மனுஷன் பாழான எண்ணம் வச்சிருப்பாருன்னு தெரியாமப்போச்சு, ஒரு நாள் வி(ய்)க்கச் சென்ற பொம் பளேயை வெகு நேரமாகக் காணும். குழந்தையை—இவளே தான்—அழுகையை அமத்து வது கஷ்டமாப் போச்சு. இரவுவந்து சேர்ந்தா, தலேவிரி கோலமா, தட்டுத்தடுமாறிக்



போச்சு. எங்க சொந்த இடம் தாராபுரங்க. அப்போ நாங்க பத்துப் பன்னிரெண்டு குடும்பம் ஒத்துமையா வாழ்ந்தோம். பாம்பு பிடிப்பது, குரங்காட்டு வது, பிரிமணே, முறம் செய்து விற்பது இவைகள்தான் எங்க பொளப்பு. ஒரு சமயம் பிரிமணே முறம் வி(ய்)க்கச் சென்ற என் பொம்பளேமேலே ஒரு மாடி வீட்டு மனுஷன்கண்ணு விழுந்தது அவர் அடிக்கடி முறம், பிரிமணே கிட்டு, என்னன்னு சொல்ற துங்க. வி(ய்)க்கப் போனவளே வீட்டிலடைத்து விபசாரியாக்கீட் டாரு. கொதிச்சேன். ஏழைன்ன ஒழுக்கமில்லாதவளா? என் இள மைத் துடிப்பு பழிக்குப் பழி வாங்க நினேத்தது, மாடிவீட்டு மவராசனே எவ்வகையில் பழி வாங்குவதுன்னு யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். கருப் பைக்(கற்பை) கெடுத்தவனேக்

காலனுக்கு இரையாக்குவதே சரின்னு பட்டது.

என்னிடமிருந்த பாம்பெல்லாம் பல்லைப் பிடுங்கியவையாக இருந்தன. மகுடியை எடுத்தேன், மலை, காடுகளெல்லாம் சுற்றினேன். ஒரு நல்ல பாம்போடு திரும்பினேன்.

ஒரு நாள் நடு ராத்திரி திட்டப்படி நானும் என் பொம்பளையும் அவன் வீட்டை அடைஞ்சோம். அவளைப் போய்க் கதவைத் தட்டச் செய்தேன். எதிர்பார்த்திருந்தான் அவன் ஏற்பாட்டின்படி. கதவைத் திறந்தான். நானும் கயிற்றைக் கட்டிக் கதவோரத்தில் தயாராக வைத்திருந்த கூடையின் மூடிக்கயிற்றை இழுத்தேன். அடுத்தவினடி "ஐயோ!" "ஐயோ!!" என்ற இரு குரல்கள் கேட்டன. எனக்கு விவரம் புரிஞ்சுப்போச்சு. பாம்பு இருவரையும் கொத்திவிட்டது. பதறினேன், என்ன செய்வதென்றே புரியவில்லை. தாமசிச்சால் ஆபத்துன்னு பயந்து கயிற்றை இழுத்துக் கூடையை எடுத்துக்கொண்டு குடிசையை அடைஞ்சேன். இரவு முழுதும் அழுதேன். புரண்டேன். எங்களவங்களுக்கு எதுவும் தெரியாது.

விடிந்ததும் அவளைக் காணேமென்று முன்னெச்சரிக்கையாகத் தேடுவதுபோல் தேடினேன். ஊருக்குள் சென்றேன். ஊரெல்லாம் "குறவச்சி தொடர்பு. பாம்பு கடிச்சி இருவரும் செத்துப்போனங்க" என்ற பேச்சு. நானும் அலறியடித்துக்கொண்டு ஓடினேன். என் கால் சுவடோ கூடையை இழுத்த தடமோ தெரியாமல் கூட்டத்தவங்க காலடி மறைச்சிடுச்சு, போலீசு வந்தது, என்னென்னவோ கேட்டாங்க. கடைசியிலே அவ பிணத்தை ஒப்பிச்சாங்க. அவளை எரிக்கிறபோது என் உள்ளமும் எரிஞ்சுது. அன்றிலிருந்து பாம்பாட்டித் தொழிலை மறந்துட்டேன், ஊரைவிட்டேக் கிளம்பினேன். அந்தச் சாமான்களைத்தான் பாருங்களேன். எவ்வளவு பழசாப்போச்சு—அதுவும் பத்திரப்படுத்தி வச்சது. அவ நினைப்புக்கு இவளும் இந்தச் சாமான்களுந்தான் நான் காத்துவர்றேன். ஆன பாருங்க இதுவும் அவ அம்மா மாதிரியே வெகுளியா இருக்கு. எந்தப் பாவி மகன் கண்ணுலேயும் விழக்கூடாதேன்னு கவனிச்சிக்கிட்டு வாரேன். இருந்தும் பிடிவாதமா சந்தைக்குப் போறதும் சளசளவென்று பேசறதுமா இருக்குங்க,"

பாலசுந்தரம் உடல் 'பட பட' வென்று நடுங்கிக் கொண்டிருந்தது. பாம்பாட்டி கதையை முடித்துங்கூட பேச முடியாமல் நாக்கு மேல் நாடியோடு ஒட்டிக்கொண்டது. ஒன்றும் கூருமல் 'விடுவிடு' வென்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

"என்ன சாமி! சாமான்கள் வேண்டாமா? பேசாமப் போறீங்களே!" என்ற பாம்பாட்டியின் குரல் பலமாகக் கேட்டும் திரும்பாமல் சென்றுன்—இல்லை ஓடினன் அவன்!

'கதை அவர் மனசுலேயும் பதிஞ்சு போச்சு. அதுதான் பாம்பாட்டி வேடமே வேண்டாம்னு போயிட்டாரு' என்று நினைத்துக் கொண்டான் பாம்பாட்டி.

ஆனால் குற்றமுள்ள நெஞ்சுடைய பாலசுந்தரம் தப்பினல் போதுமெனப் பயத்தால் ஓடுகிறுனென்பது அவனுக்கெங்கே தெரியும்?

✱

# திக்குவாயன்?

உலகப்பன்

ஆதன்ஸ் கடற்கரை.

அலைகள் அள்ளி அடித்துக் குமுறிக் கொந்தளித்துப் புரண்டு கொண்டிருந்தன.

அலையோசைக்கும் மேலாக அவன் கத்திக்கொண்டிருந்தான். அப்பப்பா அவன் பேசும்போது முகம் ஏழு கோணலாக மாறியது. எனினும் அவன் பேசிக்கொண்டிருந்தான்.

ஆதன்ஸ் நகர மக்களே !.... அவனிக்கே அறிவு தரும் இன்ப கிரேக்கத்தின் எழில்மிகு நாடே...!

அவன் பேசிக்கொண்டிருந்தான். நாள் கணக்காக, மாதக் கணக்காக. பார்த்தவர் பரிதாபப் பட்டனர் அவன் படும் பாட்டைக் கண்டு.

'பித்தன்' என்றனர் சிலர். திக்குவாயன் என்றனர் பலர். எனினும் அவன் தினசரி அப்படியே பேசிக்கொண்டிருந்தான்.

* * *

ஆதன்ஸ் அறமன்றம்.

அவன் பேசினுன். ஆம், திக்குவாயன் பேசினுன். கண்டவர் வியக்கும்படி பேசினுன். வழக்கறிஞனுகப் பேசினுன்.

தந்தை இறக்கும் போது உயில் எழுதிவைத்த சொத்தை பாதுகாப்பாளராக நியமித்தவர்கள்கையாடி விட்டதைக் குற்றஞ்சாட்டிப் பேசினுன்.

வெற்றி பெற்ருன். ஆனுல் அதற்குள் சொத்து தொலைந்துவிட்டிருந்தது.

ஆனுல் அன்றைய பேச்சு அவனைக் கிரேக்க நாட்டிலேயே சிறந்த பேச்சாளனுக மாற்றி விட்டது.

* * *

பிலிப்—மாசிடோனியாவின் அரசன்—கிரேக்க நாட்டைத் தன்னடிக்கீழ் கொண்டுவர முயன்ருன். ஓரளவு வெற்றியும் பெற்றுக்கொண்டு முன்னேறினுன்.

திக்குவாயனுக்கு இந்த சேதி எட்டிற்று. அவன் குருதி கொப்பளித்தது. கிரேக்க நாட்டை அடிமைப்படுத்த காட்டுமிராண்டி முயற்சி—என்ற எண்ணம் ஆதன்ஸிலே குமுறலைத் தந்தது.

"பிலிப்புக்கு எதிரான பேச்சுக்கள்"

ஆம் திக்குவாயன் பேசினுன். மக்களைத் தட்டி எழுப்பினுன். கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு காட்டுமிராண்டியைத் தாக்க தயாராயினர்; பிலிப் புறங்காட்ட வேண்டியதாயிற்று.

* * *

ஆதன்ஸ் அருகிலுள்ள ஒலின்தஸ் பகுதியைத் தாக்கினுன் பிலிப். ஆதன்ஸ் படை அங்கு விரைந்தது உதவிக்கு. யூபியாவிற்கு மாற்றினுன் போர்க்களத்தை பிலிப். அங்கும் விரைந்தது படை. ஆனுல் முடிவு யூபியா விடுதலை பெற்றது. ஆனுல் ஒலின்தஸ் பிலிப் வசமாயிற்று.

ஆதன்ஸுக்கும் பிலிப்புக்கும் சமாதானப் பேச்சு. அதில் திக்குவாயன் ஒரு பிரதிநிதி ஆதன்ஸ் பக்கம். ஆனால் சமாதானப் பேச்சுப்படி நடக்காது ஒப்பந்தத்திலிருந்த சிறு தவறைப் பயன்படுத்திக் கொண்டான் பிலிப். அதைக் கண்டு கோபமுற்ற திக்குவாயன் நாடு திரும்பினன் ஆத்திரத்தோடு. அறியாத மக்கள் அவனைக் குற்றஞ் சாட்டினர்; அவன் சஞ்சலப்படவில்லை சந்தேகம் தெளியும் என்ற நம்பிக்கையினல்.

* * *

ஒரு சமயம் அவன் நாட்டுக்குப் புரிந்த சேவைக்காக சிறப்பு செய்வதாக இருந்தது. ஆனல் அவன் எதிரிகளோ சிறப்புச் செய்வதைத் தடுத்தனர். தடுத்ததோடு நிறுத்தவில்லை. சிறப்பு செய்வதற்கான முறையிலா திக்குவாயன் பணி புரிந்திருக்கிருன்? பிலிப்புடன் சமாதானம் பேசும்போது நாட்டை காட்டியல்லவா கொடுத்தான் என்று குற்றஞ் சாட்டினர் எதிரிகள். ஆனல் அறமன்றம் ஒப்புக் கொள்ள மறுத்தது குற்றச் சாட்டை. எதிரி ஓடிவிட்டான் நாட்டைவிட்டு.

**விற்பனையாளர்களுக்கு:**

கூடுதலாக இதழ்கள் வேண்டுவோர் அதற்குரிய முன் பணத்தொகையையும் தவருது முன் கூட்டியே அனுப்பி வைக்கவேண்டும்.

—பொறுப்பாளர்.

அவனே நாடு கடத்தப்பட்ட ரோட்ஸிலே ஆசிரியனுக பணியாற்றித் தொல்லைப்படும்போது திக்குவாயனிடம் உதவிபெற்ருன்.

* * *

அலெக்சாண்டர் மரணத்திற்குப் பின்பு ஆண்டிபேடர் அரசனுன அவன் ஆதன்ஸ் பாராளு மன்றத்திலேயே திக்குவாயனுக்கு எதிராக ஆட்களை ஏவி விட்டான்.

வீணுக நாட்டைப் போர் பாதையிலே தள்ளிவிடுகிருன் தன் பேச்சால் என்று குற்றம் சாட்டப்பட்டான்,

ஆதன்ஸுக்கும் மாசிடோனியாவிற்கும் ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமானல் திக்குவாயன் பிணையாக தன்னிடம் ஒப்புவிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டான்.

செய்தி தெரிந்தது திக்குவாயனுக்கு! பொசிடான் கோயிலில் குடிபுகுந்தான் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள. குமுறினன். கொந்தளித்தான். நாட்டுக்குப் பணி புரிந்த நன்மைக்கா இந்தப் பரிசு என்று ஏங்கினன்,

மக்களுக்கு அறிவூட்டியதற்காக நஞ்சுகுடித்த நல்லறிஞன்சாக்ரடீஸ் காட்சியில் தோன்றினர். பேனவில் ஒளித்து வைத்திருந்த நஞ்சை நாவிலே தோய்த்துக் கொண்டான்! குறைமதியாளர்களின் போக்கால் பொசிடான் கோவிலும் கறைபட்டது.

ரோமாபுரியின் சிறந்த பேச்சாளன் சிசரோ! அவன் திக்குவாயனைத் தன் குருவென்ருன்!

அறிஞர் அண்ணு திக்குவாயனை ஆதி பேச்சாளன் என்ருர்.

அவன் பெயர் டெமாஸ்தனிஸ்!

# வாழ்வுதானா?

(மக்களன்பன்)



“பொய் பேசுவது தவறல்ல;
ஆனால் அதன் பயன், இடம், விளைவு ஆகியவைகளை அறிந்துதான் பேசவேண்டும்”

இது அறிஞர் சாக்ரடீஸின் அனுபவ சித்தாந்தம்!

அதை அறிந்தோ அறியாமலோ சங்கரன் அன்று அப்படியே கடைப்பிடித்தான். எதற்கும் ஒரு காரணம் இருக்குமல்லவா...? அதுதான் இது:

சங்கரன் அன்று தன் அன்பு மனைவி சரோஜாவை வைத்திய விடுதிக்கு அழைத்து வந்திருந்தான். அவள் கடந்த இரண்டு மாதமாக ஓயாமல், ஒழியாமல் இருமிக்கொண்டே இருந்தாள். அதுவும் பத்துப் பதினைந்து நாட்களாக படுத்த படுக்கையாக கிடந்தாள். அந்தப் பரிதாபத்தைச் சங்கரனால் பார்க்க முடியவில்லை. பலமான பணமுடையின் மத்தியிலே எப்படியோ பணம் சேர்த்து, அவளை அன்று வைத்திய விடுதிக்கு அழைத்து வந்தான். பத்து ரூபாய் நோட்டை நீட்டியதும் டாக்டர் நோயாளியினிடம் பரிவு காட்டினார்; பரீட்சித்துப்பார்த்தார், பிறகு சங்கரனை தனியாக அழைத்து சரோஜாவின் வியாதியை “க்ஷயம்!” என்ற விலாசத்தின் கீழ் விபரமாக எடுத்துரைத்தார். அந்த பயங்கரமான வியாதியின் பெயரைக் கேட்டதும் சங்கரன் தீயை மிதித்தவன் போலத் திடுக்கிட்டான். க்ஷயம்...! இளைப்பிலே பொங்கும் இருமல் வியாதி! இருமினால் இரத்தம் கக்கும் கொடிய நோய்!! அவன் மனம் துணுக்குற்றது.

“மனிதர்கள்தான் தவறு செய்கிறார்கள் என்பதில்லை; சில சமயங்களில் தெய்வங்கள் கூடத் தவறு செய்து விடுகின்றன.”

என்று அவன் வாய் முணுமுணுத்தது. இல்லாமல் போனால் பணக்காரர்களாலேயே பராமரிக்க முடியாத அந்தப் பாழும் வியாதி, பஞ்சையிலும் பஞ்சையான சரோஜாவைப் பீடித்திருக்குமா.......?

“டாக்டர் என்ன சொன்னார்?” ஏக்கம் நிறைந்த சரோஜாவின் உள்ளத்தில் இருந்து எழுந்த கேள்வி இது. அந்தக் குரலிலே ஆவல் அலைமோதிக் கொண்டிருந்

தது. அதன் ஆழத்திலே கசப்பும் கவலையும் கலந்து ஒலித்தன.

சங்கரன் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

"எனக்கு என்ன வியாதியாம்...?"

சரோஜாவின் கேள்வி சங்கரனைத் தட்டி எழுப்பியது.

"க்ஷயரோகம்" என்று சொல்ல வாயெடுத்தான்; ஆனால் சொல்லவில்லை. ஆமாம் சொல்ல மனம் வரவில்லை. ஆளைக் கொல்லாமல் கொல்லும் அந்தப் பொல்லாத வியாதியைப்பற்றி அவளிடம் சொன்னால், அதன் விளைவு விபரீதமாகிவிடும் என்பது அவனுக்குத் தெரியாதா என்ன? ஆகவே அந்தப் பயங்கரமான வியாதியைப் "பலவீனம்" என்ற போர்வையால் மறைத்தான். ஆம், தன் அன்பு மனைவி சரோஜாவினிடமே அன்று பொய் பேசினன். அன்றைய சமய சந்தர்ப்பங்கள் சங்கரனைச் சாக்ரடீஸாக மாற்றிவிட்டது.

ஆனால் அவன் மனம்....?

புரையோடும் புண்ணாக—புயல் மோதும் படகாக—புகையும் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்தது.

அருகிலிருந்த தன் மனைவியை அனுதாபத்தோடு பார்த்தான். அவள் அவனைப் பரிவோடு பார்த்தாள். பார்வைகளின் கலப்பிலே பழம் நினைவுகள் படமெடுத்து ஓடியிருக்க வேண்டும். அவள் சிரித்தாள்.

சிரிப்பா அது........?

அஸ்தமிக்கும் சூரியரின் அந்திமச்சுடர்! அணையப்போகும் விளக்கினின்று தெறிக்கும் கடைசித் துடிப்பு!! மடிந்துபோன உள்ளத்திலிருந்து சிந்திய மரணப் புன்னகை!!!

இப்படி நினைத்த சங்கரனின் மனதிலே சங்கடம் சூழ்ந்தது.

ஒருவேளை "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கு, அவள் வழங்கும் அத்தாட்சிதான் அந்த சிரிப்பா....?

முடிவு கட்டமுடியாத நிலையில் அவன் மூளை சுழன்றது. ஆனால் அவன் அந்த சிரிப்பிலே சோகத்தின் சிகரத்தைக் கண்டான். வேதனையின் விளிம்பைக் கண்டான்.

"வீட்டுக்குப் போகலாமா....?"

சரோஜாவின் பேச்சிலே பெருமூச்சு கலந்து நின்றது.

சங்கரன் மீண்டும் அவளைப் பச்சாதாபத்தோடு பார்த்தான்.

ஒளியிழந்த கண்கள்; ஒட்டிப்போன கன்னங்கள்; உலர்ந்து போன உதடுகள்; உருக்குலைந்து நிற்கும் உடல்; சிதறிக் கிடக்கும் கூந்தல்; சின்னுபின்னமாகக் கிழிந்து தொங்கும் புடவை.......

அவன் கண்களைக் கண்ணீர் மறைத்தது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்த சரோஜாவா அவள்....அன்று அழகின் பொக்கிஷமாக இருந்த அவளை, இன்று அவலட்சணத்தின் பேழையாக்கி விட்டது க்ஷயம். ஆம், ஆளை அணு அணுவாகக் கொல்லும் அந்த அரக்க நோய், எழிலின் "எவரெஸ்ட்"டாக இருந்த அவளை எலும்புக்கூடாக மாற்றிவிட்டிருந்தது. பார்வையிலே பரவசத்தைக் காணோம்; இளமை இருந்த இடம் தெரியவில்லை.

அந்த நோய்...! கதி கலங்க வைக்கும் காச நோய்....! க்ஷயம்!

தன் அன்பு மனைவி சரோஜா வுக்கா அந்த வியாதி....?

சங்கரனின் வெந்துபோன மன திலே வேதனை பூகம்பம் வெடித்து விட்டது. அதன் வேகம் இறந்த காலத்தைப் பிடித்து இழுத்து வந்து அவன் எதிரே நிறுத்தியது.

* * *

"தெய்வாதீனம் பிரஸ்" முதலாளி தேவசகாயம் என்ருல் அழுத பிள்ளை வாய்மூடும். மதுரை வட்டாரத்திலே அவ்வளவு மதிப்பு அவருக்கு. அவர் பெரும் பணக்காரர் மட்டுமல்ல, பக்தரும் கூட. அவரது மனைவி தருமாம்பாள் பெயருக்குத் தகுந்த பெருந் தன்மை நிறைந்தவள். அவர்களுக்குச் சொந்தமாக "பக்தி விலாசம்" பங்களா இருந்தது. 'பாங்கில்' நிறையப் பணம் இருந்தது, பவனி வர "பாண்டியாக்" கார் இருந்தது. இவ்வளவு இருந்தும் அவர்கள் மனதிலே நிம்மதி இல்லை. காரணம் 'புத்திர பாக்யம்' இல்லாததுதான்!

அதற்காக அவர்கள் செய்யாத தான தருமங்கள் இல்லை. போகாத புண்ணிய க்ஷேத்திரங்கள் இல்லை. சுற்ருத அரசமரங்கள் கிடையாது. அர்ச்சனை அபிஷேகங்கள் செய்யாத ஆலயங்கள் இல்லை. முடிவில் குல தெய்வமான சங்கரனின் சந்நிதானத்தில் முறையிட்டனர். காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்த கதையைப் போலத்தானே, தருமாம்பாள் கருதரித்தாள்.

நாட்கள் வாரங்களாகி, மாதங்களை நகர்த்திக் கொண்டிருந்தன.

தருமாம்பாள் தனயனை ஈன்றெடுத்தாள். தேவசகாயத்திற்கு தலைகால் புரியாத மகிழ்ச்சி! சங்கரன் அருளால் பிறந்த தன் குழந்தைக்கு "சங்கரன்" என்றே பெயரிட்டாள்.

வளர்ப்பானேன்...? சங்கரன் தரையின் மேடுபள்ளம் தட்டாமல் தாயின் மடியிலே தவழ்ந்தான், வளர்ந்தான். தந்தையின் செல்வமும், தாயின் செல்லமும் சங்கரனைப் போட்டி போட்டுக் கொண்டு வளர்த்தன. அவனது மழலைப் பேச்சும் மறைந்தது. பள்ளிப் பருவத்தில் புத்தகக் கட்டுகளைச் சுமந்துகொண்டிருந்த போது வயிற்றுவலி எனப்படுத்த தருமாம்பாள் "வைகுண்டம்" சேர்ந்து விட்டாள். அன்று முதல் தேவசகாயமே சங்கரனுக்குத் தாயும் தந்தையுமாக இருந்து வந்தார். ஆனல் சங்கரன் கல்லூரி வாசலில் காலெடுத்து வைத்தவுடன் தேவசகாயம் "கைலாசம்" சேர்ந்து விட்டார்; அதெல்லாம் எவ்வளவு தூரம் உண்மையோ சங்கரனுக்குத் தெரியாது. 'பெரிய மனிதர்கள்' சொன்னதை அப்படியே நம்பினன். இல்லை; நாட்டின் போக்கு அவனை நம்பவைத்தது. பெற்ரோர்களைப் பறிகொடுத்த சங்கரன் பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பிரஸ் நிர்வாகத்தில் தன் முழு கவனத்தையும் செலுத்தினன். புதுமை எழுத்தாளர்களின் புத்தகங்களைப் பிரசுரித்தான். அறிஞர்களின் வரலாறுகளை அச்சிட்டான். விற்பனை அதிகரித்தது; பணமும், புகழும் குவிந்தது.

அந்த நிலையில்தான் சிங்காரத்துக்கும், சங்கரனுக்கும் நட்பு ஏற்பட்டது. சிங்காரம் ஒரு புதுமை எழுத்தாளன்; புரட்சிக் கவிஞன் ஆனல் அவனை மக்கள் மதிக்கவில்லை. அவன் எழுத்தைக்

கண்டு ஏளனம் செய்தனர். ஆனால் சங்கரன் அவன் எழுத்தில் இருந்த கருத்துக் குவியலைக் கண்டான். அதன் பயனாக சிங்காரம் எழுதிய சிறந்த சீர்திருத்தச் சிறுகதைகளை எல்லாம் "பழத்தோட்டம்" என்ற தலைப்புடன் புத்தகமாக வெளியிட்டான். "பழத்தோட்டம்" மக்களின் பார்வையைக் கவர்ந்தது. பலதரப்பட்ட மக்களும் அதனைப் படித்தனர்; பாராட்டினர். ஆயிரக் கணக்கான பிரதிகளுக்கு 'ஆர்டர்கள்' குவிந்தன. ஆனால் ஒரு எழுத்தாளன் புகழையும், பணத்தையும் ஒன்றாகப் பார்க்க வேண்டுமானால் கொள்கையற்ற கோழையாக இருக்க வேண்டும் அல்லது மக்கள் அவரைத் தெரிந்து கொள்ளாத நிலையிலேயே திடீரென்று இறந்து விட வேண்டும்.

இது தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் தலைவிதி! அதற்கு சிங்காரம் மட்டும் விதி விலக்கா என்ன...?

அன்று மாலை பழத்தோட்டத்தை எழுதியதற்கு பரிசாக ஆயிரம் ரூபாய் கொண்ட பணமுடிப்பை சிங்காரத்திற்குத் தர வேண்டுமென சங்கரன் முடிவு செய்திருந்தான். அதற்காக ஒரு பாராட்டுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து நகர பிரமுகர்களுக்கெல்லாம் அழைப்புகளும் அனுப்பியிருந்தான். ஆனால் அன்று காலையில் அவன் கேட்ட சேதி.

சிங்காரத்திற்கு கடுமையான ஜுரம் என்பதுதான்!

அந்தச் செய்தி சங்கரனைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. அவசரமாக அவன் வீட்டைத் தேடி விரைந்தான். அரிய பெரிய கருத்துக்களை அள்ளித் தெளித்த அறிஞன் சிங்காரம் இருந்த இடம் ஒரு சின்னஞ் சிறு குடிசை. சங்கரன் சஞ்சலத்தோடு உள்ளே நுழைந்தான். அங்கே கண்ட காட்சி....?

ஒரு கிழிந்துபோன பாயின் மீது சிங்காரம் சுருண்டு கிடந்தான். அவன் தங்கை சரோஜா அழுது வீங்கிய கண்களுடன் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். சங்கரன் அன்பும், அனுதாபமும் பொங்க சிங்காரத்தின் பக்கத்திலே சென்று உட்கார்ந்தான், சிங்காரம் ஒரு முறை கண்களைச் சிரமத்தோடு திறந்து பார்த்தான். களையிழந்து நின்ற அவன் கண்களிலே களிப்பு குமிழிட்டது. சங்கரனை உற்றுப்பார்த்தான். அவன் பார்வையிலே உறுதியும், முடிவும் பின்னிக் கிடந்தன. சரோஜாவைப் பார்த்தான் சகோதரத்வம் பொங்கி வழிந்தது, பிறகு சங்கரனின் பக்கம் திரும்பினான். அவன் உள்ளத் துடிப்பை உதடுகள் வெளியிட்டன. • • •

"சங்கர்! சரோஜா என் ஒரே சகோதரி; அவளை நீ தான் காப்...பா...ற்...'

வார்த்தைகள் முடியவில்லை அவன் வாய் அடைத்துக் கொண்டது.

வறுமை அவனுக்கு விலங்கிட்டது! ஆனால் வாழ்வு அவனுக்கு விடுதலை வழங்கி விட்டது!

ஆம். "அவன் உயிரோடு இருந்தபோது உலகம் அவனை மதிக்கவில்லை; உலகம் அவனை மதிக்க முன் வந்தபோது அவன் உயிரோடு இல்லை."

சரோஜா கதறினள்; கண்ணீர் விட்டாள். சங்கரன் செய்வதறியாமல் செயலற்று நின்ருன்.

“செத்த பிணத்தைக் கண்டு, சாகும் பிணங்களெல்லாம் ஏதுக் கழுகுதடி’’ தெருவில் யாரோ பிச்சைக்காரன் தன் பிழைப்புக்காகப் பாடிக் கொண்டிருந்தான்.

நேரப் புழு நெளிந்து கொண்டிருந்தது. முடியாத நிலைக்கு முடிவு....?

முடிவென்ன, சரோஜாவின் அழுகைக்கும், விம்மலுக்கும் இடையே சிங்காரத்தின் ஈமச் சடங்குகளை சங்கரன் செய்து முடித்தான்.



காலச் சக்கரம் சுழன்றுக்கொண்டிருந்தது!

சரோஜா சங்கரனின் பராமரிப்பிலேயே வாழ்ந்து வந்தாள். சங்கரனுக்குப் பெண் தர எத்தனையோ பணக்காரர்கள் போட்டி போட்டு கொண்டு முன் வந்தனர்; முற்றுகையிட்டனர். ஆனுல் சங்கரன் தனக்கு கல்யாணமே வேண்டாம் என்று தட்டிக் கழித்து விட்டான். சுற்றி வளைப்பானேன்:

சங்கரன் விசுவாமித்திர வாரிசுமல்ல; பீஷ்மரின் பரம்பரையுமல்ல; அனுதையான சரோஜாவையே தன் ஆசை மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்பது அவனது அந்தரங்க ஆசை. அவளும் அவனிடம் அன்பை சொரிந்தாள். அப்புறம் என்ன....? காதல் மலர்ந்தது; கல்யாணத்தில் முடிந்தது; அவ்வளவுதான்!

காலம் ஒரு மாயாவி; அது இரவைப் பகலாக்கும்; பகலை இரவாக்கும், இது உலகம் கண்ட உண்மை, அதன் சுழற்சியிலிருந்து தப்ப சங்கரனுக்கு மட்டும் சலுகை கிடைக்குமா?

சங்கரனும், சரோஜாவும் இணைபிரியாத் தம்பதிகளாக இருந்து வந்தனர்.

ஆனுல் பௌர்ணமிக்குப் பிறகு அமாவாசைதானே?

சங்கரனின் குபேர வாழ்வு, குசேல வாழ்வாக மாற ஆரம்பித்து விட்டது. கருவுற்றிருந்த

சரோஜாவுக்குப் புதுப்புது வியாதிகள் வந்த வண்ணமாகவே இருந்தன. அவளுக்கு வேண்டிய மருந்துகளை அவ்வப்போது வாங்கித் தரவும், மணிக்கணக்குத் தவருமல் அருகிலிருந்து மருந்துகளைத் தரவுமே சங்கரனுக்கு நேரம் சரியாக இருந்தது. அதனுல் பிரஸ் நிர்வாகத்தை அவனுல் கவனிக்க முடியவில்லை. அதன் பயன்:

தெய்வாதீனம் பிரஸ் தேடுவாரற்ற நிலைக்கு வந்துவிட்டது. வருமானம் இல்லாததால் சங்கரன் கடன் வாங்கினுன். சரோஜாவுக்குத் தேவையான மருந்துகளை சலிக்காமல் வாங்கிக் கொடுத்தான். ஆனுல் சரோஜாவுக்கு வரும் நோய்களும் சளைக்கவே இல்லை அதன் விளைவு....?

சங்கரனின் கடன் பட்டியல் பெருகியது.

சரோஜா ஒரு குழந்தைக்குத் தாயானுள். அவளது பிரசவ செலவின் புள்ளி விவரங்கள் 'பிரஸை' விற்கும்படி செய்துவிட்டன. மரணத்தின் மடியிலே நின்ற மனைவியையும், குழந்தையையும் பாதுகாக்கும் முயற்சியில், சங்கரன் தான் குடியிருந்த பங்களாவையும் பணயம் வைத்தான். ஆனுல் இரண்டு மாத மருந்துச் செலவுக்குப் பின் குழந்தை இறந்து விட்டது. சரோஜா சாவின் கோரப் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டாள், அவள் உடல் மிகவும் இளைத்துப் போயிருந்தது. சங்கரன் வீட்டை விற்று அவள் உடலைத் தேற்றி வந்தான்.

நாட்கள் உருண்டன.

சங்கரன் வேலை தேடும் முயற்சியில் வேகமாக ஈடுபட்டான், வேலை கிடைக்கவில்லை. வேண்டியவர்களெல்லாம் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டனர். சங்கரனது வீட்டிலிருந்த தங்க நகைகள் போன இடமே தெரியவில்லை. வெள்ளிச் சாமான்கள் வேகமாக மறைந்தன. இனி விற்பதற்கு வீட்டில் எதுவும் இல்லை!

சங்கரனது அவல நிலையைக் கண்ட சரோஜாவின் மனதைக் கவலைக் கரையான்கள் அரித்தன. அவளால் என்ன செய்ய முடியும்....? தன் கணவனது அரைப் பட்டினியைத் தவிர்க்க அவள் முழுப் பட்டினியாகக் கிடந்தாள். ஆம், வீட்டின் வறுமையை வெளிக்குத் தெரியாமல் மறைக்கப் பார்த்தாள்.

ஆனுல் முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைக்கப் பார்த்த கதையாகத்தான் இருந்தது அவள் முயற்சி!

அந் நிலையில் தான் காசநோய் அவளைப் பிடித்துக் கொண்டது. தன் வியாதியைத் தன் கணவனுக்குத் தெரியாமல் மறைத்து வந்தாள் சரோஜா. ஆனுல் வியாதியின் வேகம் அதிகரித்துவிடவே அவள் வீட்டு வேலைகளைச் செய்ய முடியாமல் தவித்தாள். நாளுக்கு நாள் எழுந்திருக்கவே முடியாத நிலையில் படுத்த படுக்கையாகிவிட்டாள். அவளை டாக்டரிடம் அழைத்துச் செல்லப் பணம் இல்லாமல் சங்கரன் பரிதவித்துக் கொண்டிருந்தான்.

அந்த சமயத்தில் ஒரு நாள் இரவு சரோஜா ஓயாமல் ஒழியாமல் இருமிக் கொண்டிருந்தாள். பிறகு விழுங்க முடியாத அளவுக்கு வாயிலே எச்சிலை அடக்க

முடியாமல் கீழே துப்பினாள். சற்று தூரத்தில் தூங்கிக் கொண்டிருந்த சங்கரன் திடுக்கிட்டு எழுந்தான். ஏதோ ஒரு இனம் தெரியாத திகில் அவன் இதயத்தைத் துளைத்தது. விளக்குத் திரியைப் பெரிதாகத் தூண்டிவிட்டு அவள் எச்சில் துப்பிய இடத்தைப் பார்த்தான், இரத்தம்....!

அவன் மனதிலே பயம் குடியேறிவிட்டது. அன்று இரவு முழுதும் அவன் தூங்கவே இல்லை.

அடுத்தநாள் எப்படியோ அவளை மருத்துவ மனைக்கு அழைத்து வந்தான்.

* * *

"கழுத்தளவுக்குக் கஷ்டங்கள் நிறைந்து விட்டாலும், காரியத்தில் நிதானம் தவறக்கூடாது..." இது சிந்தனையாளர் "டெனிக்லான்" சொன்ன சிறுவாசகம்!

அதை அப்படியே பிரதிபலித்தது சங்கரனது செயல்!

மருத்துவ மனையிலேயிருந்த சங்கரன் ஆலோசனைப் புழுதியிலே புரண்டு கொண்டிருந்தான். நடக்கக்கூடாதது நடந்து விட்டது. தன் மனைவிக்கு வரக்கூடாத வியாதி வந்துவிட்டது, இனி நடக்க வேண்டியது....?

"இறந்த காலத்தை வைத்துக் கொண்டுதான் எதிர் காலத்தை நிர்ணயிக்க வேண்டும்" என்று யாரோ, எப்போதோ சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. மீண்டும் அவன் மனம் கடந்த காலத்திலே கண்ணோட்டம் செலுத்தியது.

இறக்கும் தருவாயில் சிங்காரம், சரோஜாவைக் காப்பாற்றும்படி முறையிட்டுக் கூறிய அந்த முகாரி வார்த்தைகள், சங்கரனின் செவியிலே "மோகனம்" பாடியது.

உடனே சரோஜாவைக் காப்பாற்றியே தீரவேண்டும் என்ற உத்வேகத்துடன் எழுந்தான். சரோஜாவுக்கு அவன் போக்கு விளங்கவே இல்லை. அவனையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளையே அங்கேயே இருக்கும்படி கூறிவிட்டு சங்கரன் வெளியே போனான்.

சரோஜா விசனம் பொங்கிய உள்ளத்தோடு விநாடிகளை எண்ணிக் கொண்டிருந்தாள். நீண்ட நேரத்திற்குப் பிறகு சங்கரன் மீண்டும் வந்தான். சரோஜாவைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்தான். அதன் அர்த்தத்தை சரோஜாவால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் அதில் வழக்கமாக அரும்பும் புளகாங்கிதம் இல்லை; பூரிப்பு இல்லை, என்பதை மட்டும் அவள் கண்டு கொண்டாள்.

சங்கரன் நேராக டாக்டரிடம் சென்று ஏதோ பேசினான். பேச்சுவாக்கில் சங்கரனது கையிலிருந்த பணம் டாக்டரின் பைக்கு மாறியது. அடுத்த நிமிடம் சரோஜா வைத்திய மனையில் அனுமதிக்கப்பட்டாள். அவளுக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் அங்கே உடனுக்குடன் கவனிக்கப்பட்டன. சரோஜாவின் உடல் படுக்கையில் கிடந்தது. ஆனால் அவள் உள்ளம் என்னவெல்லாமோ நினைத்து, எங்கெல்லாமோ அலைந்துக் கொண்டிருந்தது.

சங்கரன் அடிக்கடி அவளை வந்து பார்ப்பான். டாக்டர் எழுதிக் கொடுக்கும் உயர்ந்த ரக

## அறிவிப்பு

சந்தா, ஏஜென்ஸி விபரங்களுக்கும், மணி ஆர்டர், போஸ்டல் ஆர்டர், செக் முதலியவைகள் அனுப்புவதற்கும்,

**பொன்னி லிமிடெட்**
**111, பவழக்காரத் தெரு,**
**சென்னை—1.**

என்று குறிப்பிடவும்.


மருந்துகளை எல்லாம் உவப்போடு வாங்கித் தருவான். அவனுக்கு அவ்வளவு பணம் எங்கிருந்து, எப்படிக் கிடைக்கிறது என்பதை அறிய சரோஜா துடித்தாள். ஆனால் அவள் பணத்தைப் பற்றிப்பேச ஆரம்பித்தால், சங்கரன் வேறு எதையாவது சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசி, பேச்சை மாற்றிவிடுவான்; மழுப்பிவிடுவான்.

மூன்று மாதங்கள் முழுக்க மறைந்து விட்டன. சரோஜாவின் வியாதி குணமடைந்து விட்டது.

ஆனால் மறுகணம்....?

அவன் மனம் துயரத் தீயால் துவண்டுவிட்டது, வெறுங்கையோடு— வேதனை நிறைந்த உள்ளத்தோடு சரோஜா பின்தொடர ஒரு சிறு குடிசைக்குள் நுழைந்தான், சரோஜாவின் மனதிலே சந்தேகமும், சஞ்சலமும் ஒரே காலத்தில் இணைந்து எழுந்தன. அதன் விளிம்பிலே வியப்பும், வினவும் விடை தேடி கின்றன.

"முன்பு இருந்த வீட்டிற்கு முப்பது ரூபாய் வாடகை தரமுடியாத நிலையில், இந்தக் குடிசையை இரண்டு ரூபாய் வாடகைக்கு எடுத்தேன்."

சங்கரனின் விடையிலே சாந்தம் தவழ்ந்தது.

சரோஜா அலைபாயும் நெஞ்சோடு, சிலையாக நின்றாள். அந்த சின்னஞ்சிறு குடிசையின் தோற்றம், அவள் மனத் திரையிலே பழைய சம்பவங்களைப் படம் பிடித்துக் காட்டியது. தன் தமையன் சிங்காரத்துடன் தரித்திர நிலையில் உழன்ற நாட்கள்... சிங்காரத்தின் முடிவு காலத்தில் ஏற்பட்ட சங்கரனின் சந்திப்பு.... அண்ணனின் மறைவு....சங்கரனுக்கும் தனக்கும் இடையே தோன்றிய இன்பக் காதல்....... வாழ்ந்த வாழ்வு ........ வந்துள்ள தாழ்வு.... எல்லாவற்றையும் சிந்தித்துக்கொண்டே இருந்தாள்.

வெளியே ஒரே கலவரம்; கூக்குரல்! அவள் சிந்தனை நூலில் சிக்கு விழுந்துவிட்டது. வேகமாக ஓடிவந்து வெளியே பார்த்தாள். தன் கணவனைச் சுற்றிலும் தாங்க முடியாத கூட்டம் கூடி இருப்பதைக் கண்டாள்; பயந்தாள்; விஷயம் தெரியாமல் விழித்தாள்.

சிறிது நேரம் பொறுமையுடன் போராடிக் கொண்டிருந்தாள். அவர்களெல்லாம் அவனது சுக துக்கங்களை விசாரிக்க வந்தவர்களல்ல; வாங்கிய கடனை வட்டியும் முதலுமாக கேட்க வந்தவர்கள் என்ற உண்மை விளங்கியது. எத்தனையோ நாட்களாக சரோஜாவுக்குப் புரியாமலிருந்த புதிருக்கு அன்று விடைகிடைத்து விட்டது!

அவர்களிடம் எப்படியெல்லாமோ பொய்சொல்லி வாங்கிய

கடனைக் கொண்டுதான், தன்னை காசநோயிலிருந்து தன் கணவன் காப்பாற்றி இருக்கிறார் என்பதை அறிந்ததும் சரோஜாவுக்கு அச்சமும், அழுகையும் பீறிட்டுக் கொண்டு கிளம்பின. அதுவும் தன்னால்தானே தன் கணவனுக்கு இத்தனை தொல்லைகள் — அவமானங்கள் என எண்ணியதும் அவளுக்கு இரத்த ஓட்டமே நின்று விடும் போலிருந்தது.

காரசாரமான வார்த்தைகளையும், கர்ணகடூரமான வசவுகளையும், கண்டிப்புக் கணைகளையும் வாரியிறைத்துவிட்டு வந்திருந்த கூட்டம் கலைந்துவிட்டது.

சங்கரன் மௌனமாக உள்ளே எழுந்துவந்தான். சரோஜா அவன் தோளில் சாய்ந்தவண்ணம் தேம்பித் தேம்பி அழுதாள். சங்கரன் அவளுக்கு அன்புசுரக்க ஆறுதல் கூறினான். அன்று இரவு முழுதும் இருவருமே தூங்கவில்லை. ஏக்கம் எரிக்கும்போது தூக்கம் எங்கிருந்து வரும்.......? அந்த விடியாத இரவு எப்படியோ விடிந்தது. படுக்கையை விட்டு எழுந்த சங்கரன் லேசாக ஒரு முறை இருமினான். அதையடுத்து இன்னொருமுறை பலமாக இருமினான். பிறகு இடைவிடாமல் இருமிக்கொண்டே இருந்தான்.

விநாடிப் புழுக்களை நிமிடமீன் விழுங்கிக் கொண்டிருந்தது!

சங்கரன் மெதுவாக வெளியே சென்று, வாயிலிருந்த எச்சிலைத் துப்பினான். சரோஜாவின் மனதை ஒரு உருத்தெரியாத பயம் உலுக்கியது; உடனே ஓடிச் சென்று அவன் எச்சில் துப்பிய இடத்தை பதட்டத்துடன் பார்த்தாள்.



விருந்தாளி 1:-விஷயம் தெரியுமோ? மாப்பிள்ளை வீட்டார் கலியாணம் வேண்டாம் என்கிறார்களாமே?

விருந்தாளி 2:-இந்த அல்ப விஷயத்துக்காக கல்யாண சாப்பாடு நின்னுடாதே?

---

இரத்தம்.......!!!

இடிவிழுந்தது அவள் இதயத்தில். அவள் மனம், மூளை, ஏன் உலகமே சுழன்றது.

இளைப்பிலே பொங்கும் இருமல் நோய்...! இருமினால் ரத்தம் கக்கும் கொடிய வியாதி....!!க்ஷயம்!!

சரோஜாவை ஆட்டிப்படைத்துவிட்டு விலகிய அந்த வியாதி, சங்கரனிடம் சர்வாதிகாரம் செலுத்த ஆரம்பித்துவிட்டது.

*

# உள்ளக் கோவிலே உயர்ந்த கோவில்

— வாழ்நன் —

தண்டமிழ் நாட்டின் தனிச்சிறப்பையும் நனி நாகரிகத்தையும் நுண்கலேயுயர்வையும் நானிலத்திற்கு நன்கெடுத்து இயம்பும் வகையில் அமைந்து இலங்குவதே அருந்தமிழ் நாட்டுக் கோவில்கள். கோவில்கள் யாவும் தரணியாண்ட மன்னர்களாலும் நாயக்கர் பரம்பரையினராலும் கட்டப் பெற்றனவே. இவைகளின் கட்டிட அமைப்பும் கட்டிய நோக்கமும் வேறு. ஆனல் இன்று பயன் படும் முறையும், பயன் கொள்ளும் வகையும் வேறு. கோவில்கள் பண்டைய நாளில் தமிழ்க் கலேயை, தமிழ்ப் பண்ணை தமிழ் இசையை, தமிழ் நாடகத்தை வளர்த்துப் பாதுகாத்ததோடு, அறங் கூறும் மன்றமாகவும் ஆவணக் களரியாகவும், ஆதுலர் சாலேயாகவும், மருத்துவமனேயாகவும், மாண்புறு சிற்ப ஓவியங்களின் பிறப்பிடமாகவும், கலேபயில் கழகமாகவும், கற்பனே தோன்றுமிடமாகவும், விரிவுரையாற்றுமிடமாகவும், விற்பனர் வாழுமிடமாகவும், தமிழ் மறை இசைப் போரின் தங்குமிடமாக்வும், விளங்கி, அன்பையும் அறிவையும் அருளேயும் பெருக்கி, தூய இறையுணர்வை ஊட்டி நல்லோர் ஏத்தும் நல்லிடமாகக் காட்சி தந்தது.

இன்ரு களிறு தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று என்ற கதை போலவும் உலகப் பெரியார் காந்தியடிகள் மொழிந்ததைப் போல வேசிகள் உறைவிடமாய் வேதியர் மறைவிடமாய்க் காட்சியளிக்கின்றது. இக் காரணங்களால்தான் அறிவுடைப் பெருமக்கள் இப்புறக் கோவிலே போலிச் சமயவாதிகளே வெறுத்து உண்மை யுணர்ந்து உள்ளக் கோவிலே உயர்வுடையது என்று நன்று நவின்றனர் இங்நாவலங் தீவினில். அக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே நானும் ஈண்டு நங் தமிழ் நாட்டு மக்களுக்கு ஒன்று கூற விழைகின்றேன். கல்லாலும் மண்ணுலும் கற்களாலும் மரத்தாலும் சாந்தாலும் பாறைகளாலும் புறத்திலே பல்லாயிரம் செலவிட்டு, பலர் உழைப்பைக் கொண்டு கட்டுகின்ற கோவிலே விட அவரவர் உள்ளத்திலே கட்டுகின்ற கோவிலே உயர்வுடையதென்பது எனது எண்ணம். எவ்வாறெனில் வெளியிலே கட்டியிருக்கின்ற கோவில் நம்மால் கட்டப்படவேண்டுமென்ற வரையறையுமல்ல; தேவையும் முறையுமல்ல; எவராலும் எவ்வுணர்வோடும் எங் நிலேயிலும் கட்டப் பெறலாம். அங்கே நடைபெறுகின்ற வழிபாட்டு முறைகள் இறையுணர் நெறிகள் தமிழருக்கு, தமிழ்ப் பண்பாட்டிற்கு ஊறு விளேவிப்பனவாக அமையலாம்.

அன்பையும் அருள் நெறியையும் வளர்ப்பதற்குப் பதில் அறியாமையும் அருவெறுப்பையும் வளர்க்கலாம். கலையை, கலைமகளைப் போற்றுவதற்குப் போற்றலாம் பூவும் நீரும் புனித உள்ளமும் கொண்டு தமிழிசை பாடி ஏழிசையாய் இசைப் பயனாய் இலங்கும் இறைவனை வழிபடுவதற்கு மாறாக எத்தர்கள் பித்தலாட்ட மொழியில் வேத மந்திரங்களில், வேண்டாத வடமொழியில் அறிவையிழந்து அடிமையாகி, படிக்கட்டின் கீழ் நின்று தமிழ் மானத்தை வடிகட்டி அவனுக்குப் படிகட்டி விட்டு, பல்லிளித்துக் கொண்டு இல்லம் வந்து சேரலாம். அற மன்றமாக, அறிஞர்கள் உறைவிடமாக இருந்தமைக்கு முரணாக அநீதி மன்றமாகக் காட்சியளிக்கலாம். இன் தமிழ் இசைக்குப் பதிலாக வடவரின் சகஸ்ரநாமங்கள் இருக் யசுர் சாமங்கள் முழங்கலாம். அடியார்களை, அப்பர் பெருமானை வணங்கி வாழ்த்துவதற்குப் பதில் அவமானம் செய்யலாம். புனித இறைவனைக் கண்டு மகிழ்வதற்குப்பதில் புரோகிதர்களின் புன்மைச் செயலைக் கண்டு புறக்கணிக்கலாம். மகாதேவா என்ற மான மற்றவர்களின் மடமை மொழியைக் கேட்கலாம். பண்புடையாரைப் போற்றுதற்குப் பதில் பணமுடையார்களின் பாதங்களை வருடலாம். பல்கலைகளை வளர்த்துப் பாரில் சிறப்புற்ற பண்புசால் கோவில்கள் பார்ப்பன மாக்களின் வயிற்றை வளர்த்து, பாவத்தைப் பெருக்கிப் பல்லோராலும் இழித்தும் பழித்தும் ஏளனம் செய்யப்படலாம். ஆகையினால்தான் உள்ளத்தில் கட்டுகின்ற கோவிலே உயர்ந்தது என்று நான் கூற ஆசைப்படுகின்றேன்.

ஏனெனில்? உள்ளத்திலே உயர்ந்த கோவிலைக்கட்ட வேண்டுமென்றால் முதலில் மனத்திலேயுள்ள மாசுகளை, அதாவது பொறாமை, பேராசை, கடுஞ் சொல், கடுஞ்சினம் ஆகிய இவற்றை அழித்து; எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் எண்ணும் எண்ணத்தை வளர்த்து சாதிமத பேதத்தை மூட வழக்கத்தை அணுவின் அளவேனும் இல்லாது நீக்கி, அன்பைப் பெருக்கி, அறிவை மிகுத்து வாய்மை எருவிட்டு வளர்தமிழ் பேணின் அறிவே உருவாய் ஆண்டவன் அன்பரது உள்ளத்தில் தங்குவான். அடியார்களாகிய நமது முறையைக் கேட்டுக் குறையைப் போக்கிக் குணத்தை வளர்ப்பான். செந்நெறி செலுத்தி சிறப்பொடு வாழத் தகுமுறை அருளுவான். இதுவன்றி காடுமேடு ஏறி கானகம் வாழ்ந்து கந்தமூலங்களையுண்டு கடுந்தவம் செய்து நீரிலே மூழ்கி நெருப்பிடை நின்று தொல்லையுற வேண்டுவதில்லை. கோவிலைச் சுற்றி கோபுரம் ஏறி கும்பாபிடேகம் செய்யவேண்டுவதில்லை. தேரோடும் வீதியில் உருள வேண்டுவதில்லை. ஆடு கோழிகளை வெட்டி அநியாயம் செய்ய வேண்டுவதில்லை. விழா என்றால் வெறி பிடித்து ஆட வேண்டுவதில்லை. விதியை நம்பி மதியை இழக்கவேண்டியதில்லை. கல்லையும் மண்ணையும் கட்டி அழ வேண்டியதில்லை. தில்லை சென்று பல்லைக் காட்டும் பார்ப்பனர்களின் பிடியில் சிக்கித் திணற வேண்டுவதில்லை. இருந்த இடத்

திலேயே இறைவனைக் கண்டு மகிழலாம். இன்பம் பெறலாம் வாழ்வு திருந்தலாம், வாழ்வாங்கு வாழலாம்.

இதன் உண்மையைத்தான் வடலூர் இராமலிங்க அடிகள் தித்திக்கும் தேன் கவிகளால் ஆகிய திருவருட்பாவில் திருவாய் மலர்ந்துள்ளார். தென்னாட்டு மக்களே! தீந்தமிழ் பேசுவோரே அவர் மொழியைக் கேட்டு அன்பு வழியில் செல்ல இதோ தருகிறேன் அந்த இன்னமுதப்பாட்லே.

எத்துணையும் பேதமுருது எவ்வுயிரும்
தம்முயிர் போல் எண்ணி, உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர், அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம் புரியும்
இடம், என நான் தெரிந்தேன், அந்த
வித்தகர்தம் அடிக் கேவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்ததாலோ.

என்பதைப் படித்துப் பாருங்கள். பாரோர்க்குச் சீரோடு சொல்லுங்கள். இவர் மட்டுமன்று நாஞ்சில் நாட்டுக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை செந்தமிழில் செப்பியிருப்பதையும் கேளுங்கள். கேட்டுக் கேட்டை யகற்றி, கீழ்மையை வென்று சூழ்ச்சியை, பொருமையைப் பொசுக்குங்கள், தூய நல் இறைவனை நாடுங்கள். அவர் அருளிய அழகிய பாடல்.

"கோவில் முழுதுங்கண்டேன்—உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்;
தேவாதி தேவனைநான்—தோழி!
தேடியுங் கண்டிலனே,
தெப்பக் குளம் கண்டேன்—சுற்றித்
தேரோடும் வீதி கண்டேன்;
எப்பயில் வைப்பாம் அவனைத்—தோழி!
ஏழையான் கண்டிலனே,
சிற்பச் சிலைகண்டேன்—நல்ல
சித்திர வேலை கண்டேன்;
அற்புத மூர்த்தியினைத்—தோழி!
அங்கெங்கும் கண்டிலனே.
கண்ணுக்கினிய கண்டு—மனத்தைக்
காட்டில் அலையவிட்டுப்
பண்ணிடும் பூசையாலே—தோழி!
பயன் ஒன்றில்லையடி.
உள்ளத்தில் உள்ளானடி—அது நீ
உணர வேண்டுமடி;
உள்ளத்தில் காண்பாய் எனில்—கோவில்
உள்ளேயும் காண்பாயடி"

இதனைப் பயிலுங்கள் — இதன் பொருள் அறியுங்கள். அப்பொழுது உண்மை புலனாகும். உயர்ந்த நல் நோக்கம் ஏற்படும். ஆதலின் அறிவுடை மக்களும் தகுதி சால் தக்கோரும் கூறிய நெறியிலே உள்ளத்தைக் கோவிலாக்கி அன்பு என்னும் நீரிட்டு வாய்மை மலர் சாத்தி வண்டமிழ் பாடினால் போலிச் சமயங்களும், புரோகிதர் கூட்டங்களும் புன்மைச் செயல்களும் சுரண்டல் முறைகளும் மாய்ந்து பித்தலாட்டம் மறைந்து பேயாடிகள் தொலைந்து நாட்டில் வீட்டில் நல்லின்பம் நிரம்பி எழில் மிகுந்து இறையுணர்வு பெருகும். துன்மார்க்கம் அழிந்து சன்மார்க்கம் பரவும். சாந்தி நிலைத்து சமய பேதம் மறையும். ஆதலின் மெய்யன்பர்களே! மேன் மக்களே!! உலகம் உய்யவும் உண்மை வாழவும் மனமாசகலவும் மதப் பூசல் ஒயவும் உள்ளத்திலே உயர்ந்த கோவிலைக் கட்டி நன்னெறி ஒழுகி நற்பேறு அடைவீர்களாக—இன்பம் பெற்று இறைவனைக் காண்பீர்களாக. *

# படுகளத்தில்!

— அ. சு. மணி —

★

முரசு முழங்கியது. மணிபுரி நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் போர் முரசு முழங்கியது. இனி பொறுப்பதற்கு இல்லை, அந்தப் புல்லரின் கொட்டத்தைப் பொசுக்கியே தீர வேண்டுமென்று பொங்கியெழுந்த வீரர்களுக்குப் புகழ்மாலை சூட்டுவதென முழங்கிக் கொண்டிருந்தது. போர்க்களத்தைப் பூம்படுக்கையாய் நினைத்திடும் மறக்குடி வீரர்கள் போர்முரசு கேட்டுப் புறப்பட்டனர். "தினவெடுக்கும் எங்கள் தோள்களுக்குத் தித்திக்கும் செய்தி. எத்திக்கும் வெற்றி முரசு கொட்டச்செய்கிறோம்"— என்று வீர முழக்கமிட்டனர். வெள்ளமென வீரர்கள் திரண்டு விட்டார்கள்.

"வெற்றி நமதே" என்று வற்ருது ஒலித்த வீரர் கூட்டத்திடையே எக்காளமிட்டான் வீரசிம்மன். வீரசிம்மன்—மணிபுரி நாட்டின் மன்னன். சேனுதிபதியாக இருந்து சிம்மாசனம் ஏறினவன். மன்னனைச் சூழ்ச்சியால் கவிழ்த்தல்ல—மன்னன் மகள் மல்லிகாவின் மாலைக்குரியவனுகி.

மணிபுரி நாட்டைத் தனிப்பெருங் கீர்த்தியோடு உக்கிரசேனன் ஆண்டு வந்தான். அவனது ஒரே அருமை மகள்தான் மல்லிகா. பூத்துக் குலுங்கும் பூங்கொடி—எழில்மிகு நங்கை—அத்தோடு எழுச்சிமிகு மங்கை.

மன்னன் அவையிலே இடம் பெற்றுவிட்டான். அவனது வீரமும் திருவுருவமும் அவளுடைய உள்ளத்தில் அழியாச் சித்திரமாகிவிட்டது. வெண்ணிலவு கண்டு வண்ணமலர் அசைந்தால் பொன்னிற வண்டு........

மல்லிகா—எட்டாத பழம் என்று வீரசிம்மனுக்குத் தெரியும். ஆகவே அதற்கு அவன் கொட்டாவி விடவில்லை. ஆனல் அதுவே எட்டி வரும்போது தட்டியா கழிப்பான். மல்லிகா—அழகு முல்லை மலர். அதைச் சுற்றிலும் அந்தஸ்து என்ற முள்வேலி. அதை முட்டியடித்து முகர விரும்பவில்லை வீரசிம்மன். ஆனல் அதுவே அவன் முகத்தருகே வரும்போது.......முகராமல் விட அவன் என்ன முட்டாளா? அல்லது முற்றும் துறந்த முனிவரா?

வேலும் வாளும் வீசியெறிந்து வந்தவர்களை வீழ்த்தி வெற்றி மாலை சூடிய வேங்கை வீரசிம்மன் அந்த வேல்விழி மல்லிகாவின் பார்வை வீச்சுக்குப் பலியானன். தடை பல தகர்த்துப் படைபல வீழ்த்திய வீரசிம்மன் அவள் கடைக்கண் வீச்சுக்கு அடைக்கலமானன். மடை திறந்த வெள்ளமெனப் பெருக்கெடுத்த மல்லிகாவின் அன்புடன் வீரசிம்மன் ஐக்கியமாகி விட்டான்.

வளர்ந்த அவர்கள் அன்புக்குத் தடை விதிக்க யாரும் இல்லை, தடை விதிக்க இருந்த தந்தையும் அனுமதித்தார் — ஆட்சேபிக்கவில்லை. அந்தஸ்து குறைவு தவிர

வேறு எந்தக் குறைவுமில்லாத வீரசிம்மனை மருமகனாக—மகளின் மணாளனாக—மணிபுரி நாட்டின் எதிர்கால மன்னனாக ஏற்க அவரது மனம் சம்மதித்தது. அதற்கு முக்கிய காரணம் தாய் இழந்த தன் மகளின் விருப்பத்தைத் தட்டி, வாழ்வுத் தடாகம் என்றிருப்பவளைத் தணலில்இட்டு அவர் பொசுக்க விரும்பவில்லை. மூப்படைந்த தான் இனி முடிசூடிக் கொண்டிருக்க விரும்பவில்லையோ என்னவோ அவர் மல்லிகாவின் திருமணத்தை முடித்து வீரசிம்மனுக்கு முடிசூட்டிவிட எண்ணினர். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்தார்.

திக்கெட்டும் திருமணச்செய்தி தெரிவிக்கப்பட்டது. குறுநில மன்னர்கட்கும், பெருங்குடி மக்கட்கும் திருமுகம் அனுப்பப்பட்டது. செய்தி கேட்டு மணிபுரி நாட்டு மக்கள் சிந்தை மகிழ்ந்தார்கள். சிற்றரசர்கள் சினம்கொண்டார்கள். காரணம் இருக்கத்தான் செய்தது.

அந்தச் சிற்றரசர்கள் உக்கிரசேனனுக்குக் கப்பம் கட்டி வருவார்கள். நாளை வீரசிம்மன் நாட்டின் மன்னனாக வந்துவிட்டால் அவனுக்கு இவர்கள் கப்பம்கட்ட வேண்டும். சேவகனாயிருந்து சேனாதிபதியாகி சிம்மாசனத்திற்கு வரும் வீரசிம்மனுக்குச் சிற்றரசர்கள் தாங்கள் கப்பம் கட்டுவதா? என்றுதான் சினம் கொண்டார்கள் விழி அசைத்தால் விழ்ந்துபடும் அடிமைக்கு நாளைக்கு நாம் அடிபணிவதா? என்றுதான் அடங்காத ஆத்திரம் கொண்டார்கள். சிறுமைப்படுத்தும் வீரசிம்மனின் சிரம் சீவ காலம் நோக்கி யிருந்தார்கள், சதித் திட்டம் அவர்களிடையே உருவாகியது. ஆனல் பதுமைகளெனத் திருமண விழாவிற்கு வந்திருந்தனர்.

திருமணம் முடிந்தது. உக்கிரசேனன் இனியும் ஆறு மாதத்திற்குள் வீரசிம்மனுக்கு முடிசூட்டிவிடத் தீர்மானித்திருந்தார். இதைப்பற்றி சிற்றரசர்களிடமும் தெரிவித்தார். அவர்களும் இதை வரவேற்பதுபோல நடித்தார்கள். முடிசூட்டு விழாவிற்கு இன்னும் ஒரு மாதமே யிருந்தது. அந்தச் சமயத்தில்......

குல தெய்வத்தை வணங்கிவர குதிரை மீது சென்றிருந்த உக்கிரசேனன் வரும் வழியில் குதிரையிலிருந்து தவறி விழுந்து படுகாயத்துடன் அரண்மனைக்கு எடுத்து வரப்பட்டார். கொண்டு வந்த சில மணி நேரத்துக்கெல்லாம் அவர் உயிர் நீத்தார். இதனுல் நாட்டில் குழப்பம் மலிந்து விடும் என்பதையறிந்த வீரசிம்மன் விரைவிலே முடி சூட்டிக் கொண்டான்.

சொல்ல முடியாத சோகத்திடையே வீரசிம்மனுக்கு மற்றொன்று மலையாக வந்தது. அது என்னவென்ருல் சமயம் பார்த்திருந்த சிற்றரசர்களின் சதித் திட்டம் உருப்பெறத் தொடங்கியது. கப்பம்கட்ட மறுத்தார்கள்; வீரசிம்மன் ஆட்சியை அங்கீகரிக்க முடியாதெனப் பிரகடனம் செய்தார்கள். அதோடு நின்று விடவில்லை. மணிபுரி நாட்டின் மகுடத்திற்கு வழிவகுத்தார்கள்.

இதுகேட்ட வீரசிம்மன் வெகுண்டெழுந்தான். அந்த விட்டில் பூச்சிகளின் சிறகொடிக்க வேண்டுமெனச் சீறினன். ஆகவேதான் போர் முரசு மணிபுரி நாட்

டின் மூலே முடுக்கெல்லாம் ஒலித்தது. முரசு கேட்டு வேங்கை போல் கிளம்பிய வீரர்களிடையே வீரசிம்மன் வெற்றிப் பரணி பாட போர்ப்பரணி முழங்கினன்.

மணிபுரி நாட்டின் படை மாற்ருர் கோட்டையைத் தாக்கிக் கொண்டு இருந்தது. படைக்குத் தலைமை வகித்த வீரசிம்மன் வீரர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான். ஆனல் என்ன செய்தும் கோட்டை வாயிலைத் திறக்க முடியவில்லை, வீரசிம்மன் என்ன செய்வது என்று யோசித்தான். முடிவில் அவனுக்கு ஒரு யோசனை வந்தது.

சிற்றரசர்கள் அனைவரும் கோட்டையினுள்ளே ஒன்றுகூடி திட்டம் வகுத்தார்கள். எப்படியும் வீரசிம்மனைக் கொன்றுவிட வேண்டுமென்று முடிவு கட்டினர்கள். அதற்கு வேண்டிய சதித் திட்டத்துடன் ஒரு ஆளையும் அனுப்பி வைத்தனர்.

வீரசிம்மன் யானைகளைக் கொண்டு வந்து கோட்டைக் கதவின் முன்னல் வரிசையாக நிறுத்தினன். அவைகளைக் கதவின் மேல் மோதச்செய்தான். ஆனல் முன்னல் நின்று முட்டிய யானை பெரும் சப்தமிட்டுக் கொண்டு திரும்பி ஓடியது. கதவின்மேல் கூரிய ஊசிகள் இருந்ததே இதற்குக் காரணம், இதைப் பார்த்த வீரசிம்மன் ஒரு யானையைக் கதவின் குறுக்கே நிறுத்தினன். மற்ற யானைகளை அதன் மீது மோதச் செய்தான். யானைகள் முழு பலத்தைக்காட்டி மோதவே கோட்டைக் கதவு உடைந்து கீழே சரிந்தது.

மணிபுரி நாட்டு வீரர்கள் மாற்ருரது கோட்டையினுள் நுழைந்தனர். "கனல் கக்கிய அக் கயவர் எங்கே? தினவெடுக்கும் என் தோள்கள் துடிக்கின்றன" என்று அனல் தெறிக்க வீரசிம்மன் அந்தச் சிற்றரசர்கள் மீது பாய்ந்தான். தன் வெற்றி வாளுக்கு அவர்களை விருந்தாக்கினன். ஐந்தாவது சிற்றரசன். அவன் ஒருவன்தான் அவர்களில் பாக்கி. "அந்த லோக"த்திற்கு செல்லவிருக்கும் அவனுக்கு அந்தி நேரம்.

அந்த நேரத்தில்தான் ஒரு கட்டாரி வீரசிம்மன் முதுகிலே பாய்ந்தது. மாற்ருருடைய ஆள் வேற்று உடையிலே வந்து வீசிய கட்டாரி அது. செந்நீர் அவன் முதுகின் புறம் வழிந்துகொண்டிருந்தது. ஆயினும் அவன் செங்கரத்தில் வாள் சுழன்றுகொண்டிருந்தது.

கயவன் எதிரிலே—கட்டாரி தன் முதுகிலே—குருதி மண் தரையிலே, என்ற நிலையிலே வீரசிம்மன் தன் தாயகத்தின் கொடிதன்னை நோக்கினன். அது காற்றிலே தவழ்ந்து கொண்டிருந்தது. உணர்ச்சி அவன் உள்ளத்திலே பெருக்கெடுத்தது. ஓங்கித் தன் வாளை வீசி அச்சிற்றரசனைக் கொன்ருன். அடுத்த கணம் வீரசிம்மன் நிலை குலைந்து வீழ்ந்துவிட்டான். விழுந்தவன் எழுந்திருக்கவே யில்லை. வெற்றி முரசு ஒலிக்கவேண்டிய நேரத்தில் வேதனை அரசு செலுத்தியது.

தனது மணாளன் மாற்ருன் கோட்டையிலே இறந்துபட்ட செய்தியறிந்து மல்லிகா துடித்தாள். அவள் துயர் ஒலி திக்கெட்டும் ஒலித்தது. கையிலே மாலைதனை எடுத்தாள். களம் நோக்கி நடந்தாள். தன் கணவன்

பிணக்குவியலிடையே பொலிவு மிகு முகத்துடன் கிடப்பது கண்டாள். கதறியழுதாள். தன் மடி மீது எடுத்துவைத்து மாலையைச் சூட்டினாள். நெற்றியிலே திலக மிட்டாள். உச்சி மோந்து முத்த மிட்டாள். அவளது உணர்ச்சி சொல்லிலே ஒலித்தது.

"என் வெற்றி வீரனே, விலையிட முடியா மாணிக்கமே! இதோ, உனக்கு இந்தக் கடைசி முத்தத்தைக் காணிக்கையாக்குகிறேன். உன்னைப் பின்பற்றி இன்னும் ஆறு மாதத்திற்குள் வருகிறேன். ஆம்! அதற்குள் என் வயிற்றிலே வளரும் நம் குழந்தை பிறந்து விடும். சூழ்ச்சி விரும்பாத என் சுத்த வீரனே, நம் சொர்ணத் தங்கத்தை நம் நாட்டுக்குச் சொந்தமாக்கிவிட்டு வருகிறேன். சுழலும் அவனது வாளால் சூழ்ச்சிக்காரர்கள் ஒழியட்டும். சுற்றும் அவனது விழிநோக்கால் சுகபோகிகள் அழியட்டும். சொட்டும் தேன் அமுதே! நம் செல்வத்துரையால் இந்த நாடு சுகமடையட்டும். எங்கே, உன் வழிபற்றி நான் வர உன் வாள் கொடு" என்று கூறியபடியே வீரசிம்மன் கையிலே வைத்திருந்த வாளை எடுத்துக் கொண்டே மல்லிகா மயங்கி விழுந்தாள். *

## உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் 125 ஆயிரம் மக்களுக்கு ஒரு சினிமா கொட்டகைதான் உள்ளது. சினிமாப் படத் தொழிலிலிருந்து 100-க்கு 35 பகுதி தமாஷா வரியாக அரசாங்கம் வசூலிக்கிறது. இவ்வளவு அதிகவரி செலுத்தும் தொழில் இது ஒன்றே. இந்தியாவில் 1700 நகரங்களில் சினிமா கொட்டகைகளே கிடையாது. அருகாமையில் சினிமா கொட்டகைகள் இல்லாத காரணத்தால் சுமார் 100-க்கு 75 பேர்களுக்கு படம் காணப் பல வித கஷ்டங்கள் ஏற்க வேண்டியிருக்கிறது.

* * *

முட்டை உணவுகளில் பிரதானமானது கோழி முட்டை. இந்தியாவில் 7 கோடி 37 லட்சம் கோழிகள் உள்ளன. அவைகளின் மூலம் ஆண்டுக்கு 336 கோடி முட்டைகள் கிடைக்கின்றன, முட்டை மூலம் கிடைக்கும் வருமானம் 40 கோடி ரூபாய்.

உலகிலேயே அதிகமாகக் கோழி முட்டைகள் சாப்பிடுகிறவர்கள் பிரிட்டிஷார்தான். அமெரிக்காவில் முட்டைத் தொழிலின் மூலம் ஆண்டுக்கு 70 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

இலட்சுமணபுரியில் கோழி வளர்ப்போர் சங்கம் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது.



# காதலர் உள்ளம்

டி. எம். வாசுதேவன்

கல்லூரியிலிருந்து அப்போதுதான் வீடு திரும்பினாள் பத்மா. முகம் கழுவி பவுடர் பூசிக்கொண்டு முன்னறைக்கு வந்தாள். அம்மா கொடுத்த காபியை பருகிவிட்டு ஒரு புத்தகத்துடன் தன் அறைக்குள் நுழைந்தாள். மேஜை 'டிராயரை'த் திறந்து சுந்தரத்தின் புகைப்படத்தை ஒரு முறை பார்த்துக்கொண்டாள். முறுவலித்தன அவள் இதழ்கள்.

சற்று நேரத்திற்கு முன் தான் அவள் சுந்தரத்தைச் சந்தித்துவிட்டு வந்திருக்கிறாள். சுந்தரமும் அவளும் கல்லூரித் தோழர்கள். சாதாரண நட்பாக ஆரம்பித்த அவர்கள் நேசம் வளர்ந்து காதலாகப் பரிணமித்திருந்தது. அதுவும் சாதாரண காதல் அல்ல. ஒருவர்க்கொருவர் உயிராக இணைந்து தங்கள் காதலின் நிமித்தமாக சர்வபரித் தியாகம் செய்யும் அளவுக்கு அது வளர்ச்சியடைந்திருந்தது. எக்காரணத்தை முன்னிட்டும் அவளைக் கைவிடுவதில்லை யென்று அவன் வாக்குறுதி யளித்திருந்தான். அவனைத் தன்னுயிரினும் இனிதாகக் காதலித்த பத்மாவின் இதயம் அவன் இன்பப் பேச்சிலும் உறுதியிலும் ஆனந்த கீதம் பாடிக்கொண்டிருந்தது.

தூரத்தில் எங்கிருந்தோ ''இந்த இன்பம் நிலையல்லவே'' என்று 'ரேடியோ' பாட ஆரம்பித்தது; சுருக்கென்றது பத்மாவுக்கு. அவள் முகம் கருகியது.

அதே சமயம் யாரோ ஒரு அம்மாள் தன்னைத் தேடிக்கொண்டு வந்திருப்பதாக அம்மா சொல்லக் கேட்டு வெளியே வந்து பார்த்தாள். ஒரு மூதாட்டி நின்றுகொண்டிருந்தாள். அவள் முகத்தில் சுந்தரத்தின் முகஜாடை காணப்பட்டது.

''வாருங்கள் அம்மா'' என்று கூறி மரியாதையாக வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். நீங்கள் யார்? என்னைப் பார்க்க வந்த காரணம்...என்னால் ஏதாவது ஆகவேண்டுமா ?''—வினயத்தோடு வினவினாள்.

அந்த மூதாட்டி அமரிக்கையாக ''உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும். அதை இங்கே பேசலாமா'' என்று கேட்டாள்.

''நீங்கள் தாராளமாக எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம். என் தாய் இங்கு வரமாட்டாள். எந்த இரகசியத்தையும் தடையின்றிக் கூறலாம்.''

'நான் சுந்தரத்தின் தாயார்.'

''தங்கள் முகத்தைப் பார்த்தவுடனேயே ஓரளவு புரிந்துகொண்டேன். இந்த ஏழையின் வீடு தேடி தாங்கள் வரநேர்ந்தது என் பாக்கியம். நீங்கள் ஒரு

வார்த்தை சொல்லியிருந்தால் நானே ஓடி வந்திருப்பேன்!''

"உண்மை. ஆனால் இது ரகசியமாகப் பேசவேண்டிய விஷயம். சுந்தரத்துக்கு அறவே தெரியக் கூடாது''.

'திக்'கென்றது பத்மாவுக்கு. ஏதோ புயல் புறப்படப் போகிறது என்று கலங்கியது அவள் உள்ளம்.

அடுத்து அவள் சொல்லப் போவதைக் கலவரத்தோடு கவனிக்கலானாள்.

"நீ என்னைவிட வயதிற் சிறியவள். இருந்தாலும் உன்னைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். உன் கால்களைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்கிறேன். சுந்தரத்தை நீ மறந்துவிட வேண்டும். சுந்தரம் என் ஒரே புதல்வன். நான் ஏழை. ஆரம்ப திசையில் பலரிடம் இரந்து எப்படி எப்படியெல்லாமோ சிரமப்பட்டு அவனை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறேன். இனியாவது அவனைக் கொண்டு சுகப்பட ஏங்கித் தவிக்கிறது இந்தப் பாவியுள்ளம். அதற்குள்ள ஒரே வழி அவனுக்கு ஒரு தனவந்தர் வீட்டுப் பெண்ணை விவாகம் செய்து வைப்பதே. அப்படிச் செய்தால் தான் அவன் உயர் பதவியையும் ஊரார் மதிக்கும் செல்வாக்கையும் பெறலாம். இந்த என்னுடைய ஆசைக்குக் குறுக்கே நிற்பது நீயொருவள்தான். அவன் உன்மீது கொண்டிருக்கும் ஆசையினால் பெரிய பெரிய இடங்களிலிருந்து வரும் ஜாதகங்களையெல்லாம் தட்டிக் கழிக்கிறான். உன்னைத்தான் மணந்துகொள்வேன் என்று அடம் பிடிக்கிறான். மகளே, நீயே யோசித்துப் பார். நீயோ என்னைவிட பரம ஏழை. உன்னை என் மகனுக்கு ஏற்றுக் கொள்வதால் என் வாழ்வு உயருமா? என் இன்பக் கனவுகள் ஈடேறுமா? ஏழையாகிய நீ இன்னொரு ஏழையை மணந்து கொள்வதால் உன் வாழ்க்கை தான் சுகப்படுமா... ....உன்னைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன் அம்மா. இந்த விஷயத்தில் நீ சுயநலம் பாராட்டக் கூடாது. மகத்தான தியாகம் ஒன்றைச் செய்யும்படி உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். உன்னிடம் அவன் கொண்டிருக்கும் பிடிப்பைத் தளர்த்த வேண்டும். அதற்கு நீதான் உதவி செய்யவேண்டும்'' என்றாள் கம்மிய குரலில்.

"முடியாது. நிச்சயமாக முடியாது. அது என்னுடைய இஷ்டம். என் சொந்த உரிமை. அவர் எனக்கே சொந்தம். போ போ! நீ போய்விடு!''— இரைந்து விட உள்ளம் துடித்தது.

துடிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு இதமாகப் பதிலளித்தாள். "தயவுசெய்து என்னை இந்த நிலையில் நீங்கள் மேலும் குழப்பவேண்டாம். ஆர அமர யோசித்து முடிவு கட்டவேண்டிய விஷயம். என்னைச் சற்றுத் தனியாக விடுங்கள்'' என்று கூறி அனுப்பிவிட்டாள்.

அவள் மனம் உடைந்து கண்களின் வழியாகக் கண்ணீர் வந்தது. பீறிக்கொண்டு எழுந்த தேம்பலைப் புடவைத் தலைப்பை வாயிற் செருகி அடக்கிக்கொண்டாள்.

சிந்தனைப் புரவி நிதானமாக நகர்ந்தது அவள் இதய அரங்கில். "ஆம். அந்த அம்மாள் சொன்னது முற்றிலும் உண்மை. என்னை



மணந்துகொண்டு அவர் என்ன சுகத்தைக் கண்டுவிட முடியும். என் பூர்ண அன்புக்கும் உரிய அவர் எவ்விதமாவது நலமாயிருக்க வேண்டும். இதுதானே எனக்கு வேண்டும். நான் அவர் மீது கொண்டிருக்கும் காதல் உண்மையானால் அவர் சுகப்படுவதைக் கண்டு திருப்தியடைவதுடன் நின்றுவிட வேண்டியதுதானே. என்னொருவளுக்காக அவருடைய சுகம் ஏன் பாழ்பட வேண்டும். தன்னை ஈன்ற அன்னையை ஏன் பகைத்துக்கொள்ள வேண்டும். இந்த நிமிஷத்திலிருந்து நான் என் மனதைக் கல்லாக்கிக் கொண்டு விடுகிறேன். இனி அவர் எனக்குரியவரல்ல. அவர் வேறு யாரையாவது மணந்து கொள்ளட்டும். நான் கன்னியாகவே காலங் கடத்தி விடுகிறேன்'' என்று முடிவு செய்துகொண்டாள்.

* * *

அன்று கல்லூரி விடுமுறையாதலால் சுந்தரம் நன்றாகப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். விடிந்து வெகு நேரமாகியும் அவனுக்கு எழுந்திருக்கவே தோன்றவில்லை. அவன் சுவாரஸ்யமாகக் கனவு கண்டு கொண்டிருந்தான். பத்மாவும் தானும் ஆடியும் பாடியும், பதுங்கியும் பாய்ச்சல் காட்டியும் விளையாடிக் கொண்டிருப்பதாக 'சொப்பனபுரி'யில் மிதந்து கொண்டிருந்தான். அந்த இன்பத்தினிடையே எழுந்துவிட அவனுக்கு விருப்பமில்லை.

இந்நிலையில், ''ஸார் போஸ்ட்'' என்ற குரல் கேட்கவே அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து சென்று வாங்கினான், ஏனோ அவன் கை நடுங்கியது. கவரின் மீது பார்வையை ஓட்டினான். பத்மாவின் கையெழுத்து. பரபரப்புடன் பிரித்துப் படித்தான். கையெழுத்து பேசியது.

அன்பரே,

இத்துணை நாட்களாகத் தங்களைக் கருவியாக வைத்து உள்ளொன்று நினைத்துப் புறமொன்று பேசிவந்த என்னை மன்னிக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். என் நடிப்பைக் கண்டு நீங்கள் எண்ணியிருப்பீர்கள், நான் தங்களைக் காதலிப்பதாக. ஆனால் உண்மை வேறு. எனது தாயாரைத் திருப்தி செய்வதற்காக—அவள் புறக் கண்களில் பொடி வைப்பதற்காக இப்படிச் செய்தேன்.

தங்களைவிடப் பண்பிலும் பணத்திலும் பதவியிலும் சிறந்த ஒருவரே என் உண்மைக் காதலர். வேறு மதத்தைச் சார்ந்த அவரைப்பற்றி வெளியிடத் தயங்கி வந்த நான் [illegible] தாயாரின்முன் வேறுவிதமாக [illegible]கங் காட்டி

விட்டு, சமயம் நேர்ந்துள்ள இன்றிரவு அவருடன் வெளியூர் போகிறேன். எங்கள் விவாகம் அங்கே நடந்துவிடும். பெண்களின் மனதைப் புரிந்துகொள்ள முடியாத பச்சைக் குழந்தை நீங்கள்! பாவம். காதற்கல்யாணம் என்பதெல்லாம் இப்படித்தான் முடியும் என்பதை இனியாவது உணர்ந்து கொள்ளுங்கள். உங்களை ஈன்ற அன்னை தேர்ந்தெடுக்கும் பெண்மணியை ஏற்று வாழ்க்கைச் சோலையில் உலவுங்கள். இந்த 'சாகஸக்காரி'யை மன்னித்து மறந்துவிடுங்கள்.

—பத்மா.

பத்மா! இது உண்மையா?.... உண்மையேதானா?........அவன் உதடுகள் துடித்தன.

அதே சமயம் பத்மாவின் தாயாரும் அவனை நோக்கி புலம்பியவாறே ஓடிவந்துகொண்டிருந்தாள். அவள் கையிலும் அதே மாதிரி ஒரு கடிதம்! சுந்தரத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள். தன் பெண்ணின் துரோகச் செயலுக்காகப் பொங்கிப்பொங்கி, புலம்பித் துடித்தாள் அந்த அம்மாள். சுந்தரத்தின் உள்ளம் எரிமலையாகி இருந்தது. எப்படியோ சமாளித்துக்கொண்டு அவளுக்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தான்.

* * *

நாட்கள் நகர்ந்தன!

வருடங்கள் உருண்டன!

சுந்தரம் படித்துப் பட்டம் பெற்றான். அவன் அதிர்ஷ்டம் அவனுக்கு விரைவிலேயே உத்தியோகம் கிடைத்தது. ஊர்சுற்றும் உத்தியோகமாகப் பொறுக்கி ஏற்றுக்கொண்டான். வருஷம் பூராவும் உல்லாசப் பிரயாணம். புதுப்புது மனிதர்களின் அறிமுகம். புதுப்புது ஊர்களில் தங்கல்—இப்படி ஓடின நாட்கள்.

* * *

சில மாதங்கள் தஞ்சையில் வேலை பார்த்துவந்த அவனைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினார்கள். திருச்சிராப்பள்ளியில் அப்போது பொருட்காட்சி நடந்துகொண்டிருந்தது. ஒரு நாள் சுந்தரத்துக்குப் பொழுது போகவில்லை. பொருட் காட்சியைப் பார்த்துவிட்டு வரப் புறப்பட்டான். பல கடைகளையும் விநோதப் பொருட்களையும் பார்த்துக்கொண்டே வந்த அவனுக்கு வளையற்கடைகள் வரிசையில் ஒரு ஆச்சரியம் காத்துக் கிடந்தது. ஒரு வளையற் கடையின் எதிரே பத்மா அசையாத ஓவியம் போல் நின்றுகொண்டிருந்தாள்.

"பத்மா, பத்மா!" என்று ஆவலோடு அழைத்தான்.

திரும்பிப் பார்த்தாள் அவள். "சுந்தரம் நீங்களா? நிஜமாகவே நீங்களா? என்னால் நம்பவே முடியவில்லை. நான் கனவேதும் காணவில்லையே!"— என்றாள் வியப்புடன்.

க்ஷண நேரத்தில் அவளுடைய மகிழ்ச்சிக் குறி மறைந்தது. ஆதரவு காட்டிய அவன் உள்ளம் 'சடேரென' மாறியது, அவன் முகத்தில் கோபம் சொலித்தது. "ஆமாம், ஆமாம். பகலில் விழிப்புடன் இருக்கும்போதே கனவு காணக்கூடியவள் நீ. இல்லாவிட்டால் நள்ளிரவில் பெற்ற தாயை மறந்து உண்மையாக நேசித்த ஒருவனை ஒதுக்கிவிட்டு, இவ்வளவு நெஞ்சத் துணிவோடு எவனோ ஒருவனுடன்—கள்ளக் காதல் கொண்டு — இரவோடிர

வாக: ஓடிப்போயிருப்பாயா? இந்தலட்சணத்தில் என்னை நேரே சந்தித்து இவ்வளவு இயல்பாகப் பேச உனக்கு யோக்கியதை ஏது? சீ, சீ, போ அப்படி'' என்று எரிந்து விழுந்தான்.

சிரிப்பு கொஞ்சும் பத்மாவின் முகம் செவ்வெனச் சிவந்தது. நாகம் எனச் சீறினாள். ''போதும் சுந்தர் நிறுத்துங்கள். நாக்கைச் சிறிது உள்ளடக்கி வைத்தேப் பேசுங்கள். நான் பெண், அனாதை, ஏழை, அதற்காக என்னை என்ன வேண்டுமானாலும் பேசிவிடலாம் என்று எண்ணிவிடாதீர்கள், நான் உங்களுக்காகச் சுமந்து கொண்டிருக்கும் அவமானத்தையும், உங்களுக்குச் செய்திருக்கும் தியாகத்தையும் சற்றேனும் நிதானித்து அறிந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள். என்னை யாரோ ஒருவனுடன் சென்றுவிட்டதாகவே இதுநாள் வரையில் நீங்கள் கருதி வந்திருப்பீர்கள். நீங்கள் மட்டும் என்ன, அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் அந்த அளவிலேயே நின்றிருப்பார்கள். அதற்குமேல் சிந்திக்க அவர்களுக்குத்தான் மூளை ஏது?

ஆனால், உண்மை என்ன தெரியுமா சுந்தர், அன்று தங்கள் தாயார் என்னிடம் வந்து தங்களுக்கு உயர்ந்த இடத்தில் நிறைய வரதட்சணையுடனும் வரிசைகளுடனும் பெண் கிடைப்பதாக இருக்கிறதென்றும், என்மேற் கொண்ட காதலால் நீங்கள் பிடிவாதமாக மறுத்து வருவதாகவும் நான் உங்கள்மேல் கொண்டிருக்கும் காதல் உண்மையானால், உங்கள் நலத்துக்காக என் காதலைத் தியாகம் செய்ய



வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

எனக்கு இது எத்துணைக் கஷ்டமான காரியம் தெரியுமா! இருந்தும் என் காதல் தெய்வத்தின் சந்தோஷத்துக்காக என்னையே தியாக பலிபீடத்தில் சமர்ப்பிக்க முடிவு செய்தேன். அதன் காரணமாக நீங்கள் என்னை வெறுத்தொதுக்க வேண்டு மென்பதற்காக என்னைப்பற்றி நானே ஒரு கற்பனையைப் புனைந்து ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டு, என் தாயாரையும் அதற்கு அனுசரணையாக நடிக்கச் செய்து தங்களை நம்ப வைத்தேன். பிறகு டவுனை விட்டு நீங்கி ஒரு ஒதுக்குப்புறத்தில் குடியிருந்து கொண்டு எந்தவகையிலும் தங்கள் கண்களிற் படாத படி படித்துவந்தேன். ஒருவிதமாகப் படித்து B. T. பரீட்சையிலும் தேறி இந் நகர் உயர்நிலைப் பள்ளியில் பிரதம ஆசிரியையாக இருந்து வருகிறேன். இந்த நிமிடம் வரையில் அப்பழுக்கு இல்லாத பரிசுத்தவதி நான். தங்களுக்கு இடங் கொடுத்துவிட்ட என் உள்ளத்தில் வேறு ஒருவருக்கு இடமேது! வைராக்கியத்துடன் கன்னிவிரதம் கொண்டுள்ளேன்........

"ஹா, பத்மா, அப்படியா? ஐயோ, உண்மையை அறியாமற் மோசம் போய்விட்டேனே நான். உனக்கு இருக்கும் வைராக்யம் எனக்கு இராமற் போய்விட்டதே! உன் கடிதத்தை உண்மையென்று நம்பிய என் மனம் உன்னை வெறுத்து விட்டது, என் தாயார் எனக்குப் பார்த்திருந்த பெண்ணை மணந்து கொண்டு அவளுடன் ஒரு வருஷம் வரையில் வாழ்க்கை நடத்தி வந்தேன். திடீரென்று ஒரு நாள் சுரமாய்ப் படுத்த அவள் அப்புறம் எழுந்திருக்கவேயில்லை. அன்றையிலிருந்து தனியாகவே இருந்து வருகிறேன். பத்மா....... நீ மட்டும் இப்போது சம்மதித்தால்....

"நான் என்றும் உங்கள் அடிமை. தங்களைத் தவிர என் உள்ளத்தில் எவருக்குமே இடமில்லை. தங்கள் சுகம்தான் என் சுகமும். தங்களை மணந்து கொள்ளத் தயார்" என்றாள்.

களுக்கென்று சிரித்தான் சுந்தரம் குறும்பாக.

"ஏன், என்ன சிரிக்கிறீர்கள்?" அச்சத்துடன் கேட்டாள் பத்மா.

"பத்மா, "நான் பச்சைக் குழந்தை; என்னை ஏமாற்றுவது ரொம்ப சுலபம்" என்று எண்ணி விட்டாய் நீ. இதோ நானும் உன்னை ஏமாற்றி விட்டேன். சற்று முன் வரையில் நீ

## குறளும் பரிமேலழகரும்

குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர் பல குற்றங்கள் செய்திருக்கிறார். குறளின் உண்மையை மறைத்தவர்களுள் முதன்மையானவர் பரிமேலழகர்.

—இராம. பெரியகருப்பன்

பரிமேலழகர் வட நூல்தான் திருக்குறளுக்கு முதல் நூல் என்று கருதியதால் சில தவறுகள் நேர்ந்திருக்கின்றன. பரிமேலழகரின் குற்றங்கள் சிவப்பிரகாசர் காலத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன.

—சொ. முருகப்பா

ஏதேதோ நினைத்துத்திக்குமுக்காடிப் போயிருப்பாய். ஆனால் உண்மை வேறு. உன்னைப் பற்றிய எல்லாச் செய்திகளும் எனக்கு அன்றே தெரியும். அதாவது நீ உன் தாயாரை அனுப்பி என் முன் அழச்செய்தாய் அல்லவா? அவள் வெளியே போனதற்கப்புறம் அதைப் பார்த்து மனம் இளகிப்போன என் அம்மா முதல் நாள் உன்னைச் சந்தித்ததையும் தான் உன்னிடம் வேண்டிக் கொண்டதையும் ஒன்றுகூட விடாமல் என்னிடம் சொல்லி உன் குணத்தைப் புகழ்ந்து, தன் செய்கைக்காக வருத்தப் பட்டாள். உண்மையறிந்த நான் தலை தெறிக்க உங்கள் வீட்டைநோக்கி ஓடிவந்தேன். வீடு பூட்டிக் கிடந்தது. வீட்டு சொந்தக்காரர் நீங்கள் வீட்டைக்காலி செய்துவிட்டு எங்கோ வெளியேறி விட்டதாக அறிவித்தார். அன்று முதல் உன்னைத் தேடிக் கண்டுபிடிப்பதையே என் இலட்சியமாகக் கொண்டுள்ளேன். அதற்கு அனுகூலமாக இருப்பதற்காக ஊர் சுற்றும் உத்தியோகம் ஒன்றையும் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஊர் ஊராக மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் உன்னைத் தேடிவருகிறேன். இன்றுதான் உன்னைக் கண்டுபிடிக்க முடிந்தது. உண்மையின் உருவம் இது, நான் நூற்றுக்கு நூறு மணமாகாதவன். உனக்காக ஏங்கி நிற்கும் அந்தப் பழைய சுந்தரமேதான் நான்'' என்றான் கணீரென்ற குரலில்.

பத்மாவின் நாத் தழுதழுத்தது.

அவள் கைகளை ஆதரவோடு பற்றினான் சுந்தரம். பத்மாவின் மெய் சிலிர்த்தது! *

## ஆத்திகமா? நாத்திகமா?

வடமொழியில் வந்த நான்கு வேதங்களும் நம்முடையதல்ல அவை நம்மீது திணிக்கப்பட்டவை, நமக்கு வேத நூல குறளே.

குறளை எக்காரணம் கொண்டும் மாற்றவோ திருத்தவோ கூடாது. நாட்டில் நாத்திகம் பரவக்காரணம் நமது கோவில்களில் நமது மொழியில் பிரார்த்தனை செய்யப்படாததேயாகும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றபடி குறள் வழி நின்றால் உண்மையான ஆத்திகம் நிலைக்கும்.

—கவிஞர். முடியரசன்.

கோவில் பூசாரிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து காணப்படுகிறது! அதற்குக் காரணம் கோவில்களில் நடக்கும் சடங்குகளின் பெயரால் அவர்களுக்கு கிடைக்கும் ஊதியம்தான்! அவர்கள்லாபத்தைக் கருதியே கோவில்களில் சடங்கு முறைகள் செய்து வருகிறார்களே தவிர, ஆண்டவன் மீது உள்ள உண்மையான பக்தியால் அல்ல!

—கிருபளானி.

தமிழ்நாட்டின் மிக முக்கியமான பிரச்னை இங்கு காணப்படும் கடுமையான ஜாதிவெறியாகும். ஜாதி பிரிவினைகளும் ஜாதி வெறியும் இருக்கும்வரையில் நம்நாடு பலமாகவோ, சக்தி வாய்ந்ததாகவோ ஆக முடியாது. ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று பேசுபவர்கள் பலர், ஆனால் உருப்படியான நடவடிக்கைகள் எடுப்பவர்கள் தான் இல்லை.

—ராம் மனோகர் லோகியா.

# விநோத மண முறைகள்

எஸ்.என்.கே.ராஜன்

சர்னு:

மலபாரைச் சேர்ந்த சர்ணு (Charna) என்ற ஜாதியாரிலும் "தாலி கட்டும் கலியாணம்", வழக்கில் உண்டு. இந்த ஜாதியினரில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்ணுக்குத் தாலியைக் கட்டுவதற்காக நெடுங்காடி வாலிபன் ஒருவன் வரவழைக்கப்படுவான். அவன் முகூர்த்த நாளன்று பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு, அன்றிரவு அவளுடன் கூடியிருந்த பிறகு, மறுநாள் காலை பரிசுகளையும், பணத்தையும் பெற்றுச் செல்வான். அப்பெண் மற்ற எவரையாவது கூடி வாழ்வாள்.

கம்மாளரின் ஒரு பிரிவு:

மலபாரிலுள்ள கம்மாளரில் ஒரு பிரிவினரில் "தாலி கட்டும் கலியாணம்" வழக்கிலுண்டு. அதற்கென்று பெண்ணிற்கேற்ற புருஷனை (மணவாளன்) ஜாதகத்தை ஒத்திட்டுப் பார்த்துத் தேர்ந்தெடுப்பர். மண நாளை நிச்சயித்து, 'மணவாளனு'க்குப் புத்தாடைகள் அணிவிப்பர். முகூர்த்த வேளை நெருங்கியதும், இருவரையும் மணவறைக்கு அழைத்துச் சென்று "தாலி கட்டும்" சடங்கு நடைபெறும். தாலி கட்டிய பிறகு 'மணவாளன்' தான் அணிந்துள்ள புது வேஷ்டியிலிருந்து ஒரு நூலை எடுத்து, இரண்டாகப் பிய்த்தெறிந்து, இனித் தனக்கும் மணப் பெண்ணுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று கூறிவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காமல் போய்விடுவான். பிறகு மணப் பெண் வேறு யாருடனாவது கூடி வாழ்வாள்.

ஈழவர்:

மலபாரில் ஈழவர்களிடையே 'தாலி கட்டும் கலியா'ணத்திற்கேற்ப "வீட்டில் கட்டுக் கலியாணம்" வழக்கிலுண்டு. மணப் பெண் ஏழு மங்கையரால் குளிப்பாட்டப்பட்டு ஒரு மணையின் மேல் நிறுத்தி வைக்கப்படுவாள். தேர்ந்தெடுக்கப்பட்ட மணமகனின் சகோதரி பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டுவாள் பிறகு மங்கையர் ஏழு பேரும் ஒரு படி நெல்லைக் குத்தி, அரிசியாக்கி, அதைச் சமைத்து மணப் பெண்ணுடன் உண்பார்கள். நான்காம் நாள் மணப் பெண் அருகிலுள்ள குளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு குளிப்பாட்டப்படுவாள். அப்பொழுது மூன்று மண் விளக்குகளை ஏற்றி, வாழைப் பட்டையின் மேல் வைத்து, அதைப் பூக்களால் அலங்கரித்து குளத்தில்

மிதக்க விடுவர். பிறகு வீட்டிற்குத் திரும்பி வந்ததும் கொஞ்சம் வெல்லமும் தேங்காயும் பெண்ணுக்குக் கொடுத்துச் சாப்பிடச் சொல்வார்கள். பெண்ணின் தந்தை மணமகனின் சுற்றத்தாரிடம், ''மணத்தை முறித்து விடலாமா?'' என்று கேட்பார். எல்லோரும் சரி என்பார்கள். உடனே பெண்ணின் தாய் அல்லது நெருங்கிய பெண் உறவினள் ஒருத்தி தன் உடையிலிருந்து ஒரு நூலை எடுத்து இரண்டாகப் பிய்த்து சோறு சமைத்து வைக்கப் பட்டிருக்கும் பாத்திரத்தில் போடுவாள். அதன் பின் அப் பாத்திரத்தையும், மற்றும் உணவுப் பதார்த்தங்களையும் மணமகன் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள். பிறகு அப்பெண் அவ்வாலிபனின் மனைவியாகக் கருதப்படமாட்டாள். அவள் வேறுயாரையேனும் கூடி வாழலாம்.

திபெத்தியர் :

இந்தியாவிற்கு வடக்கே திபெத் நாட்டில் மணப் பெண்ணைத் தேர்ந்தெடுப்பது மணமகனுடைய தந்தையின் பொறுப்பாகும். முதலில் தந்தை தன் மகனின் சம்மதத்தைப் பெறுவார். ஆனால் பெண்ணின் சம்மதத்தை அவர்கள் அதிகமாகப் பொருட்படுத்துவதில்லை, அங்கே மணமுறைகள் மாகாணம் அல்லது ஜில்லாக்களின் கலாசாரத்தையொட்டி நடைபெறும். மணம் நிச்சயிக்கப்படும் முன் ஜோதிடரை அழைத்து மணமக்களின் ஜாதகப் பொருத்தத்தைப் பார்ப்பார்கள், அது பொருத்தமாக இருந்தால் மணமகனின் பெற்றோருக்கு அவர்கள் சம்மதித்த தொகையைப் பரியமாக மணமகன் வீட்டார் கொடுப்பர். ஜோதிடரால் குறிப்பிட்ட முகூர்த்த நாளன்று மணமகள் மணமகன் வீட்டை அடைவாள். பிறகு மணச் சடங்கு நடைபெறும். மணமக்கள் கழுத்திலும் இடையிலும் அணிந்துள்ள ஒரு வகை அணிகளை ஒருவருக்கொருவர் மாற்றி அணிந்து கொள்வர். அதுவே மாலை மாற்றுவதற்கொப்பான மணச் சடங்கின் முக்கிய அறிகுறி. அதன் பின் தொழுதல், வாழ்த்துதல், பரிசு (மொய்) வழங்குதல் முதலியன நடைபெறும். கடைசியாக ஆடல், பாடல் கேளிக்கைகளில் மணம் முடிவடையும்.

உலுகர் :

பீஹார் மாகாணத்தில் அஜந்தா மலைச்சாரலில் வசிக்கும் உலுகர் (Ulugs) களிடையே பருவமெய்திய ஆண் பெண்களை அதற்கென நிர்மாணிக்கப்பட்ட 'கட்டா' என்ற பெரிய குடிசையில் தனியே இருக்க விடுவார்கள். அங்கே விரும்பிய ஆண் பெண்கள் ஒன்ருகக் கூடி வாழ்வர். பெண்கள் கருவுற்ருல் உடனே மணச்சடங்கு நடக்கும். கருவிற்குக் காரணமானவனே அப்பெண்ணை மணப்பான். கணவனும் மனைவியும் ஆனவர்கள் அக்குடிசையைவிட்டு விலகித் தனிக் குடித்தனம் நடத்துவார்கள். கருவுறும் வரை ஆண் பெண்கள் தங்கள் இஷ்டம் போல விரும்பியவருடன் கூடி இன்பமாய் வாழலாம்.

யானதி :

தெலுங்கு ரெட்டி ஜாதியில் ஒரு பிரிவான யானதி (Yanadi) என்றவர்களிடையே ஒருவனுடைய கணவன் இறந்தால் அவள் விதவையாகாமல் இறந்தவனின் சகோதரனைக் கூடிவாழலாம்.

(தொடரும்)

# பொன்னி! நீ வரமாட்டாயா?

குலசேகரன்

வேலூர், *—10—52.

பேரன்பே!

உன் அன்புக் கரங்களால் தீட்டப்பட்ட கடிதத்தைக் கண்டேன்! மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கவில்லை, பொன்னி! உன் சுந்தரத் தமிழ் மொழியைக் கேட்டு அன்று பூரித்தேன்....! நீ சொல்வாயே முழு நிலவில் பற்பல சின்னஞ் சிறிய கதைகள்—அவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால் என் இதயம் புல்லரிக்கிறது!

தேன் நிலவே! தமிழகத்திலே நாட்டு மக்களிடையிலே நீ 'பவனி' வருவதைக் கண்டால் பொருமை என் உள்ளத்தைச் சுட்டெரிக்கிறது.

நீ அழகின் சுடர் விளக்கு; அன்பின் அணையாக்குன்று. உன் கண்கவர் மேனியும் கட்டமைப்பு உடலும் காந்தக் கண்களும் என்னை ஒரு செதுக்கும் சிற்பியாக்கி விட்டது. உன் மோகனப் பார்வை என் மனதிலே ஒரு எல்லையற்ற களிப்பை உண்டாக்கி விட்டது.

பொன்னி! நீ தாய்மையின் பொலிவோடு திகழ்கின்ருய்....! சோம்பேறிபோல உன் 'தங்கை(!)ப் பத்திரிகைகளைப் படித்து வீணுகப் பொழுது போக்காதே....! அன்புச் செல்வி—அவள் தான் உன் தங்கை—அவளை நன்ருகப் படிக்கச்சொல், வீணுக 'புகழ்ப் பரணி' பாடி மண்ணிலே புதைத்து வைக்கும் சவமாகிவிடப் போகின்ருள்....!

அன்பே! நம் பக்கத்து வீட்டு பொற்சிலை நீ எப்பொழுது வருவாய் வருவாய் என என்னை நச்சரித்துக் கொண்டிருக்கின்ருள்... வரும் போது சென்னையிலிருந்து நான் சொன்ன ஆண்டு மலரை அவசியமாக வாங்கிக் கொண்டு வா! பின்பு 'மறந்து விட்டேன் அத்தான்—என்னை மன்னிப்பீர்களா?' எனக் கூறி என்னைச் சுற்றி வளைக்காதே....!

இறுதியிலே என் அன்பு ...... பொழிகின்றேன்.

உனதன்புள்ள, வில்லவன்.

சென்னை, *—10—52.

அன்புள்ள அத்தான்!

உங்களை 'அத்தான் — அத்தான்' என்று வாய் குளிர அழைப்பதே எனக்கு வெட்கமாக இருக்கிறது. இந்த நிலையில் நான் எப்படி 'மாமா' வென்றழைப்பது?

இறுதியிலே என் வீட்டு 'வேலைக்காரி' செய்த சதியால் தங்களைக் கடித மூலம் சந்திக்கவே முடியவில்லை. அதற்காகப் பெரிதும் வருந்துகிறேன் அத்தான்...! நான் என்ன அவ்வளவு சோம்பேறியா கதைகளைப் படித்துக் கொண்டிருக்க? 'முழு நிலவு' தொடர் கதையை உருவாக்கி கொண்டு வருகின்றேன் அத்தான்....! கதா நாயகியின் பெயர் கூட என் பெயர் தான்.... அப்படியானல் கதாநாயகன் யாரென்று நீங்களே தெரிந்து கொள்ள வேண்டும்....!

அத்தான்! பருவமடைந்து ஓராண்டு வீட்டிலே இருக்கும் போது இருந்த அழகைவிட இரண்டாவது ஆண்டிலே — நீங்கள் மாலையிட்டு, என் தளிர்க் கரங்களைப்பற்றி உங்களுக்கு 'உரிய வளாக்கி'க் கொண்ட இரண்டாவது ஆண்டிலே இன்னும் நான் அதிக அழகாகத் திகழ்கின்றேனாம்.

என்னழகு அவளுக்கு வரவில்லையாம். ஊருக்கு வரும்போது எனக்கும் தெரியாமல் அவள் கரங்களிலே 'ரூபாய் நோட்டுக்களை' வைத்துத் திணிப்பீர்களே, அவைகட்கெல்லாம் அவள் வாங்குவது என்ன தெரியுமா? கூந்தல் தைலமும் முகப் பவுடரும்தான்!

புகழ்ப் பத்திரிகைகள் பல பிற பத்திரிகைகளைக் 'கிண்டல்' செய்து தங்கள் அட்டைப் படங்களை அழகு படுத்திக் கொள்வார்களே அதைப்போல அவள் முகத்திற்கு மஞ்சள் பூசுவது அழகில்லையென்று எண்ணி, பவுடரைப் பூசிக் கொள்கிறாள்!

அத்தான்! நாளைக்கு என் 'முழு நிலவு' கதையை அனுப்பி வைக்கின்றேன்; அதைக் கொஞ்சம் திருத்தி அனுப்புகின்றீர்களா? மறக்கவேண்டாம் அத்தான். இறுதியாக என் அன்பு........!

தங்கள் அன்புள்ள,
பொன்னி.

வேலூர், *—11—52.

பொன்னி!

உன் எழில் ததும்பும் கடிதம் கண்டேன். அதைப் படித்து எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேன் தெரியுமா?

பொன்னி! நீ உண்மையிலேயே அழகிதான். 'இந்தப் பள்ளிக்கூடத்து வாத்தியாருக்கு இவள் எப்படி மனைவியானாள்' என அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் பொறாமை கொண்டு பேசுவது என் காதில் நன்றாக விழுகிறது.

உன் வருகைக்காகவும் உன்னோடு வரப்போகும் 'பிஞ்சு' நெஞ்சத்திற்காகவும் இங்கு காத்திருப்பவர்கள் எத்தனை பேர் தெரியுமா?

பொன்னி! உன் அன்புக் கரங்களால் 'சோறு' சாப்பிட்டு எத்தனை நாட்கள் தெரியுமா ஆகிறது. எனவே சீக்கிரம் திரும்பிவிடு...அந்தப் பொல்லாத 'அய்யர்' கடைக்குச் செல்லவே என் மனம் தயங்குகிறது. எனவே....!

ஆமாம் பொன்னி! நீ எனக்கும் உன் தோழி பொற்சிலைக்கும் அக்கம் பக்கத்து வீட்டுப்பெண்கட்கும் 'வாயாடி' போலப் பேசி இன்பம் தர வந்து இடையில் முன்பு உன் தாய் வீட்டிலேயே அதிக நாள் நின்று விட்டதைப் போல நின்று விடமாட்டாயே...!

அப்படி இடையிலே நின்று விட்டால் அதனால் ஏற்படும் இன்னல்கள் எவ்வளவு தெரியுமா? உன் அழகு முகத்தைப் பார்க்கவும் என்னைப் போல எவ்வளவு பேர் தெரியுமா காத்துக் கொண்டிருக்கின்றார்கள்?

அன்பே! தொடர்ந்து வா.... தமிழகத்தின் இல்லற விளக்கே... என் வீட்டுக் குடும்ப ராணியே.... நீ தொடர்ந்து எங்கள் வீட்டை அலங்கரிக்க, நீ வரும் முன் ஒரே ஒரு 'முக்காலணா' கார்டு போடு!

வந்துவிடு பொன்னி! என்னை மகிழச் செய்ய நான் எதிர்பார்க்காமலேயே வந்து விடு...! உன் தங்கை அன்புச் செல்வியை நான் கேட்டதாகச் சொல்! கடைசியாக என் அன்பு வாழ்த்துக்கள்—உனக்கு மட்டுமல்ல—உன் தங்கைக்கும் கூடத்தான்!

அன்புள்ள, வில்லவன். *

# இலக்கியச் செல்வங்கள்

இளவொளியழகன்

## காதல் நெஞ்சம்

அழகிய முல்லை நிலத்தில் அமைந்த சிறிய குடில் அது. தலைவனும், தலைவியும் அன்போடு வாழ்க்கை நடத்துகிருர்கள். தலைவிக்கு இடுக்கண் வந்த காலை உதவ, தோழியும் ஆங்கு உறைகிருள்.

அவ்வழகிய குடிலுக்கெதிரில் உளது ஒரு கொன்றைக் கானம்! இன்னும் கார் காலம் வரவில்லை. கார் காலம் வந்ததும் வனத்திலுள்ள மலர்கள் எல்லாம் மலர்ந்து புன்னகை புரிந்து வண்டினங்களை வரவேற்கும். ஆனல் இன்னும் கார் காலம் வரவில்லையே........!

தலைவியுடன் வாழ்ந்த தலைவன் ஏதோ அலுவலாக வீட்டை விட்டு—தன் துணைவியைப் பிரிந்து—வெளியூருக்குச் செல்கின்ருன். செல்லுங்காலை தான் கார் காலத்துக்குள் வருவதாகச் சொல்லிச் செல்கின்ருன். அவன் பிரிவை நினைத்து நினைத்து தலைவி துயருறுகிருள்; விழியில் புனல் சோர நிற்கிருள்.

அவள் நிலையைக்கண்டு என்றுங் கலங்காத தலைவனும் கலங்குகிருன்; செய்வதறியாது திகைக்கிருன். ''அனிச்சம் பூப்போலும் இவள் முகம் துயர் தாளாது வாடுகிறதே! நாம் மீண்டும் வருவதற்குள் இவள் எந்நிலையில் இருப்பாளோ?'' என்று எண்ணி, தோழியை அவளுக்கு ஆறுதல் கூறுமாறு பணித்துச் சென்றுவிடுகிருன்.

''எப்படியும் அலுவலை விரைவில் முடித்துத் திரும்பிவிடவேண்டும்'' என்றுதான் அவனும் நினைக்கிருன். ஆனல்........அலுவல் விரைவில் முடியுமா?

தலைவனின் பிரிவால் தலைவி வருந்துகிருள், தனிமை அவளை வாட்டுகிறது; செயலிழந்து தவிக்கிருள்; உடல் மெலிந்து பசலை படர்கிறது; சோர்வு அதிகமாகிறது;

உணவு உண்ணவும் மறுக்கிருள். அவள் கண்கள் வற்ருத ஊற்ருயின. தோழியும் தன்ளுல் ஆனமட்டும் ஆறுதல் கூறுகிருள். "தலைவன் விரைவில் வந்துவிடுவான்; கலங் காதே!" என்கிருள். ஆனல் தலைவி அதை எல்லாம் ஏற்ருல்தானே! தன் உயிர்த்தோழி வாடுவதைக் கண்ட தோழியின் உள்ளத்திலும் கவலை படர்கிறது. தலைவியின் துன்பத்தைத் துரத்த எண்ணுகிருள்.

இந்நிலையில் கார் காலம் வந்துவிட்டது! அதற்குச் சான்ருக கொன்றைக் கானத்திலுள்ள மலர்களெல்லாம் மடலவிழ்ந்து நாற்புரமும் மணம் வீசுகின்றன! எங் கெங்கோ உறைகின்ற வண்டினங்களெல்லாம் கொன்றைக் கானத்திற்கு வருகின்றன; வந்து தேனைக் குடிக்கின்றன; மது உண்ட மயக்கத்தில் நிலை தெரியாது ஆடியும் பாடியும் களிக்கின்றன.

தலைவியின் துன்பத்தை யகற்ற நினைக்கும் தோழி கொன்றைக்கானத்தைக்கண்டு திகைக்கிருள்; முன்னைவிட இப்போது அதிகமாக வருந்துகிருள். "என்னதான் பொய்யைப் புனைந்து உண்மையாகக் கூறினும் கார் காலம் வந்துவிட்டது, வந்துவிட்டது என்று பறை சாற்றுமே கொன்றைக்கானம்! கார் காலத்துக்குள் வருவன் என்று சொல்லிச் சென்ற தலைவனே இன்னும் வந்தபாடில்லை... தலைவியின் நிலையோ காணப் பொறுக்கவில்லை; கார் காலமோ வந்து விட்டது. என்ன செய்வேன்......?"

எண்ணச் சுழலில் சிக்கித் தத்தளிக்கிருள் தோழி! இந்நிலையில் வருத்தம் என்ற சூருவளி வேறு....! சொல்ல வேண்டுமா அவள் நிலையை! அந்தக் கொன்றைக்கானத் தின்மீது பொல்லாத சீற்றம் அவளுக்கு!

தலைவி கொன்றைக்கானத்தைப் பார்க்கிருள்; பூக்கள் மலர்ந்திருப்பதையும் காண்கிருள். "கார் காலம் வந்து விட்டதா"—அவள் உள்ளத்தில் ஓர் ஐயம்—வினு!

"இருக்க முடியாது; கார் காலம் இன்னும் வந்திருக்க முடியாது. கார் காலத்திற்குள் வந்து விடுவேன் என்று கூறிச்சென்ற என் காதலர் இன்னும் வராதிருக்கையில் எப்படி இதற்குள் வந்துவிடும் கார் காலம்! இந்தக் கொன்றைக் கானந்தான் கார்காலம் வந்து விட்டது என்று பொய் சொல்லுகிறது. முறை தெரியாமல்—காலம் அறி யாமல் பூக்க ஆரம்பித்து விட்டது! பொய்! பொய்! வெறும் பொய்! கார் காலம் வந்துவிட்டிருந்தால் என் தலைவர்

எப்போதோ வந்திருக்கமாட்டாரா? அவர் கூறியது உண்மை; அவர் பொய் சொல்லாதவர்; இக்கானம்தான் பொய் சொல்கிறது''—அவள் காதல் நெஞ்சம் இப்படி எண்ணுகிறது.

தலைவி தோழியை நெருங்குகிருள். தோழியின் முகத்தில் கவலை படர்ந்திருக்கிறது. அவள் முகத்தில் அமைதி இல்லை. ''ஏன் தோழி கவலைபாய் இருக்கிருள்?'' தலைவியின் உள்ளத்தில் ஓர் கேள்வி! வினவிற்கு விடை காணவேண்டுமே....!

சிந்தித்தாள்...சிந்தித்தாள்.......நீண்ட நேரம் சிந்தித்தாள்! சிந்தனைக்குப்பின் ஒரு முடிவு-இது இயற்கைதானே! தலைவியும் ஓர் முடிவுக்கு வந்தாள். ''தோழியின் கவலை தன் பொருட்டு'' என்றுதான் அவள் முடிவுக்கு வந்தாள். ''ஆம்'' என்று அரற்றியது அவள் உள்ளமும்!

அவள் தோழியை அண்மினள்; பேச ஆரம்பித்தாள்; அவள் பேச்சில் உறுதி கலந்திருந்தது.

தோழியே! கவலைப்படாதே! என்று ஆரம்பித்தவள் மேலும் தொடர்ந்தாள்.......

''வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு
பொன்செய் புனைஇழை கட்டியமகளிர்
கதுப்பிற் ருேன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் கார் எனக்கூறினும்
யானேதேறேன்; அவர்பொய் வழங்கலரே''

(குறுந்தொகை—உக)

''வண்டுகள் தம்மீது வந்து மொய்க்கும்படியாக நெருங்கி மலர்ந்த பூங்கொத்துக்களை இடையிடையே பெற்று பொன்னல் ஆக்கப்பட்ட புனைதற்குரிய அழகிய அணிகள் அணிந்த மகளிரது கூந்தலைப் போன்று விளங்கும் அண்மையில் மலர்ந்த புதிய பூக்களையுடைய கொன்றைக் கானம் ''கார் காலம் வந்து விட்டது எனச் சாற்றினும் நான் அதை நம்பித் தெளிய மாட்டேன்; காரணம் என் காதலர் பொய்யைச் சொல்லா இயல்பினர்'' என்று தன் காதலன்பால் கொண்ட அன்பினல் இயற்கையையே பொய்யாக்குகிருள்; நம்ப மறுக்கிருள் தலைவி.

அவள் காதல் நெஞ்சத்தைத் தெளிவு படுத்தி இவ்வழகிய நிகழ்ச்சியை உள்ளடக்கிப் பாடலாகவடித்துக் கொடுத்தவர் 'ஓதலாந்தையார்' என்னும் பழந்தமிழ்ப் புலவர்.



# நமது மருத்துவர்

G. வெங்கடப்பா M. B. B. S. (Ex) I. A. M. C.

வினு:— ஐயா, எனக்கு தூக்கம் அதிகம் வருகிறது. கண்களில் நீர் வடிகிறது. விளையாடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் களைப்பாக இருக்கிறது, இதை நீக்க நான் என்ன செய்யவேண்டும்?

—கே. எஸ். மதியரசு, செந்துரை.

விடை:—கண்களை கண் டாக்டரிடம் காட்டி யோசனை கேட்கவும். மலச்சிக்கலை நீக்கிக் கொள்ளவேண்டும். பகலில் தூங்கக் கூடாது. இரவில் படுக்கைக்கு போகுமுன் குளிர்ந்த அல்லது வெந்நீரில் குளித்து விட்டு படுக்கைக்கு போகவும். குடலில் புழுக்கள் இருந்தால் அவைகளை எடுத்து விடவும்.

* * *

வினு:—பொன்னி மருத்துவரே, எனக்கு முகப்பருக்கள் வந்து பள்ளமான தழும்புகள் ஆகியிருக்கின்றன. இதை நீக்க என்ன செய்வது?

—வயி. கி. இளங்கோவன், இலங்கை.—ஆ. கண்ணன், திருப்பூர்.

விடை:—நண்பர்களே, நீங்களிருவரும் பழைய பொன்னி இதழ்களை திருப்பிப்பாருங்கள், விளக்கமாக எழுதியுள்ளேன். தழும்புகளை நீக்குவது எளிதல்ல. பின்தரப்படும் இரண்டு முறைகளைத் தொடர்ந்து செய்து வாருங்கள்.

1. காலையிலும், இரவிலும், முழு முகத்திற்கு வெந்நீர் ஒற்றடம் 5 நிமிடத்திற்கும் அதன்பின் தண்ணீர் ஒற்றடம் 5 நிமிடத்திற்கும் கொடுக்க வேண்டும்.

2. காலை எழுந்தவுடன் உள்ளங்கைகளால் முகத்திற்கு சுமார் 5 நிமிடத்திற்கு தேய்ப்பு கொடுக்க வேண்டும்.

* * *

வினு:—ஐயா, எனக்கு 3 குழந்தைகள். 4 வயதான முதல் பெண் வெண்ணிலா ஈரல் பெருத்து, காமாலை வந்து இறந்து விட்டது. 2-வது மன்னர் மன்னனுக்கு 3 ஆண்டுகளாக கண்கள் மஞ்சளாக இருக்கிறது, சிறுநீர் மஞ்சளாக இருக்கிறது, சுறுசுறுப்பு இல்லை. 3-வது குழந்தை மதிவாணனுக்கு வயது 1½. உடல் முழுவதும் கருப்பு

*வெள்ளை புண்கள் இருக்கின்றன. ஆங்கில மருந்து வாங்க சக்தி இல்லை. சுலபமாக குணப்படுத்திக்கொள்ள தயவு செய்து மூலிகை கூறினால் நன்றியுள்ளவனாக இருப்பேன்.*

—**மா. இராமச்சந்திரன், துடியலூர், கோவை.**

விடை:—நீங்களும் உங்கள் மனைவியும் இரத்த பரீக்ஷை செய்து சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஈரல் நோய் வரும். இப்போது செய்யவேண்டியது:-

1. கன்னி, பப்பாளி பழங்களை அடிக்கடி குழந்தைகளுக்கு சாப்பிட கொடுக்க வேண்டும். உணவில், பாகற்காய் அடிக்கடி சேர்க்கவும். இத்துடன்,

2. கையான்தகரை என்னும் கரிசிலாங்கன்னி இலைகளை பிடுங்கி சற்று மிளகு, உப்பு, மஞ்சள் கூட்டி அறைத்து சுண்டைக்காய் அளவு உருண்டை செய்துக்கொண்டு தினமும் காலையிலும், மாலையிலும் ஒரு உருண்டை கொடுத்து பால் கொடுக்கவும். 40 நாட்கள் கொடுத்தால் போதும். சிலசமயம் நாட்களை அதிகப்படுத்த வேண்டியிருக்கும்.

3. கீழாநெல்லி செடியை பிடுங்கி, வேர் நீக்கி, 2, 3 மிளகு, உப்பு, மஞ்சள் சேர்த்து அறைத்து சுண்டைக்காய் அளவு காலை, மாலை கொடுக்கவேண்டும்.

* * *

*வினா:—மருத்துவரே, எனக்கு பல்வலி அடிக்கடி வருகிறது. பல்லில் துவாரம் விழுகிறது. இது ஏன் வருகிறது? இதற்கு என்ன செய்வது? கண்ணில் அழுக்கு சேருகிறது இதை நீக்க என்ன செய்ய வேண்டும்?*

—**முத்தாறு, அப்பத்தனை.**

விடை:—பற்களை சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். வலி வரும் போது கிராம்பு தைலம் ஒரு சொட்டு பஞ்சில் எடுத்து வலியுள்ள இடத்தில் வைக்கவேண்டும். பல்லிலுள்ள துவாரத்தை பெரியதாக்கி பல் டாக்டர் அடைத்துவிடுவார். இப்பல்லினால் பக்கத்து பற்களுக்கு சீழ் பிடித்து வலி ஏற்படுவதாயிருந்தால் இந்த பல்லை உங்கள் பல் டாக்டர் பிடுங்கி விடுவார்.

கண்ணில் அழுக்கு வருவதை இப்போதே கவனிக்க வேண்டும். கண் டாக்டரிடம் காட்டி யோசனை கேளுங்கள். இரவில் தூங்கும்போது ஒரு சொட்டு விளக்கெண்ணையை கண்களில் விட்டுக்கொள்ளவும். கண் சிவந்திருந்தால் பெனிசிலின் அய் ஆயின்ட்மெண்ட் (Penicilin Eye Ointment) வாங்கி காலையிலும் இரவிலும் தூங்கும்போது கண் இறப்பையின் அடியில் 2 நெல் அளவு தடவிக் கொள்ளவேண்டும். அல்லது புளியங்கொட்டை அளவு படிகாரத்தை ஒரு அவுன்ஸ் வெந்நீரில் கரைத்துவைத்துக்கொண்டு கண்களுக்கு தினமும் 3 வேளை 5 சொட்டுகள் விட்டு வரவும். உங்களுக்கு பல், கண் முதலிய தொந்திரவுகள் இருப்பதினால் ஒரு வைத்தியரிடம் காட்டி உடல் முழுதும் பரீக்ஷை செய்துகொள்ளுங்கள்.

Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd., at Ponni Achakam, 111, Coral Merchant Street, Madras-1.

Reged. No. M. 6486. PONNI 1st August 1954

4 - AUG 1954
MADRAS

Grams: PILONK Phone: 2424

PENMEN LIMITED

NO 1-A ANDERSON STREET, MADRAS-1.

Sole Distril utors to
THE PILOT FEN CO. (INDIA) LTD
For
* HYDERABAD,
* MYSORE,
* TRAVANCORE,
* COCHIN,
* COORG
STATIS & SCUTH INDIA




BUY
A BOTTLE
TO-DAY